

## வேளாண்மை - உழவர் நலத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
## 2025 - 2026

மானியக் கோரிக்கை எண். 5

**திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2025

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| முன்னுரை | | 1 |
| 1. | வேளாண்மை | 17 - 120 |
| 2. | தோட்டக்கலை-மலைப்பயிர்கள் | 121 - 181 |
| 3. | வேளாண்மைப் பொறியியல் | 182 - 223 |
| 4. | வேளாண்மை விற்பனை-வேளாண்வணிகம் | 224 - 304 |
| 5. | தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் | 305 - 337 |
| 6. | விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு | 338 - 365 |
| 7. | தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை | 366 - 377 |
| 8. | மானியக் கோரிக்கை | 378 - 383 |
| நிறைவுரை | | 384 - 387 |

# முன்னுரை

**"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை."**

எல்லாப் பற்றையும் விட்டுவிட்டதாகக் கூறும் துறவிகள்கூட உழவரின் கையை எதிர்பார்த்துதான் வாழ வேண்டும் என்று வள்ளுவம் கூறுவதிலிருந்து உழவுத்தொழிலின் பெருமையினையும் உழவர்களின் உன்னதத்தையும் அறிய முடியும்.

கவிச்சக்கரவத்தி கம்பர் பெருமான் அவர்கள் உலகிற்கே உணவளித்திடும் உழவுத்தொழிலின் பெருமையை ஏரெழுபது நூலில் பின்வருமாறு போற்றியுள்ளார்.

**"திருவடையும் திறலடையும் சீரடையும் செறிவடையும்
உருவடையும் உயர்வடையும் உலகெலா முயர்ந்தோங்கும்
தருஅடையும் கொடையாளர் தண்வயலிற் செஞ்சாலி
கருவடையிற் பூதலத்திற் கலியடைய மாட்டாதே"**

அதாவது, கற்பக மரத்தையொத்த கொடைத் தொழிலை மேற்கொண்ட உழவர்கள், குளிர்ந்த வயலிலே செந்நெற்பயிர் கருவை கொள்ளுமாயின், யாவர்க்கும் செல்வங்கள் தோன்றும்; வெற்றியடையும்; புகழும் உண்டாம்; தேக வலிமையும் உண்டாம், மேன்மையுண்டாம்; உலகத்து உயிர்களெல்லாம் மேன்மை பெற்று நிற்கும்; இப்பூமியில் இல்லையென்ற நிலை அடையமாட்டாது என்று உழவின் பெருமையை விவரித்துள்ளார்.

மனித வாழ்வின் முதன்மையான ஆதாரத் தொழிலான வேளாண்மை, நாட்டின் பொருளாதாரம், உணவுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் சமநிலை மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றது. புதிய வேளாண் தொழில்நுட்பங்கள், பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்கள், பருவமழை சார்ந்த வளமான நிலங்கள், பலவிதமான தட்பவெப்ப மண்டலங்கள் மற்றும் பன்முகப் பயிர் சாகுபடிகள் போன்ற பல அம்சங்களைக் கொண்டுள்ளதால்

**வேளாண்மையில் தமிழ்நாடு, இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.**

தமிழ்நாடு அரசு, உழவர் நலனைக் கருத்தில் கொண்டு வேளாண்மையில் விளைச்சலைப் பெருக்கி, விவசாயிகளின் வருமானத்தைப் பன்மடங்காக உயர்த்தி, உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட மண்வள மேம்பாடு, தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுதல், தரமான நல்விதை விநியோகம், புதிய வீரிய இரகங்களை ஊக்குவித்தல், மாற்றுப்பயிர் சாகுபடி, உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு, உயிர்ம வேளாண்மை, ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, ஒருங்கிணைந்த பண்ணையம், நுண்ணீர்ப் பாசனம், வேளாண் காடுகள், வேளாண் இயந்திரமயமாக்கல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் போன்ற பல சீரிய உத்திகளை அடிப்படையாக கொண்டு, பல்வேறு திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசின் பல்வேறு நடவடிக்கைகளால் உழவர் நலனில் ஏற்றமும், அவர்தம் வாழ்வில் மாற்றமும் ஏற்படுவதைக் காண முடிகிறது. வேளாண்மையில் நீடித்த நிலையான வளர்ச்சி பெறவும், உழவர்களின் வாழ்வை வளப்படுத்தவும் சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**வேளாண் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள்**

உழவர் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேட்டூர் அணையில் வழக்கமாக பாசன நீர் திறக்கப்படும் நாளான ஜீன் 12-ஆம் நாளன்று குறைவான அளவில் நீர் இருந்த போதிலும், 28.07.2024-அன்று குறுவை சாகுபடிக்காக பாசன நீரைத் திறந்துவிட்டார். மேலும், குறுவை சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக ரூபாய் 78 கோடியே 67 இலட்சம் மதிப்பீட்டில் **குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டமும்** அறிவிக்கப்பட்டது. மேலும், ஆறுகள், வாய்க்கால்கள், தூர்வாரப்பட்டு

பாசனவசதியும் மேம்படுத்தப்பட்டது. தமிழ்நாடு அரசின் சீரிய நடவடிக்கைகளினால் மூன்று இலட்சத்து 87 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, இரண்டு இலட்சத்து ஆறாயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளாக இதுவரை 17 இலக்குகள் வகுக்கப்பட்டு, 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளவில் நிலையான நல்ல மாற்றங்களை ஏற்படுத்திடும் வகையில் பல்வேறு திட்டங்கள் அனைத்துத் துறைகளிலும் வடிவமைக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

வேளாண்மைத் துறைக்கென வறுமை ஒழிப்பு, பட்டினி இல்லா நிலை, நலவாழ்வு, பொறுப்புமிக்க பயன்பாடும் உற்பத்தியும் போன்ற நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த இலக்குகளை அடையும் வகையில் துறை சார்ந்த திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

உழவின் சிறப்பினை "**தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது**" என்று "**கொன்றை வேந்தன்**" நூலில் "ஒருவரை வணங்கி வாழ்தலை விட, உழுது விளைவித்து வாழ்தல் இனிது என்றும், **உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு**" என்று **நல்வழி** நூலில், "உழவுப் பணியே சிறந்தது, பிற பணிகள் எல்லாம் பழுதுடையவை" என்றும் தமிழ்ப் புலவர் **ஔவையார்** அவர்களால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. உன்னதமான இவ்வேளாண் தொழிலை, பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளுக்கிடையிலும் மேற்கொண்டு, உலகோர்க்கு உணவளித்திடும் உழவர்களின் வாழ்வு வளம்பெறும் நோக்கத்துடன், பல்வேறு திட்டங்கள் நான்கு வேளாண் நிதிநிலை அறிக்கைகளிலும் அறிவிக்கப்பட்டு, செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதேபோல், ஐந்தாம் வேளாண் நிதிநிலை அறிக்கையிலும் பல உழவர் நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு விரைவில் செயல்படுத்தப்படவுள்ளன.

## வேளாண்மைத்துறை மற்றும் பிற துறைகளின் தோற்றம்

சென்னை மாகாணத்தில் ஆளுநர் சர் வில்லியம் டெனிசன் அவர்கள் 1863 ஆம் ஆண்டில் தமது குறிப்புக் குழுவிற்கு (Council of Note) வேளாண்மை தொடர்பான நடைமுறைக் குறிப்புகளைச் சமர்ப்பித்துள்ளார். அதன் மூலம் குழுவின் கவனத்திற்கு வேளாண்மை தொடர்பான நடைமுறைகள் கொண்டு செல்லப்பட்டு, வேளாண்மையில் தொடர் முன்னேற்றத்திற்கு உரிய நடவடிக்கைகளுக்கு வித்திடப்பட்டு, வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வேளாண்மைத் துறையானது, இந்திய பஞ்ச ஆணையம், 1880 ஆம் ஆண்டில் தெரிவித்த பரிந்துரைகளின் அடிப்படையில், 1882 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. அதன்பிறகு, வேளாண்மைத் துறையினை, வருவாய் தீர்வு, நில ஆவணங்கள் மற்றும் வேளாண்மை ஆணையரகப் பணியாக மறுவடிவமைத்து, பின்னர் தனிப்பிரிவாக, 1905 ஆம்

ஆண்டில், வேளாண்மைத் துறையாக தேவையான பணியாளர்களுடன் சீரமைக்கப்பட்டு வேளாண்மை இயக்குநரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

தலைமைச் செயலக அளவில் வேளாண்மைத் துறையின் பணிகள் வருவாய்த் துறையாலும், அதன் பின்னர் திட்டவளர்ச்சித் துறையாலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. பின்னர், வேளாண்மைத் துறையானது புதியதாக உருவாக்கப்பட்டு, அதன் வசம் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 1949-1951 ஆம் ஆண்டுகளில், வருவாய் வாரியத்தின் குடிமைப் பொருள் வழங்கல் ஆணையர் அவர்கள் உணவு உற்பத்தி ஆணையராக செயலாற்றியதோடு, தலைமைச் செயலக பொறுப்புகளையும், 1956 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து அவரே வகித்துள்ளார். பின்னரே, இப்பணிகள் அனைத்தும் வேளாண்மைத் துறையில் அரசு செயலாளருக்கு மாற்றி வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத்துறையானது 1977-1978 ஆம் ஆண்டில்

இருந்து தனித்துறையாக செயல்பட்டு வருகிறது. தோட்டக்கலை-மலைப் பயிர்கள் துறையானது 1979-1980 ஆம் ஆண்டில் இருந்து தனித்துறையாக செயல்பட்டு வருகிறது.  1979-1980 ஆம் ஆண்டில் இருந்து தனித்துறையாக செயல்பட்டு வந்த விதைச் சான்றளிப்பு - உயிர்மச் சான்றளிப்புத் துறையானது, 2022 ஆம் ஆண்டில் அதன் தலைமையிடத்தை கோயம்புத்தூரிலிருந்து சென்னைக்கு மாற்றம் செய்து கொண்டு செயல்பட்டு வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையானது 1980-1981 ஆம் ஆண்டில் இருந்து தனித்துறையாக செயல்பட்டு வருகிறது. 1876 ஆம் ஆண்டில் சென்னை சைதாப்பேட்டையில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட வேளாண் கல்லூரியானது 1971 ஆம் ஆண்டில் இருந்து கோயம்புத்தூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமாக செயல்பட்டு வருகிறது.

(**ஆதாரம்: வேளாண்மைத்துறை கையேடு**, 6 வது பதிப்பு (1990)


## தமிழ்நாட்டில் வேளாண்மை

தமிழ்நாடு, நில அமைப்பில் மித மற்றும் வறண்ட ஈரப்பத வெப்ப மண்டலத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. நமது மாநிலமானது அகில இந்திய அளவில் 1.3 இலட்சம் சதுர கி.மீ பரப்பளவு கொண்ட 11-வது பெரிய மாநிலமாகவும், 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 7.21 கோடி மக்கள் தொகை கொண்ட ஏழாவது மாநிலமாகவும் விளங்குகிறது. மேலும், அகில இந்திய அளவில் தமிழ்நாடு மாநிலமானது நான்கு சதவீத பரப்பளவினையும், ஆறு சதவீத மக்கள் தொகையினையும், மூன்று சதவீத நீர் ஆதாரங்களையும் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் 59.71 இலட்சம் எக்டர் பரப்பில் 79.38 இலட்சம் நில உடைமைதாரர்கள் பயிர் சாகுபடி செய்து வருகின்றனர். மொத்த நில உடைமைதாரர்களில் (இந்திய அரசின் 10-வது வேளாண்மை கணக்கெடுப்பின்படி) 93 சதவீதம்

பங்களிக்கும் குறு, சிறு உழவர்கள், 62 சதவீத நிலப்பரப்பிற்கும், ஏழு சதவீதம் பங்களிக்கும் நடுத்தர மற்றும் பெரு உழவர்கள் 38 சதவீத நிலப்பரப்பிற்கும், நில உடைமைதாரர்களாக உள்ளனர். தமிழ்நாட்டின் சராசரி நில உடைமைப் பரப்பானது 0.75 எக்டர் அளவில் (இந்திய சராசரி நில உடைமைப் பரப்பு - 1.08 எக்டர்) உள்ளது.

### படம்:1- தமிழ்நாட்டில் நிலப்பயன்பாடு -2023-24





ஆதாரம்: பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

### தமிழ்நாட்டின் சராசரி மழையளவு

தமிழ்நாட்டின் சராசரி மழையளவு 919.8 மி.மீ. ஆகும். 2023-24 ஆம் ஆண்டு பெறப்பட்ட மழையளவு 1,178 மி.மீ ஆகும்.

**படம்: 2 - 2023-24 ஆம் ஆண்டில் பருவம் வாரியாகப் பெறப்பட்ட மழையளவு**




**(ஆதாரம் : இந்திய வானிலைத்துறை)**

**பாசனநீர் ஆதாரம்**

மாநிலத்தின் பல்வேறு பாசன நீர் ஆதாரங்கள் மூலம் பயன்பெறும் 2023-24 ஆம் ஆண்டிற்கான நிகர பாசனப் பரப்பளவு விவரம் பின்வருமாறு.


**அட்டவணை: 1.1– நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப்பரப்பு - 2023-24**

| பாசன ஆதாரம் | எண்ணிக்கை (எண்கள்) | நிகர பாசனப் பரப்பு (இலட்சம் எக்டர்) | நிகர பாசனப் பரப்பு (%) |
|---|---|---|---|
| கால்வாய்கள் | 2,241 | 6.03 | 20.91 |
| ஏரிகள் | 41,123 | 4.00 | 13.87 |
| குழாய்க் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் | 3,74,060 | 5.72 | 19.83 |
| திறந்த வெளிக் கிணறுகள் | 14,68,532 | 13.04 | 45.21 |
| இதர பாசனம் | 46,482 | 0.05 | 0.18 |
| **மொத்தம்** | | **28.84** | **100.00** |

*ஆதாரம் :* **பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, *தமிழ்நாடு அரசு***

கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் சாகுபடி செய்யப்படும் பரப்பு 65 சதவீதமாகவும், கால்வாய்கள் மூலம் 21 சதவீதமாகவும் ஏரிகள் மூலம் 14 சதவீதமாகவும் உள்ளது.


## படம்: 3 – நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப் பரப்பு 2023-24




### பாசனநீர் ஆதாரங்களின் பயன்பாடு

கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளின் மூலம் பாசனம் பெற்ற பரப்பு 2022-23 ஆம் ஆண்டில் 18.38 இலட்சம் எக்டராக இருந்து, 2023-24 ஆம் ஆண்டில் 18.81 இலட்சம் (2.34 சதவீதம் அதிகரிப்பு) எக்டராக அதிகரித்துள்ளது.

**படம்: 4 – தமிழ்நாட்டிலுள்ள ஏழு வேளாண் தட்ப வெப்ப மண்டலங்கள்**




**ஆதாரம் : தமிழ்நாடு வேளான்மைப் பல்கலைக் கழக வேளாண் இணையதளம்**

# 1. வேளாண்மை

## 1.1. பயிர் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன்

2023-24 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவமழை குறைவு, மிக்ஜாம் புயலால் பயிர் பாதிப்பு மற்றும் வடகிழக்குப் பருவமழைக்காலத்தில் டிசம்பர் 2024-இல் நிகழ்ந்த அதிகனமழை போன்ற பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளுக்கிடையிலும், 109.51 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி அடையப்பட்டுள்ளது.

நடப்பு 2024-25 ஆம் ஆண்டில் பருவமழைக் காலங்களில் அதிகப்படியாகப் பெய்தமழை, ஃபெஞ்சல் புயலால் ஏற்பட்ட பயிர் பாதிப்பு மற்றும் பருவம் தவறிப் பெய்தமழை போன்ற பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளால், பயிர் சாகுபடியில் பாதிப்பு ஏற்பட்ட நிலையிலும், கடந்த ஆண்டை விட கூடுதலான உணவு தானிய உற்பத்தி அடையப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, 2025-26

ஆம் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தி இலக்காக 130.23 இலட்சம் மெட்ரிக் டன் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை: 1.2 – 2025-26 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**


| வ. எண் | பயிர்கள் | பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெ.டன்) | உற்பத்தித் திறன் (கிலோ/ எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | நெல் | 20.30 | 82.22 | 4050 |
| 2 | சிறுதானியங்கள் | 10.00 | 39.28 | 3928 |
| 3 | பயறுவகைகள் | 10.00 | 8.73 | 873 |
| **மொத்த உணவு தானியங்கள்** | | **40.30** | **130.23** | **3231** |
| 4 | எண்ணெய் வித்துக்கள் | 5.80 | 16.28 | 2800 |
| 5 | பருத்தி | 1.78 | 4.61* | 440** |
| 6 | கரும்பு | 1.75 | 231 | 132*** |
| | **மொத்தம்** | **49.63** | | |

*உற்பத்தி - இலட்சம் பொதிகள்: பொதி ஒன்றுக்கு *170* கிலோ

**உற்பத்தித்திறன் - பஞ்சு,

***உற்பத்தித்திறன் -மெட்ரிக் டன்/எக்டர்

**படம்: 5 – 2023-24 ஆம் ஆண்டில் உணவு தானியப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் விபரம்**




**ஆதாரம்: பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை**

**(2023-24 ஆம் ஆண்டின் இறுதி மதிப்பீட்டின்படி)**

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டங்கள்

### அ. தமிழ்நாட்டில் நிகர சாகுபடிப் பரப்பினை 60 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக உயர்த்துதல்

தமிழ்நாட்டில் நிகர சாகுபடிப் பரப்பினை உயர்த்தும் பொருட்டு, வேளாண்மை - உழவர்

நலத்துறையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியபோதிலும், 2023-24 ஆம் ஆண்டில் மிக்ஜாம் புயல், ஆலங்கட்டி மழை, வறட்சி, தென்மேற்குப் பருவமழை பற்றாக்குறை, பருவம் தவறிப் பெய்த கனமழை போன்ற பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளுக்கிடையிலும் 47.56 இலட்சம் எக்டராக நிகர சாகுபடிப் பரப்பு அடையப்பட்டுள்ளது. எனினும், சாகுபடிப் பரப்பினை அதிகரித்திட உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**ஆ. 10 இலட்சம் எக்டர் அளவுக்கு உள்ள இருபோக சாகுபடி நிலங்களை அடுத்த பத்தாண்டுகளுக்குள் இருமடங்காக, அதாவது, 20 இலட்சம் எக்டராக உயர்த்துதல்**

இருபோக சாகுபடிப் பரப்பினை அதிகரிக்க செயல்படுத்தப்பட்ட பல்வேறு நீர் மேலாண்மைத் திட்டங்களின் பலனாக, 2020-21 ஆம் ஆண்டில் 36.07 இலட்சம் எக்டராக இருந்த மொத்த நீர்ப்பாசனப் பரப்பானது 1.63 இலட்சம் எக்டர் அதிகரித்து, 2023-24

ஆம் ஆண்டில் 38.33 இலட்சம் எக்டரானதன் காரணமாக 2023-24 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் இருபோக சாகுபடிப் பரப்பானது 13.60 இலட்சம் எக்டராக உயர்ந்துள்ளது. இதனை மேலும் உயர்த்திட தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**இ. உணவுதானியங்கள், தென்னை, சூரியகாந்தி மற்றும் வணிகப் பயிர்களான கரும்பு, பருத்தி ஆகியவற்றின் வேளாண் உற்பத்தித்திறனில் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழ்நாட்டினை இடம்பெறச் செய்தல்.**

உணவு தானியப் பயிர்களின் உற்பத்தித்திறனைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு தேசிய அளவில், கேழ்வரகு உற்பத்தித் திறனில் முதலிடம், மக்காச்சோளம், எண்ணெய் வித்துக்கள், கரும்பு, தென்னை உற்பத்தித்திறனில் இரண்டாமிடம், குறுதானியங்கள், நிலக்கடலை உற்பத்தித்திறனில் மூன்றாம் இடம் எனத் தொடர்ந்து முதல் மூன்று இடங்களில் உற்பத்தித்திறனில் சிறந்து

விளங்கி வருகிறது. மேலும், தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித்திறனில் கொய்யாவில் முதலிடத்திலும், பெருநெல்லி, ஜாதிக்காய், கிராம்பு, புளி, கறிவேப்பிலை மற்றும் மல்லிகை ஆகிய பயிர்களில் இரண்டாம் இடத்திலும் கொக்கோ, சாமந்தி ஆகிய பயிர்களில் மூன்றாம் இடத்திலும் உள்ளது.

## 1.2 வேளாண்மைத் துறையின் முன்னிலைத் திட்டங்கள்:

### 1.2.1 முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள்

வேளாண் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்களின் படிப்பறிவு மற்றும் தொழில்நுட்பத் திறன் விவசாயிகளுக்கும் வேளாண் உற்பத்தி உயர்வுக்கும் பயன்படும் வகையில் முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள், உழவர்களுக்குத் தேவையான விதைகள், உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்களை விற்பனை செய்வதோடு, வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், பயிர்களில் ஏற்படும் பூச்சி, நோய் மேலாண்மைக்குத் தேவையான

ஆலோசனைகளையும் வழங்கும் வகையில் செயல்படுத்தப்படும்.

2025-26 ஆம் ஆண்டில் ரூபாய் 10 இலட்சம் முதல் 20 இலட்சம் வரையிலான மதிப்பீட்டில், வங்கிக் கடன் உதவியுடன் 1,000 உழவர் நல சேவை மையங்களைத் துவங்குவதற்கு 30 சதவீதம் மானியமாக ரூபாய் 3 இலட்சம் முதல் 6 இலட்சம் வரை மையம் ஒன்றிற்கு வழங்கப்படும். இத்திட்டம் ரூபாய் 42 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.2 பயிர் சாகுபடிப் பரப்பினை அதிகரித்து, உணவு தானிய உற்பத்தியினை உயர்த்திட சிறப்புத் தொகுப்புத் திட்டம்

### அ. டெல்டா அல்லாத இதர மாவட்டங்களில் கார் / குறுவை / சொர்ணவாரி நெல் சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் சராசரியாக 52 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் டெல்டா

மாவட்டங்களில் 18 இலட்சம் ஏக்கர் பரப்பளவிலும், இதர மாவட்டங்களில் 34 இலட்சம் ஏக்கரிலும் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

எனவே, கார் / குறுவை / சொர்ணவாரிப் பருவங்களில் நெல் சாகுபடிப் பரப்பினை அதிகரித்து, உணவு தானிய உற்பத்தியினை உயர்த்திட டெல்டா அல்லாத இதர 29 மாவட்டங்களில், நெல் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, நெல் இயந்திர நடவு மானியம், தரமான சான்று பெற்ற விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் அடங்கிய தொகுப்புகள், 2025-26 ஆம் ஆண்டில், **ரூ. 102 கோடி நிதி ஒதுக்கீட்டில்** வழங்கப்படும்.

## ஆ. டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கான குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம்

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருச்சி மற்றும் அரியலூர் ஆகிய காவேரி டெல்டா பகுதிகளில், நெற்பயிரே முதன்மையாக சாகுபடி செய்யப்படுகிறது. 2024ஆம்

ஆண்டில், 3.87 இலட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

குறுவைப்பருவத்தில், நெல் சாகுபடிப் பரப்பினை அதிகரித்து உணவு தானிய உற்பத்தியினை உயர்த்திட, டெல்டா மாவட்ட விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, நெல் இயந்திர நடவு மானியம், தரமான சான்று பெற்ற விதைகள், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரங்கள் அடங்கிய தொகுப்பு, 2025-26 ஆம் ஆண்டிலும், **ரூ.58 கோடி நிதி ஒதுக்கீட்டில்** குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.2.3 மானாவாரி நிலங்களில் கோடை உழவு செய்வதை ஊக்குவிக்கும் திட்டம்

மானாவாரி நிலங்களில் பயிர் சாகுபடியை ஊக்குவிக்க, மழைநீரை சேமிக்க, மண்ணின் வளத்தை மேம்படுத்த, களைகளைக் கட்டுப்படுத்த, ஒரு எக்டருக்கு 50 சதவீதம் மானியமாக ரூ. 2,000 வழங்கப்படும். 2025-26 ஆம் ஆண்டில் 3 இலட்சம்

ஏக்கருக்கு ரூ.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.2.4 மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம்

தமிழ்நாட்டில் 79,323 பழங்குடியினர் வேளாண் தொழிலில் ஈடுபட்டு, 75,360 எக்டர் பரப்பளவில் விவசாயம் செய்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் சிறு, குறு விவசாயிகளாக மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். மேலும், பழங்குடியின விவசாயிகள் பாரம்பரிய முறைகளில் வேளாண்மையை மேற்கொள்வதால், குறைந்த அளவே மகசூல் பெறுகின்றனர். எனவே, **பழங்குடியின விவசாயிகள் நீடித்த நிலையான வேளாண்மை செய்திட வழிவகை செய்யவும், நிகர வருமானத்தை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தனிநபர் வருமானத்தை உயர்த்தி அவர்களின் சமூக பொருளாதார நிலையினை ஏற்றமடைய செய்யவும்,** 2025-26 ஆம் ஆண்டில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை ஆகிய துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து, **மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம்** என்னும் புதிய திட்டம் ரூ.22.80 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.5 உழவரைத் தேடி வேளாண்மை - உழவர் நலத்துறை

வேளாண்மை – உழவர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் அனைத்துத் துறைகளின் வட்டார அலுவலர்கள், சார்புத்துறைகளான கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆகியோர் உழவர்களை அவர்களது வருவாய் கிராமங்களிலேயே நேரடியாகச் சந்தித்து, அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதோடு, வேளாண்மையினை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லும் பயிர் சார்ந்த தொழில்நுட்பங்களையும், வேளாண்மை - உழவர்

நலத்துறை மற்றும் சார்புத்துறைகளின் திட்டங்களையும் எடுத்துக்கூறி அவர்கள் பயன்பெறும் வகையில் மாதம் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் முகாம் நடத்தப்படும். சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் மொத்தமுள்ள 17,116 வருவாய் கிராமங்களிலும் ஓராண்டுக்குள் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இம்முகாம்களில் விவசாயம் சார்ந்த அனைத்து வகையான சேவைகளும் வழங்கப்படும். மேலும், வேளாண்மை, கால்நடை, மீன்வளப் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மூலம் பயிர் சாகுபடியில், கால்நடை வளர்ப்பில், மீன்வளர்ப்பில் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகளுக்கு உடனடித் தீர்வு காணப்படும்.

### 1.2.6 இயற்கை வேளாண்மைக்கான திட்டங்கள்

**அ. இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம்:**

இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் உழவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், **இயற்கை**

**வேளாண்மைக்கான தேசிய இயக்கம்** இரண்டாண்டுத் திட்டமாக ரூ.8.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2025-26 மற்றும் 2026-27 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இதற்கென, 2025-26 ஆம் நிதியாண்டில், ரூபாய் 5.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆ. இயற்கை மற்றும் உயிர்ம வேளாண்மை முறைகளில் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண் விளைபொருட்கள் எளிதில் நுகர்வோருக்குக் கிடைக்கச் செய்யும் வகையில், மாவட்டங்களில் உள்ள பூமாலை வணிக வளாகங்கள் உள்ளிட்ட அரசுத்துறைக் கட்டடங்களில் சந்தைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**இ. உயிர்ம வேளாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

உணவு தானிய உற்பத்தியினை அதிகரிக்கும் விதத்தில் இரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்து, அதனால் உணவுப்

பொருட்களில் நஞ்சும் அதிகரித்துள்ளது. நோயற்ற, ஆரோக்கியமான சமுதாயத்தை அமைத்திடவும், வருங்கால சந்ததியினருக்கு வளமான மண்ணையும், இயற்கையான சூழலையும் உருவாக்கிடவும், விவசாயிகளுக்கு உயிர்ம வேளாண்மை குறித்த விழிப்புணர்வு மற்றும் அதை சார்ந்த தொழில்நுட்பங்களைப் பரவலாக்கம் செய்திட அட்மா திட்டத்தின் கீழ் ரூ.1.48 கோடி நிதி ஒதுக்கீட்டில் 37 மாவட்டங்களில் உயிர்ம வேளாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

**ஈ. மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு உயிர்ம வேளாண்மை குறித்த உயிர்ம வேளாண் பண்ணைகளுக்கு சுற்றுலா ஏற்பாடு செய்தல்**

இன்றைய இளைய சமுதாயத்திற்கு உயிர்ம வேளாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. மேல்நிலைப்பள்ளி மற்றும்

கல்லூரி மாணவர்களை உயிர்ம வேளாண்மைப் பண்ணைகள், போன்ற இடங்களுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வதனால் உயிர்ம வேளாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதுடன், தங்கள் பகுதிகளில் உயிர்ம வேளாண்மையினை ஊக்குவித்து, விவசாயத்தை இலாபகரமாக எடுத்து செல்ல வழிவகுக்கும். எனவே, தமிழ்நாட்டில் உள்ள 386 வட்டாரங்களில் உள்ள மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு அட்மா திட்டத்தின் கீழ் ரூ.1.93 கோடி நிதி ஒதுக்கீட்டில் உயிர்ம வேளாண்மை குறித்த கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் 386 வட்டாரங்களில் உள்ள 38,600 மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பயனடைவர்.

**1.2.7 உழவர்களை வியட்நாம், ஜப்பான் மற்றும் சீனாவிற்கு கண்டுணர் சுற்றுலா அழைத்துச் செல்லுதல்**

நமது மாநிலத்தில் நெற்பயிரின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு, அதிக உற்பத்தித்திறனில் சாதனை அடைந்துள்ள ஜப்பான், சீனா, வியட்நாம் போன்ற நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் உயரிய தொழில்நுட்பங்களை அறிந்து, அதனைத் தமிழ்நாட்டில் செயல்படுத்திடும் விதமாக, நெல் சாகுபடி மேற்கொண்டுள்ள 100 முன்னோடி விவசாயிகள் ஜப்பான், சீனா, வியட்நாம் நாடுகளுக்குக் கண்டுணர் சுற்றுலாவிற்கு ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் அழைத்துச் செல்லப்படுவர்.

**1.2.8 தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் தரமான சான்று விதைகள், இடுபொருட்கள் விநியோகம்.**

2025-26 ஆம் ஆண்டில், முதல் முறையாக நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள்,

எண்ணெய்வித்து இரகங்களின் தரமான சான்று விதைகளும், இதர முக்கிய வேளாண் இடுபொருட்களும் விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

### 1.2.9 முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் (CM MK MKS)

மண் வளத்தை அதிகரித்து, மக்களுக்கு நஞ்சில்லா உணவு வழங்கிடும் பொருட்டு, உயிர்ம வேளாண்மை போன்ற அனைத்து வேளாண் செய்முறைகளைக் கடைப்பிடிக்க விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில், "**முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்**" என்ற புதிய திட்டம், 2024-25 ஆம் ஆண்டில் ரூ. 206 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்திட அறிவிப்பு செய்யப்பட்டு, 22 திட்டக் கூறுகளுடன் செயல்படுத்தப்பட்டது.

2 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.20 கோடி நிதியில் பசுந்தாள் உர விதைகள் விநியோகம், ரூ.11 கோடி நிதியில் 23,000 மண்புழு உரப்படுக்கைகள் விநியோகம் மற்றும் 512 நிரந்தர மண்புழு உர உற்பத்திக் கூடங்கள் அமைக்கப்பட்டு 13,050 விவசாயிகள் பயனடைந்தனர். 3,54,280 விவசாயிகளுக்கு ரூ.12 கோடி நிதியில் மண்வள அட்டைகள், 49,548 விவசாயிகளின் களர் மற்றும் அமில நிலங்களை ரூ.13.12 கோடி நிதியில் சீர்படுத்துதல், 3,10,000 விவசாயிகளுக்கு ரூ.5 கோடி நிதியில் திரவ உயிர் உரங்கள் விநியோகம், 10,132 விவசாயிகளுக்கு ரூ.2 கோடி நிதியில் வேப்ப மரக்கன்றுகள் விநியோகம், 1 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.1 கோடி நிதியில் ஆடாதொடா, நொச்சி செடிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

மேலும், 16,154 விவசாயிகளுக்கு ரூ.50 இலட்சம் நிதியில் நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் பாரம்பரிய நெல்

விதைகள் விநியோகம், 28,468 விவசாயிகளுக்கு ரூ.27 கோடி நிதியில் 725 உயிர்ம வேளாண் தொகுப்புகளின் தொடர் பணிகளுக்கு மானியம், 1,655 விவசாயிகளின் 100 குழுக்களுக்கு ரூ.1 கோடி நிதியில் இயற்கை இடுபொருள் தயாரித்தல் மையம் அமைப்பு, 14,000 விவசாயிகளுக்கு ரூ.42.34 கோடி நிதியில் ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள் அமைப்பு, ரூ.13.33 கோடி நிதியில் சிறிய, பெரிய உயர் தொழில்நுட்ப மரக்கன்று நாற்றங்கால்கள் அமைத்தல், 8.88 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.4 கோடி நிதியில் ஊட்டச்சத்துமிக்க பழச்செடிகள் விநியோகம், 17,500 விவசாயிகளுக்கு வயல் சூழல் ஆய்வுத் திடல் மூலம் செயல்விளக்கம் மற்றும் பயிற்சி, 407 விவசாயிகளுக்கு பாரம்பரிய சிறுதானியங்கள், பயறுவகை இரகங்களின் விதைகள் விநியோகம், 1,285 விவசாயிகளுக்கு சிவன் சம்பா போன்ற மரபுசார் நெல் இரக விதைகள் விநியோகம் ஆகிய திட்டக்கூறுகளின் மூலம் 21.36 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

உழவர்களிடையே "முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்" மிகுந்த வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்து, 2025-26 **ஆம் நிதி ஆண்டிலும் இத்திட்டம் ரூ.142 கோடி நிதி ஒதுக்கீட்டில்** பின்வரும் 15 திட்டக்கூறுகளுடன் செயல்படுத்தப் படவுள்ளது.

i) மண் வளத்தை அதிகரிக்கும் நோக்கத்தில், பசுந்தாள் உர விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட ரூ. 20 கோடி நிதி ஒதுக்கீடு.

ii) இரசாயன உரப்பயன்பாட்டைக் குறைத்து மண் வளத்தை அதிகரிக்க 4 இலட்சம் விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்குதல், 1,150 ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை செயல் விளக்கங்கள் மற்றும் 385 விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கிட மொத்தம் ரூ. 12.96 கோடி நிதி ஒதுக்கீடு.

iii) பயிர் சாகுபடியுடன் கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் போன்ற வேளாண் சார்ந்த பணிகளை மேற்கொண்டு விவசாயிகள் ஆண்டு முழுவதும் நிலையான வருமானம் பெறும் பொருட்டு 18,440 ஒருங்கிணைந்த பண்ணையத் தொகுப்புகள் அமைத்திட ரூ. 56.40 கோடி நிதி ஒதுக்கீடு.

iv) தரமான மரக்கன்றுகளை உற்பத்தி செய்யவும் சிறிய, பெரிய மற்றும் உயர் தொழில்நுட்ப நாற்றங்கால்கள் அமைத்திடவும் ரூ. 10.31 கோடி நிதி ஒதுக்கீடு.

v) உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்க, 2023-24 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட 725 உயிர்ம வேளாண்மை தொகுப்புகளின் மூன்றாம் ஆண்டிற்கான தொடர் பணிகளை மேற்கொள்ள பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 25.93 கோடி நிதி ஒதுக்கீடு.

vi) அ) 20,000 மண்புழு உரப்படுக்கைகள் வழங்கிட ரூ. 6 கோடி நிதி ஒதுக்கீடு.

ஆ) 500 நிரந்தர மண்புழு உர உற்பத்தி கூடங்கள் அமைத்திட ரூ. 2.50 கோடி நிதி ஒதுக்கீடு.

vii) இயற்கை இடுபொருள் தயாரித்தல் மையம் அமைத்திட 100 விவசாயக் குழுக்களுக்கு ரூ.1கோடி நிதி ஒதுக்கீடு.

viii) உயிர்ம வேளாண்மைக்கான 500 மாதிரிப் பண்ணைகளை உருவாக்கிட ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

ix) 10 இலட்சம் வேப்ப மரக்கன்றுகள் விநியோகம் செய்திட ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு.

x) 10 இலட்சம் ஆடாதொடா மற்றும் நொச்சி நடவுக் கன்றுகள் விநியோகம் செய்திட ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு.

xi) சிவன் சம்பா, மாப்பிள்ளைச் சம்பா, கருப்புக்கவுனி, கருங்குறுவை ஆகிய மருத்துவ குணம் கொண்ட பாரம்பரிய மரபுசார் நெல் இரகங்கள் 7,500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்திட ரூ. 67.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

xii) நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் 250 மெட்ரிக் டன் விதை உற்பத்தி செய்து விநியோகம் செய்திட ரூ. 87.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

xiii) 5 மெட்ரிக் டன் பாரம்பரிய சிறுதானியங்கள் மற்றும் பயறு வகை இரகங்களின் விதைகள் விநியோகம் செய்திட ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

xiv) விவசாயிகள் தங்கள் வயல் பிரச்சினைகளைத் தாங்களாகவே தீர்க்கவும், சிறந்த வேளாண் நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வு பெறவும், விவசாயிகளின் திறனை மேம்படுத்திடவும் 386 வட்டாரங்களில் வயல்வெளிப் பள்ளிகள் நடத்திடும் பொருட்டு ரூ.1.14 கோடி நிதி ஒதுக்கீடு.

xv) பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, முன்கூட்டியே கட்டுப்படுத்துவது குறித்த

விழிப்புணர்வை உருவாக்கும் பொருட்டு ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு, பூச்சி நோய் விழிப்புணர்வு வழிகாட்டிகள் வழங்கிட ரூ.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

**1.2.10 கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்**

"கிராமங்களின் மேம்பாடே நாட்டின் மேம்பாடு" என்பதை மையமாகக் கொண்டு கிராமங்களில் வேளாண் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2021-22 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படும் "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" செயல்படுத்தத் தேர்வு செய்யப்படும் கிராம ஊராட்சிகளில் ஒருங்கிணைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளில் தரிசு நிலத் தொகுப்புகள் உருவாக்கி, அத்தொகுப்புகளில் நீர் ஆதாரங்களை ஏற்படுத்தி, மின் அல்லது சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பொருத்தி, நுண்ணீர்ப் பாசனம் அமைத்து, பழ/மரக்கன்றுகளை நிரந்தரப் பயிர்களாக நடவு செய்து, குறுகிய கால வேளாண் பயிர்களையும் சாகுபடி செய்திடச் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.**

கடந்த 2024-25 ஆம் ஆண்டில் ரூ. 124.28 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டு 6.54 இலட்சம் உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

**இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டில் 2,338 கிராம ஊராட்சிகளில் ரூ.269.509 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு, 9.36 இலட்சம் விவசாயிகள் பயனடைவர்.**

### 1.2.11 ஒரு கிராமம் ஒரு பயிர் திட்டம் – செயல்விளக்கம்

2024-25 ஆம் ஆண்டில் "ஒரு கிராமம் ஒரு பயிர்" என்ற திட்டத்தின் கீழ் 15,280 வருவாய் கிராமங்களில் 5 முதல் 10 ஏக்கர் பரப்பளவில் ஒரு கிராமத்திற்கு ஒரு பயிர் என்று தேர்வு செய்து, நிலம் தயாரித்தல், அதிக மகசூல் தரக்கூடிய இரகங்களைப் பயன்படுத்துதல், விதை நேர்த்தி, விதைப்பு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் பிற வேளாண் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் 1.40 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் செயல்விளக்கம் அமைக்கப்பட்டு 63,778 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், நன்மை மற்றும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை வேறுபடுத்துவதற்காக, "நிரந்தர பூச்சிக் கண்காணிப்புத் திடல்கள்" வயல்களில் அமைக்கப்பட்டு, பயனுள்ள பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் விவசாயிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டன.

இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.2.12 தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்**

தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் 2023-24-ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுத் திட்டமாக, 25 மாவட்டங்களை உள்ளடக்கிய 2 சிறுதானிய சிறப்பு மண்டலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில், ரூ. 46 கோடி நிதி செலவினத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதன் பலனாக, 4.15 இலட்சம் உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

**2025-26 ஆம் ஆண்டில், ரூ.52.44 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**1.2.13 மாநில வேளாண் வளர்ச்சி திட்டம்**

**1.2.13.1. மாற்றுப்பயிர் சாகுபடி:**

நீர் சேமிப்பைப் பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தி, கூடுதல் மகசூல் பெற, நெற் பயிருக்கு மாற்றாக, குறைந்த நீர்த்தேவையுள்ள பயிர்களான சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துகளின் சாகுபடியை ஊக்குவிக்கும் விதமாக 2024-25-ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பில், ரூபாய் 12.00 கோடி நிதி செலவினத்தில் மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் 75,790 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

**2025-26 ஆம் ஆண்டிலும் 1 இலட்சம் ஏக்கர் பரப்பில், ரூபாய் 12.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**1.2.13.2. நம்மாழ்வார் விருது**

உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கி இதர விவசாயிகளை உயிர்ம வேளாண்மையில்

ஈடுபடச் செய்யும் விவசாயிகளைக் கௌரவிப்பதற்காக, 2024-25 ஆம் ஆண்டில் 3 விவசாயிகளுக்கு ரூ.5.22 இலட்சம் செலவினத்தில் நம்மாழ்வார் விருது வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் **2025-26 ஆம் ஆண்டில் ரூ.6.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

### 1.2.14 ஆதி திராவிடர், பழங்குடியின சிறு, குறு உழவர்களுக்கு உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில் கூடுதல் மானியம் வழங்குதல்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள் உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில் பயன்பெறும்போது விவசாயிகளின் பங்களிப்புத் தொகையினைச் செலுத்துவதில் ஏற்படும் பொருளாதாரச் சுமையைக் குறைத்து, அவர்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் விதமாக நடைமுறையில் உள்ள 40 முதல் 50 சதவீத

மானியத்திற்குப் பதிலாக **60 முதல் 70 சதவீத** மானியம் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம், 2024-25 ஆம் ஆண்டில் ரூ.34.68 கோடி செலவில் 2,375 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டம், **நடப்பு 2025-26 ஆம் ஆண்டில் ரூ. 21 கோடி மாநில நிதியில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**1.2.15 மின்னணு வேளாண்மை**

வேளாண்மையில் மின்னணு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயிகளுக்கான வேளாண் தொழில்நுட்பங்கள், இடுபொருட்கள் இருப்பு விவரம், சந்தை நிலவரம், வானிலை முன்னறிவிப்பு, நீர் நிலவரம் மற்றும் அரசு மானியத் திட்டங்கள் விவரம் போன்றவற்றைத் துரிதமாகக் கொண்டு செல்வதற்கு ஏதுவாக, 24 முக்கிய சேவைகளுடன் **"உழவர்"** என்ற **கைபேசி செயலி** உருவாக்கப்பட்டு, விவசாயிகளால்

பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 18.66 இலட்சம் விவசாயிகள் உழவர் செயலியைப் பதிவிறக்கம் செய்து பயனடைந்துள்ளனர். வேளாண்மைத் துறை மற்றும் இதர அரசுத் துறைகள் மூலம் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பயன்களைத் துரிதமாகப் பெற, **கிரைன்ஸ்** (GRAINS - **Grower Online Registration of Agriculture Inputs System)** என்ற இணைய முகப்பு, ஒருங்கிணைந்த விவசாயிகளின் தரவுத்தளத்தை உருவாக்குதல், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களுக்கும் புவியிடக் குறியீடு வழங்குதல், மின்னணு பயிர் சாகுபடிக் கணக்கீடு செய்தல் ஆகிய மூன்று காரணிகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் நில உடைமை விவரம், பயிர் சாகுபடி போன்றவை ஒரு சேர இருப்பதால் அவர்களுக்குத் தேவையான அனைத்து சேவைகளையும் மின்னணு முறையில் எளிதில் பெற வழிவகுக்கும்.

தமிழ்நாடு முழுவதும் கிரைன்ஸ் திட்டம் மூலம் ஒருங்கிணைந்த விவசாயிகளின் தரவுத்தளத்தை உருவாக்க மின்னணு முறையில், விவசாயிகளின் தரவுகள் சேகரிக்க, அனைத்து விவசாயிகளுக்கும் ஆதார் எண் போன்ற தனித்துவமான “**அடையாள எண்**” வழங்கப்படுகிறது.

இந்த தனித்துவ அடையாள எண்ணை எளிதில் விவசாயிகள் பெற ஏதுவாக, கிராம அளவிலான முகாம் மற்றும் பொது சேவை மையங்களில் இலவசமாகப் பதிவு செய்திட வசதி ஏற்படுத்தப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 1.2.16 கிராம அளவிலான வேளாண் முன்னேற்றக் குழு

2024-25 ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட 2,482 கிராம ஊராட்சிகளில் 2,482 கிராம வேளாண் முன்னேற்றக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ரூ.2.48 கோடி செலவில் வேளாண்மை சார்ந்த நவீன தொழில்நுட்பங்கள்

தொடர்பான 4,964 பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதனால் 99,280 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கோடை உழவு முதல் வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்துதல் வரையிலான அனைத்து தொழில்நுட்பங்களிலும் பயிற்சி அளித்து, நிலையான வருமானம் பெற்று முன்னேறிய கிராமமாக மாறுவதற்கான இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டிலும், 2,338 கிராம ஊராட்சிகளில் ரூ.2.33 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.3. பயிர் சாகுபடி விவரம்

#### 1.3.1. நெல்

தமிழ்நாட்டில் விளைவிக்கப்படும் உணவு தானியங்களில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில், நெல்லின்/அரிசியின் பங்கு மிக முக்கியமானதாகும். நெற்பயிரானது, கார்/ குறுவை/ சொர்ணவாரி, சம்பா/ தாளடி/ பிசானம் மற்றும் நவரை/

கோடை ஆகிய மூன்று பருவங்களில் சாகுபடி செய்யப்படுகிறது.

2024-25 ஆம் ஆண்டில், 20.20 இலட்சம் எக்டர் பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளவும், 80.81 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி எய்திடவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில், மிகச்சன்ன இரக நெல் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, மிகச்சன்ன இரக நெல் 6.40 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மாநில மற்றும் ஒன்றிய அரசுத் திட்டங்கள் வாயிலாக உயர் விளைச்சல் நெல் இரகங்களைப் பயன்படுத்துதல், திருந்திய நெல் சாகுபடி (SRI) முறை, இயந்திர நடவு முறை, நேரடி நெல் விதைப்பு போன்ற தொழில்நுட்பங்கள் நெல் உற்பத்தியை அதிகரிக்க கடைபிடிக்கப்படுகின்றன.

### அ) தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் - நெல்

### (Rashtriya Krishi Vikas Yojana- Paddy)

நெற்பயிரின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் - நெல், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை 2024-25 ஆம் ஆண்டில், சான்றளிக்கப்பட்ட நெல் இரகங்களின் விதை உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கு ரூ.6.63 கோடி நிதி செலவினத்தில் செயல்படுத்தியதன் மூலம் 22,358 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

**2025-26 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் ரூ. 20 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

### ஆ) உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு - அரிசி

**(Food and Nutrition Security - Rice)**

நெல் உற்பத்தித் திறனை உயர்த்துதல், மண்ணின் வளத்தை மேம்படுத்துதல், சாகுபடிப் பரப்பினை அதிகரித்தல் போன்ற செயல் திட்டங்களுடன், புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை, கடலூர் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு – அரிசி, திட்டமானது செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை, 2024-25 ஆம் ஆண்டில், நேரடி நெல் விதைப்பு செயல்விளக்கங்கள், இயற்கை இடர்ப்பாடுகளைத் தாங்கும் இரகங்களின் செயல்விளக்கங்கள், நெல்-பயறு சாகுபடி முறை சார்ந்த செயல்விளக்கங்கள், அதிக மகசூல் தரும் நெல் இரகங்களின் விதைகள், நெல் நுண்ணூட்டச்சத்துக் கலவை, திரவ உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், பசுந்தாள் உர விதைகள்,

அசாடிராக்டின் விநியோகம் போன்ற இனங்களுடன் ரூ. 4.75 கோடி நிதி செலவினத்தில் செயல்படுத்தியதன் மூலம் 34,194 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

**2025-26 ஆம் ஆண்டிலும், இத்திட்டம் ரூ.8.04 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

### 1.3.2 சிறுதானியங்கள்

தமிழ்நாட்டில் மக்காச்சோளம், ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்களான சோளம், கம்பு, கேழ்வரகு மற்றும் குறுதானியங்களான தினை, சாமை, வரகு, குதிரைவாலி ஆகியவற்றின் தேவை அதிகரித்து வருகிறது. சிறுதானியங்கள் சராசரியாக, 9.54 இலட்சம் எக்டர் பரப்பில் காரீப் மற்றும் இராபி பருவங்களில் சாகுபடி செய்யப்பட்டு, 35.68 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில், 9.95 இலட்சம் எக்டர் சாகுபடிப் பரப்பில் 39.09 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி

சாதனையை அடைய சிறுதானியங்களுக்கென திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஊட்டச்சத்துமிக்க சிறுதானியங்கள் மற்றும் குறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**அ) உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு திட்டம்**

**ஊட்டச்சத்துமிக்க சிறுதானியங்கள்**

ஊட்டச்சத்துமிக்க சிறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்தில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, மதுரை, திருப்பூர், திண்டுக்கல், விருதுநகர், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 15 மாவட்டங்களில், 2024-25 ஆம் ஆண்டில், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டத்தில் இதுவரை ரூ. 28 கோடி

நிதி செலவினத்தில் 3,75,711 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டில் ரூ.34.48 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**ஆ) மக்காச்சோள மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாட்டில் சராசரியாக மக்காச்சோளப் பயிர் 10.13 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 28 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மக்காச்சோள உற்பத்தித்திறனில் இந்தியாவிலேயே இரண்டாம் இடத்தில் உள்ள தமிழ்நாட்டில், மக்காச்சோளம் உணவு, எரிபொருள் மற்றும் தீவனத் தொழிற்சாலைகளில் முக்கிய மூலப்பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் மக்காச்சோளத்தின் தேவை தமிழ்நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வருவதன் காரணமாக, சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும்

நோக்கத்தில், பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**i) உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புத் திட்டம் - மக்காச்சோளம்**

2024-25 ஆம் ஆண்டில் கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு, பெரம்பலூர், கடலூர், திருப்பூர், திண்டுக்கல், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 9 மாவட்டங்களில், இதுவரை ரூ. 1.52 கோடி நிதி செலவினத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 12,178 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

**இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டில், ரூ. 2.26 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**ii) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் - மக்காச்சோளம்**

மக்காச்சோள சாகுபடிப் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்தில் தருமபுரி, மதுரை, திருச்சி, தென்காசி, அரியலூர்,

விழுப்புரம், தேனி, திருநெல்வேலி, கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு, நாமக்கல், பெரம்பலூர், கடலூர், திருப்பூர், திண்டுக்கல், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 18 மாவட்டங்களில் 2024-25 ஆம் ஆண்டில், இதுவரை ரூ. 29.91 கோடி நிதி செலவினத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 49,850 உழவர்கள் பயனடைந்துள்ளனர்

**இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டில், 35 மாவட்டங்களில் (சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி நீங்கலாக) ரூபாய் 38.01 கோடி நிதி ஒதுக்கீட்டில்** தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.3.3. பயறுவகைப் பயிர்கள்

"**செவ்வூன் தோன்றா வெண்துவை முதிரை**"

**(பதிற்றுப்பத்து-55, காக்கை பாடினியார்)**

பதிற்றுப்பத்தில் இடம் பெற்றுள்ள இப்பாடல், சங்க காலம் தொட்டு தமிழ்நாட்டு மக்களின் உணவில்

பருப்பு வகைகளை ("முதிரை") சேர்த்துக்கொள்ளும் வழக்கம் இருந்து வருவதைக் காட்டுகிறது.

மக்களின் உடல்நலன் மற்றும் ஊட்டச்சத்திற்குத் தேவையான புரதம், அத்தியாவசிய வைட்டமின்கள் மற்றும் தாதுக்களின் ஆதாரமாகவும் பயறுவகைப் பயிர்கள் உள்ளன. அத்துடன், உயிரியல் முறையில் தழைச்சத்தினை நிலைநிறுத்துவதன் மூலம் மண் வளத்தை மேம்படுத்தி, நீடித்த நிலையான வேளாண்மையிலும் பயறுவகைகள் முக்கியப் பங்காற்றுகின்றன.

பயறுவகைப் பயிர்களின் சராசரி பரப்பளவு 7.87 இலட்சம் எக்டர், சராசரி உற்பத்தி 4.93 இலட்சம் மெட்ரிக் டன், சராசரி உற்பத்தித்திறன் எக்டருக்கு 626 கிலோ என்ற அளவில் உள்ளன.

துவரை, உளுந்து, பாசிப்பயறு, கொள்ளு, தட்டைப்பயறு முதலிய பயறுவகைப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு 2024-25 ஆம் ஆண்டில் "உணவு மற்றும் ஊட்டச்சத்து

பாதுகாப்புத் திட்டம் – பயறுவகைகள்” மற்றும் “நெல் தரிசில் பயறு சாகுபடி திட்டம்” ஆகிய திட்டங்கள், இதுவரை முறையே ரூ.25.20 கோடி மற்றும் ரூ. 2.21 கோடி நிதி செலவினத்தில் செயல்படுத்தப்பட்டு 2,24,500 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

**இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டில், ரூ. 41.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

2024-25 ஆம் ஆண்டில் நடவுத் துவரை சாகுபடியை ஊக்குவிக்க, ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2,222 எக்டர் பரப்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் நடவுத் துவரை திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2025-26 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் ரூ. 10 கோடி நிதி ஒதுக்கீட்டில் 12,900 எக்டர் பரப்பில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2024-25 ஆம் ஆண்டில் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் துவரை உள்ளிட்ட பிற பயறு வகைகளின் பரப்பு மற்றும் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டத்தின் வழியாக ரூ. 7.44 கோடி செலவில் 24,000 ஏக்கர் பரப்பில் நடவுத் துவரை சாகுபடியும் ரூ.1.50 கோடி செலவில் 6,000 ஏக்கர் பரப்பில் பிற பயறுவகைகள் சாகுபடியும் ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

2024-25 ஆம் ஆண்டில் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் துவரை பரப்பு விரிவாக்க இயக்கத்தில் துவரையை தனிப்பயிர், ஊடுபயிர் மற்றும் வரப்புப் பயிராகப் பயிரிடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, 70,000 ஏக்கர் பரப்பில் ரூ.17.50 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு 64,755 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டில், ரூ.20 கோடி நிதி ஒதுக்கீட்டில், 80,000 ஏக்கர் பரப்பில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

### 1.3.4. எண்ணெய்வித்துப் பயிர்கள்

உணவு எண்ணெய்த் தேவையில் தன்னிறைவு அடைய எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியினைப் பெருக்க வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் தொலைநோக்குப் பார்வையின்படி நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி போன்ற பிரதான எண்ணெய்வித்துப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரிக்க சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துப் பயிர்கள் சராசரியாக 4.85 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 10.12 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகின்றது.

2024-25 ஆம் ஆண்டில் எண்ணெய்வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு, சோயாபீன்ஸ் ஆகியவற்றின் பரப்பு மற்றும் உற்பத்தித்திறனை உயர்த்த "**தேசிய சமையல் எண்ணெய் இயக்கம்**" திட்டத்தின் கீழ் இதுவரை

ரூ.38.77 கோடி நிதி செலவினத்திலும், நெல் தரிசில் எண்ணெய்வித்துப் பயிர்களின் சாகுபடியை மேம்படுத்த ரூ.0.475 கோடி நிதி செலவினத்திலும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு 87,263 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும் 2025-26 ஆம் ஆண்டில் நிலக்கடலை, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு அதிகம் விளையும் 24 மாவட்டங்களை ஒருங்கிணைத்து, தொகுப்பு முறையில் சாகுபடி செய்திடும் பொருட்டு, உயர்விளைச்சல் தரும் புதிய இரகங்கள், **தொகுப்பு செயல்விளக்கத் திடல் அமைத்தல்**, இடுபொருட்கள் விநியோகம், தேனீ வளர்ப்பு, அறுவடைசார் இயந்திரங்கள், நெல் தவிடு எண்ணெய் பிழியும் அலகுகள் அமைத்தல், மரவகை எண்ணெய்வித்துப் பயிர்களுக்கான பராமரிப்பு மற்றும் ஊடுபயிர் சாகுபடி போன்றவற்றிற்கு **ரூ.108.06 கோடி நிதி ஒதுக்கீட்டில் "தேசிய சமையல் எண்ணெய் இயக்கம்", 2,16,625 ஏக்கரில் செயல்படுத்தப்படும்.**

### 1.3.5. பருத்தி

நாட்டின் மொத்த தொழில்துறை உற்பத்தியில், உள்நாட்டு ஜவுளி மற்றும் ஆடைத் தொழில் 13 சதவீத அளவிற்கு பங்களிக்கிறது. இதன் முதன்மையான மூலப்பொருள் பருத்தியாகும். தேசிய அளவில் உள்ள பருத்தி நூற்பாலைகளில் 55 சதவீத நூற்பாலைகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. இவ்வாலைகள் இயங்குவதற்கு ஆண்டுக்கு 120 இலட்சம் பேல்கள் பருத்தி தேவைப்படுகிறது. இதில் 95 சதவீத பருத்தியானது குஜராத், மகாராஷ்டிரா, தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து பெறப்படுகிறது. தமிழ்நாட்டில் விவசாயிகள் பருத்தி சாகுபடியிலிருந்து பிற பயிர்கள் சாகுபடிக்கு மாறி வருவதும், நூற்பாலைகளுக்கு பெரும் சவாலாக உள்ளது. எனவே, பருத்தி உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலமே பருத்தி உற்பத்தியினை மேம்படுத்த இயலும்.

இதன் அடிப்படையில் பருத்தி உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு 2024-25 ஆம் ஆண்டில் பலன்தரும் பருத்தி சாகுபடித் திட்டமானது ரூ.11.00 கோடி நிதி செலவினத்தில் 48,025 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் ரூ. 12.21 கோடி நிதி ஒதுக்கீட்டில் 48,500 எக்டர் பரப்பளவில் 29 மாவட்டங்களில் 2025-26 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

## 1.4. வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் இதர திட்டங்கள்

### 1.4.1. தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)

பயிர்களின் மகசூலை அதிகரிக்க விதையே முக்கிய ஆதாரம் ஆகும். கூடுதல் வருமானம் பெறுவதற்கு விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்வது அவசியமாகும். தமிழ்நாட்டில் அரசு விதை விநியோகச்

சங்கிலியை வலுப்படுத்தும் நோக்கத்துடன் 2015-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா) துவங்கப்பட்டது.

விதை மாற்று விகிதத்தின் அடிப்படையில் பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து ஒவ்வொரு பயிரின் வல்லுநர் விதைகள் பெறப்பட்டு, ஆதார விதைகளாகவும், சான்றளிக்கப்பட்ட விதைகளாகவும் மாநில விதைப் பண்ணைகள் மற்றும் முன்னோடி விவசாயிகளின் நிலங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற, அதிக விளைச்சல் தரும் இரகங்கள் தேர்வு செய்யப்பட்டு விதைப்பெருக்கம் செய்யப்பட்டு, உற்பத்தி செய்து உழவர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் வேளாண் பயிர்களின் ஆதார நிலை மற்றும் சான்று நிலை விதை உற்பத்தி டான்சிடா மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விவசாயிகளின் ஆதார விதைத் தேவையை நிறைவு செய்யும் வகையில் 33 மாநில அரசு விதைப்பண்ணைகள், 1 மாநில பயறு பெருக்கப் பண்ணை, 6 மாநில எண்ணெய்வித்துப் பண்ணைகள் இயங்கி வருகின்றன.

சான்று நிலை விதைப்பண்ணைகள், விதை சான்றளிப்புத் துறையில் பதிவு செய்யப்பட்டு உரிய வழிமுறைகளைப் பின்பற்றி ஆதார நிலை மற்றும் சான்று நிலை விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட விதைகள், 108 விதை சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்படுகின்றன.

2025-26 ஆம் ஆண்டில், **7 புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.15.05 கோடி மதிப்பீட்டில் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.** மேலும், விதை சுத்திகரிப்பினைத் துரிதப்படுத்திடவும், தரமான விதைகள் உரிய காலத்தே விவசாயிகளுக்கு கிடைப்பதினை உறுதி செய்திடவும், **3000 மெட்ரிக்**

**டன் விதைகளை உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனங்கள் மூலம் விதை சுத்திகரிப்பு செய்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.**

மேலும், சுத்திகரிக்கப்பட்ட விதைகள், விதை முளைப்புத்திறன், ஈரப்பதம், பிற இரகக்கலப்பு, இனத்தூய்மை ஆகிய ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. ஆய்வில் தேர்ச்சி பெற்ற விதைகளுக்கு சான்றட்டை பொருத்தப்பட்டு, 882 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

2024-25 ஆம் ஆண்டில், 71,123 ஏக்கர் பரப்பளவில் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு 30,164 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு, 16,954 விதைப்பண்ணை விவசாயிகளுக்கு, விதைகள் கொள்முதல் தொகையாக ரூ.170 கோடி நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. இவ்விதைகள் பல்வேறு ஒன்றிய மற்றும் மாநில

அரசின் திட்டங்களின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டில், 1,02,380 ஏக்கர் பரப்பளவில் விதைப்பண்ணை அமைத்து, 39,500 மெட்ரிக் டன் விதைகள் உற்பத்தி செய்து, தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமையின் (TANSEDA) சுழல் நிதியிலிருந்து ரூ.250 கோடி கொள்முதல் விலையாக 24,400 விதைப்பண்ணை விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட சான்று பெற்ற விதைகள் பல்வேறு ஒன்றிய மற்றும் மாநில அரசின் திட்டங்களின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.4.2. விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம்

விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டில், இதுவரை 10,630 மெட்ரிக் டன் நெல், சிறுதானியம்,

பயறு வகைகள், எண்ணெய்வித்துக்களின் சான்று விதைகள் ரூ.24.05 கோடி நிதி செலவினத்தில் விநியோகம் செய்யப்பட்டு 6,38,400 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

**2025-26 ஆம் ஆண்டிலும்**, 15,654 மெட்ரிக் டன் விதைகள், **ரூ.34.78 கோடி நிதி ஒதுக்கீட்டில்** விநியோகம் செய்யப்படும்.

**1.4.3. வேளாண்மை விரிவாக்க மையங்கள்**

மாநிலத்தில் 882 வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் வட்டார அளவில் 386 முதன்மை மையங்களாகவும், குறுவட்ட அளவில் 499 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களில், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்,

விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு, வேளாண்மைப் பொறியியல் துறை ஆகிய அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு உழவர்களுக்குத் தேவையான சேவைகளை வழங்கி வருகின்றன.

வேளாண்மை தொடர்பான அனைத்து சேவைகளையும் விவசாயிகளுக்கு வழங்கிடும் பொருட்டு செயல்படும் 386 முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்களில் 228 மையங்கள் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 499 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில், 310 மையங்களுக்கு பல்வேறு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டடப்பட்டுள்ளன.

2024 – 25 ஆம் ஆண்டில், இதுவரை விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்டக் கலவை உரங்கள் போன்ற முக்கியமான இடுபொருட்களை விற்பனை செய்ததன் மூலம் ரூ.343 கோடி பரிவர்த்தனை

மேற்கொள்ளப்பட்டு, 35.44 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இம்மையங்களின் சேவை 2025-26 ஆம் ஆண்டிலும் தொடரும்.

### 1.4.4. பாரம்பரிய நெல், சிறுதானியங்கள் மற்றும் பயறு இரகங்கள் சாகுபடியை ஊக்குவித்தல்

பாரம்பரிய நெல் இரகங்கள் பல மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளதால், இவற்றைப் பொதுமக்களுக்குப் பெருமளவில் கிடைத்திடச் செய்திடவும், அடுத்த தலைமுறைக்காக இந்த இரகங்களைப் பாதுகாப்பதும் அவசியமாகும். எனவே, 2021 – 22 ஆம் ஆண்டு முதல் பாரம்பரிய நெல் இரகங்கள் சாகுபடியை ஊக்குவிப்பதற்கு, நெல் ஜெயராமனின் பாரம்பரிய நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில் 16,154 விவசாயிகளுக்கு 200 மெட்ரிக் டன் பாரம்பரிய நெல் இரகங்களின் விதைகள் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 50 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு, 10,000 ஏக்கரில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் பண்புகள் மற்றும் அதிக மருத்துவ குணங்கள் கொண்ட பாரம்பரிய இரகங்களான சிவன் சம்பா, கருப்புக் கவுனி, மாப்பிள்ளை சம்பா மற்றும் கருங்குறுவை ஆகிய இரகங்களை 1,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ள 1,285 விவசாயிகளுக்கு 20 மெட்ரிக் டன் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

2024-25 ஆம் ஆண்டில் அரசு விதைப் பண்ணைகளில் 20 ஏக்கர் பரப்பளவில் பாரம்பரிய சிறுதானியங்கள் மற்றும் பயறுவகை இரகங்களைக் கொண்டு விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விதைப் பண்ணைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும்

விதைகள் 2025 – 26 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

இத்திட்டங்கள் 2025–26 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.5. பயிர் பாதுகாப்பு**

பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த முறையில் பயிர் பாதுகாப்பு மேலாண்மை முறைகளைப் பின்பற்றவும், விவசாயிகளிடையே உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கும், வேளாண்மைத் துறை மூலம் பல்வேறு திட்டங்களின் கீழ் உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

சுற்றுச்சூழலுக்கு உகந்த உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் இயற்கை எதிரிகளான *டிரைகோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் புளூரசன்ஸ், மெட்டாரைசியம் அனிசோபிலியே, டிரைகோகிரம்மா கைலோனிஸ், நியுக்ளியர் பாலிஹெட்ரோஸிஸ் வைரஸ் (என்.பி.வி)* போன்ற உயிரியல் பூச்சிக்கொல்லிகள் 24 உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், 5 கரும்பு ஒட்டுண்ணி மையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. இதன் மூலம் விவசாயிகள் இரசாயனப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவது குறைவதுடன், தீமை செய்யும் பூச்சிகளின் எதிர் திறன் வளர்ச்சி, பூச்சி இனங்கள் மீண்டும் தோன்றுதல், சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் பூச்சிக்கொல்லிகளின் எஞ்சிய நச்சு குறைவதுடன், சாகுபடிச் செலவும் கட்டுப்படுத்தப்படுகிறது.

**அட்டவணை: 1.3– 2024-25 ஆம் ஆண்டு உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளின் உற்பத்தி மற்றும் விநியோக விவரங்கள்**

| வ. எண் | உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் | உற்பத்தி மற்றும் விநியோகம் |
|---|---|---|
| 1. | *டிரைகோடெர்மா விரிடி (கிலோ)* | 4,32,860 |
| 2. | *சூடோமோனாஸ் புளூரசன்ஸ் (கிலோ)* | 6,03,549 |
| 3. | *டிரைகோகிரம்மா கைலோனிஸ் (சிசி)* | 23,117 |
| 4. | *மெட்டாரைசியம் அனிசோபிலியே (கிலோ)* | 10,417 |
| 5. | *நியூக்ளியர் பாலிஹெட்ரோஸிஸ் வைரஸ் (என்.பி.வி) (லிட்டர்)* | 7,350 |

### 1.5.1. பூச்சி நோய் மேலாண்மை குறித்து விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள்

பூச்சி நோய் மேலாண்மை குறித்து, விவசாயிகளுக்குப் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பயிர் வாரியான பூச்சிகள், நோய்த் தாக்குதல்கள் குறித்தும், இரசாயனப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துதல் குறித்தும் பல்வேறு பயிற்சிகள் பல்வேறு திட்டங்களின் வாயிலாக அளிக்கப்படுகின்றன.

மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக, மாதந்தோறும் பூச்சி, நோய் முன்னறிவிப்பு அறிக்கையானது அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டு, விவசாயிகளுக்கு நிரந்தர பூச்சி, நோய் கண்காணிப்புத் திடல்கள் மற்றும் வயல் சூழல் ஆய்வு மூலம் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

**அட்டவணை: 1.4 – உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்கள்**

| வ. எண். | மாவட்டம் | உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மைங்கள் (22) | ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்கள் (2) |
|---|---|---|---|
| 1 | விழுப்புரம் | விழுப்புரம் | - |
| 2 | சேலம் | சீலநாயக்கன்பட்டி | - |
| 3 | நாமக்கல் | நாமக்கல் | - |
| 4 | தருமபுரி | பாப்பாரப்பட்டி | - |
| 5 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | - |
| 6 | ஈரோடு | பவானி | - |
| 7 | திருச்சி | திருச்சி | - |
| 8 | தஞ்சாவூர் | காட்டுத்தோட்டம் | - |
| 9 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை | - |

| வ. எண். | மாவட்டம் | உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மைங்கள் (22) | ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்கள் (2) |
|---|---|---|---|
| 10 | காஞ்சிபுரம் | - | பஞ்சுப்பேட்டை |
| 11 | மதுரை | விநாயகபுரம் | விநாயகபுரம் |
| 12 | புதுக்கோட்டை | அன்னவாசல் | - |
| 13 | திருவள்ளூர் | மாதவரம் | - |
| 14 | கரூர் | கரூர் | - |
| 15 | அரியலூர் | திருமானூர் | - |
| 16 | பெரம்பலூர் | பெரம்பலூர் | - |
| 17 | திருவாரூர் | மன்னார்குடி | - |
| 18 | விருதுநகர் | விருதுநகர் | - |
| 19 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | - |
| 20 | வேலூர் | வேலூர் | - |
| 21 | கன்னியாகுமரி | கோழிப்போர்விளை | - |
| 22 | திண்டுக்கல் | நத்தம் | - |
| 23 | கடலூர் | பண்ருட்டி | - |

## கரும்பு ஒட்டுண்ணி மையங்கள்

| வ. எண். | மாவட்டம் | உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மைங்கள் |
|---|---|---|
| 1. | விழுப்புரம் | விழுப்புரம் |
| 2. | நாமக்கல் | மோகனூர் |
| 3. | ஈரோடு | கோபிசெட்டிபாளையம் |
| 4. | திருப்பூர் | உடுமலைப்பேட்டை |
| 5. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |

**1.6. உரங்கள்**

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சராசரியாக 22 இலட்சம் மெட்ரிக் டன் இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இரசாயன உரங்கள் பயிர்களின் உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தியினை நிர்ணயிக்கும் முக்கிய இடுபொருளாகும். பெருகி வரும் உரத் தேவையினைக் கருத்தில் கொண்டு, மாநில அரசு, விவசாயிகளின் இடுபொருள் செலவினைக் குறைத்திடவும், மண் வளத்தினைப் பாதுகாத்திடவும், பசுந்தாள் உரங்கள், உயிர் உரங்கள் மற்றும் இயற்கை உரங்களைப் பயன்படுத்திட "முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்" திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டில் கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் ஒருங்கிணைந்த உர மேலாண்மை வழியாக இரசாயன உரங்கள் பயன்பாட்டினைக் குறைத்தல் தொடர்பாக ரூ. 38.5 இலட்சம்

நிதி செலவினத்தில் 385 வட்டாரங்களில் 15,400 விவசாயிகளுக்கு விழிப்புணர்வுப் பயிற்சி வழங்கப்பட்டது.

மாநிலங்களுக்கு காரீப் மற்றும் இராபி பருவ சாகுபடிக்குத் தேவைப்படும் இரசாயன உரங்களை ஒன்றிய அரசின் உரம் மற்றும் இரசாயனத்துறை, மாநிலங்களின் உரத்தேவை விவரத்தினைப் பெற்று, தேவைக்கேற்ப உரங்களை ஒதுக்கீடு செய்து வருகிறது. காரீப் மற்றும் இராபி பருவங்களுக்கு ஒன்றிய அரசு 10.03 இலட்சம் மெட்ரிக் டன் யூரியா, 2.36 இலட்சம் மெட்ரிக் டன் டி.ஏ.பி, 1.78 இலட்சம் மெட்ரிக் டன் பொட்டாஷ் மற்றும் 7.17 இலட்சம் மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் ஆகியவற்றை ஒதுக்கீடு செய்துள்ளது.

## அட்டவணை: 1.5 - ஆண்டு வாரியாக உர விநியோக விபரங்கள் பின்வருமாறு

| உரம் | உர விநியோகம் (இலட்சம் மெட்ரிக் டன்) | | |
|---|---|---|---|
| | 2022 - 23 | 2023 – 24 | 2024-25 (ஏப்ரல்,24 - பிப்ரவரி,25) |
| யூரியா | 10.96 | 10.11 | 10.03 |
| டி.ஏ.பி | 3.11 | 2.64 | 2.36 |
| பொட்டாஷ் | 1.59 | 1.63 | 1.78 |
| காம்ப்ளக்ஸ் உரங்கள் | 6.82 | 7.24 | 7.17 |
| **மொத்தம்** | **22.48** | **21.62** | **21.34** |

மேலும், இரசாயன உரங்களை உர நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து முன் இருப்பு வைப்பதற்காகவும், பயிர் சாகுபடிப் பருவத்தில் தட்டுப்பாடின்றி உரங்கள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலும் 2024-25 ஆம் ஆண்டில் வட்டியில்லா முன்பணமாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (டான்பெட்) ரூ.120 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 1.6.1. தரமான உர விற்பனையை உறுதிப்படுத்துதல்

தரமான உர விற்பனையை உறுதி செய்திட உர மாதிரிகளின் தரப்பரிசோதனைகள் தமிழ்நாடு அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், 2 உயிர்ம உரப் பரிசோதனை ஆய்வகங்கள், 1 உயிர் உரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில் 24,789 இரசாயன உர மாதிரிகள், 1,394 உயிர்ம உரங்கள், 1,345 உயிர் உர மாதிரிகள் ஆக மொத்தம் 27,528 உரமாதிரிகள் ஆய்வகங்களுக்கு அனுப்பப்பட்டு தரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில், 569 இரசாயன உர மாதிரிகள், 124 உயிர்ம உர மாதிரிகள், 18 உயிர் உர மாதிரிகள் ஆக மொத்தம் 711 உர மாதிரிகள் தரமற்றவையாகக் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, அவற்றை உற்பத்தி செய்த நிறுவனங்களின் மீது சத்துக் குறைபாடுகளுக்கேற்ப துறை நடவடிக்கைகள் மற்றும்

சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 1.7. தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

விவசாயிகளுக்குத் தரமான உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் உயிர் உரங்கள் கிடைத்திட, தமிழ்நாட்டில் உள்ள 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், 12 பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள், மூன்று மாநில பூச்சிக்கொல்லி ஆய்வகத்துடன் கூடிய குறியீட்டு மையங்கள், இரண்டு உயிர்ம உரப் பரிசோதனை ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், திருச்சி மாவட்டத்தில் உயிர் உரத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம், உயிரியல் காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம், புதுக்கோட்டை மாவட்டத்தில் மத்திய கட்டுப்பாடு ஆய்வகம் ஆகியவையும் செயல்பட்டு வருகின்றன.

### 1.7.1. உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களின் செயல்பாடுகள்

**அட்டவணை: 1.6 - உர மாதிரிகள் பரிசோதனை விவரம்**

| வ. எண் | விவரம் | 2024-25 | | தரமற்ற மாதிரிகள் | 2025-26 இலக்கு |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | | |
| 1. | உர மாதிரிகள் | 24,600 | 24,789 | 569 | 24,600 |
| 2. | உயிர்ம உர மாதிரிகள் | 1,440 | 1,394 | 124 | 1,440 |
| 3. | உயிர் உர மாதிரிகள் | 1,040 | 1,345 | 18 | 1,040 |

மொத்தமுள்ள 14 உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கும் தேசிய தர நிர்ணய (NABL -ISO 17025:2017) அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது . மேலும், திருச்சி மற்றும் கோயம்புத்தூரில் உள்ள 2 உயிர்ம உரப் பரிசோதனை ஆய்வகங்களுக்கும், திருச்சியில் உள்ள உயிர் உரத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்திற்கும் தேசிய தர நிர்ணய அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 1.7.2 பூச்சிக்கொல்லி ஆய்வகங்களின் செயல்பாடுகள்

**அட்டவணை: 1.7 - பூச்சிக்கொல்லி மாதிரிகள் பரிசோதனை விவரம்**

| வ. எண் | விவரம் | 2024-25 | | தரமற்ற மாதிரிகள் | 2025-26 இலக்கு |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | | |
| 1. | பூச்சிக்கொல்லி மாதிரிகள் | 21,850 | 20,679 | 175 | 21,850 |

கோயம்புத்தூர் மற்றும் காஞ்சிபுரம் ஆய்வகங்கள் போல் மீதமுள்ள 10 ஆய்வகங்களுக்கும் தேசிய தர நிர்ணய (NABL -ISO 17025:2017) அங்கீகாரம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 1.7.3. உயிரியல் காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்

பூச்சிக்கொல்லிகள் சட்டம், 1968, பூச்சிக்கொல்லி விதிகள், 1971 இன்படி, டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ், பெவேரியா பேசியானா போன்ற உயிரி கட்டுப்பாட்டுக்

காரணிகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக, திருச்சியில் உயிரியல் காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது.

**அட்டவணை: 1.8 - உயிரி கட்டுப்பாட்டுக் காரணி மாதிரிகள் பரிசோதனை விவரம்**

| வ. எண் | விவரம் | 2024-25 | | தரமற்ற மாதிரிகள் | 2025-26 இலக்கு |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | | |
| 1. | உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் | 792 | 390 | 20 | 792 |

## 1.8. மண்வள மேம்பாடு

### 1.8.1. மண் பரிசோதனை நிலையங்கள்

பயிர்களின் உற்பத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயை மும்மடங்காக்கவும், மண் பரிசோதனை அடிப்படையிலான பயிருக்கேற்ற மண்வள மேம்பாடும், தேவைக்கேற்ற உர நிர்வாகமும் இன்றியமையாததாகும்.

இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் 37 மண் பரிசோதனை நிலையங்கள், 19 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள், மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் மண் மாதிரிகள் மற்றும் பாசன நீர் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வு முடிவுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகளின் நலனுக்காக, மண்நலம் மற்றும் வளம் திட்டத்தில் வேலூர், கோயம்புத்தூர் மாவட்டங்களில் புதிய நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2024-25 ஆம் ஆண்டில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் – மண் நலம் மற்றும் வளம் திட்டத்தில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டக் கிராமங்கள், ஒரு கிராமம் ஒரு பயிர் திட்டம் மற்றும் இதர திட்ட செயல்விளக்கத் திடல்களின் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு சரியான

பரிந்துரைப்படி 4 இலட்சம் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 50,000 எண்கள் நேரடி மண் மற்றும் பாசன நீர் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

2024-25 ஆம் ஆண்டில் மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம், குடுமியான்மலை மற்றும் 36 மண் பரிசோதனை நிலையங்கள் தேசிய தர நிர்ணய அங்கீகாரச் சான்றிதழ் பெற்றுள்ளன. மேலும், 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் தேசிய தர நிர்ணய அங்கீகாரச் சான்றிதழ் பெற விண்ணப்பிக்கப்பட்டு, சான்றிதழ் பெற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டிலும் மண் நலம் மற்றும் வளம் திட்டத்தின் கீழ் 4 இலட்சம் மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கிடும் வகையில் செயல்படுத்தப்படும்.

### 1.8.2. தமிழ் மண்வளம்

தமிழ் மண்வளம் என்னும் இணைய முகப்பு 28.06.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விவசாயிகளின் பயன்பாட்டிற்காகத் தொடங்கி வைக்கப்பட்டது. இது விவசாயிகள் புல எண் வாரியாக மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தங்கள் விளைநிலங்களின் ஊட்டச்சத்து நிலை, பொருத்தமான உர மற்றும் பயிர் பரிந்துரைகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட இணைய முகப்பு ஆகும்.

இந்த இணைய முகப்பில் 40 இலட்சம் புல எண்களின் மண் பரிசோதனை முடிவுத் தரவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மேலும், ஆண்டுதோறும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகப் பெறப்படும் மண் மாதிரிகளின் பரிசோதனை முடிவு தரவுகளும் தமிழ் மண்வள இணைய முகப்பில் பதிவேற்றம் செய்ய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை தமிழ் மண்வளம் இணைய முகப்பு மூலம் 2,67,223 மண்வள அட்டைகள் உழவர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒன்றிய அரசின் மண் வள அட்டை இணைய முகப்பை (Soil Health Card Portal) தமிழ் மண்வளம் முகப்புடன் இணைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 1.9. நுண்ணூட்ட உரக் கலவை உற்பத்தி மையம்

மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துக் குறைபாடுகளை நீக்கி, உயர் மகசூல் பெற்றிடவும், விவசாயிகளுக்குத் தரமான நுண்ணூட்ட உரங்கள் விநியோகம் செய்திடவும், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் இயங்கி வரும் நுண்ணூட்ட உரக் கலவை உற்பத்தி மையம் வாயிலாக ஆண்டிற்கு 3,300 மெட்ரிக் டன் அளவில் 14 வகையான அத்தியாவசியமான நுண்ணூட்ட உரக் கலவைகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயப் பெருமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில், 3,514 மெட்ரிக் டன் உற்பத்தி செய்ய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வெவ்வேறு திட்டங்களின் கீழ் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

வரும் 2025-26 ஆம் ஆண்டிலும், 3,300 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வெவ்வேறு திட்டங்களின் கீழ் மானியத்தில் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**1.10. உயிர் உர உற்பத்தி மையங்கள்**

மண்வளத்தைப் பாதுகாத்து செறிவூட்டிடும் நோக்கத்துடன், தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஒன்பது வகையான திரவ உயிர் உரங்கள் 12.10 இலட்சம் லிட்டர் அளவில் 22 உயிர் உர உற்பத்தி மையங்களில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயப் பெருமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2025-26 ஆம் ஆண்டிலும் 12.10 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

### 1.11. வேளாண்மை விரிவாக்கத்திற்கான துணை இயக்கம் – மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டம் - அட்மா (வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை)

மாநில விரிவாக்கத் திட்டத்தில் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள், வேளாண் பொறியியல், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு, கால்நடை பராமரிப்பு, பட்டு வளர்ச்சித் துறை, மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை, வனத்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் ஆகிய துறைகளையும்

ஒருங்கிணைத்து விவசாயிகளுக்குத் தேவையான பயிர் உற்பத்தி மற்றும் பண்ணை சார்ந்த புதிய தொழில்நுட்பங்களை வழங்கி விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்திற்குத் தேவையான செயல்பாடுகளைத் திட்டமிட்டு, ஒருங்கிணைத்து செயல்படுத்த மாவட்டந்தோறும் **வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை** நிறுவப்பட்டு, அவற்றின் வாயிலாக பயிற்சிகள், கண்டுணர் சுற்றுலாக்கள், செயல்விளக்கங்கள், விவசாய கண்காட்சி, விவசாயக் குழுக்கள் அணி திரட்டுதல், பண்ணைப்பள்ளி போன்ற செயல்பாட்டு இனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

**அட்மா செயல்பாடுகள்** - 2024-25

அட்மா திட்டத்தில் தொழில்நுட்பப் பயிற்சிகள், கண்டுணர் சுற்றுலாக்கள், செயல்விளக்கத் திடல்கள், பண்ணைப் பள்ளிகள் போன்ற பல்வேறு இனங்கள்

செயல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கென, ரூ.43.62 கோடி செலவிடப்பட்டு, இதுவரை 4.79 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2025-26 ஆம் ஆண்டில் ரூ.91.66 கோடி செலவில் ஐந்து இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**1.12. உழவர் பயிற்சி மையங்கள்**

**1.12.1. உழவர் பயிற்சி நிலையம்**

நமது மாநிலத்தில் 22 உழவர் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 2024-25 ஆம் ஆண்டில் விவசாய ஒருங்கிணைப்பாளர், பண்ணை மகளிர் மற்றும் கிராமப்புர இளைஞர்களுக்கு பண்ணை மேலாண்மை மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பான பயிற்சிகள் ரூ.17 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டிலும் உழவர் பயிற்சி நிலையம் மூலம் ரூ.17 இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்படும்.

## அட்டவணை: 1.9 - உழவர் பயிற்சி நிலையங்கள்

| வ. எண் | மாவட்டம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 2 | விழுப்புரம் | திண்டிவனம் |
| 3 | வேலூர் | வேலூர் |
| 4 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| 5 | சேலம் | சேலம் |
| 6 | நாமக்கல் | நாமக்கல் |
| 7 | தருமபுரி | தருமபுரி |
| 8 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 9 | ஈரோடு | ஈரோடு |
| 10 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| 11 | பெரம்பலூர் | பெரம்பலூர் |
| 12 | கரூர் | கரூர் |
| 13 | புதுக்கோட்டை | குடுமியான்மலை |
| 14 | தஞ்சாவூர் | சாக்கோட்டை |
| 15 | தேனி | தேனி |
| 16 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 17 | இராமநாதபுரம் | பரமக்குடி |
| 18 | சிவகங்கை | சிவகங்கை |
| 19 | விருதுநகர் | விருதுநகர் |
| 20 | திருநெல்வேலி | பாளையங்கோட்டை |
| 21 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 22 | கன்னியாகுமரி | நாகர்கோவில் |

**1.12.2. மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம் (ஸ்டாமின்), குடுமியான்மலை**

மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையத்தில் வேளாண்மைத்துறையில் பணிபுரியும் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள், நிர்வாகம், விரிவாக்கம், மேலாண்மை, கணினி தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கடந்த 2024-25 ஆம் ஆண்டில் 720 வேளாண் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு ரூ.19.09 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.12.3. மாநில வேளாண்மை மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிலையம் (சமிதி) குடுமியான்மலை**

மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் மாநில வேளாண்மை மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிலையத்தினால் (சமிதி) வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துறைகளில் பணி புரியும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், வேளாண்மை விரிவாக்க மேலாண்மை முதுகலை பட்டயப்படிப்பு (PGDAEM), வேளாண் இடுபொருள் விற்பனையாளர்களுக்கான வேளாண் விரிவாக்க சேவைக்கான பட்டயப்படிப்பு (DAESI), உர விற்பனையாளர்களுக்கான ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை சான்றிதழ் படிப்பு (CCINM), கிராமப்புர இளைஞர்களுக்கான திறன் வளர்க்கும் பயிற்சி (STRY) மற்றும் சான்று பெற்ற பண்ணை ஆலோசகர் (Certified Farm Advisor) போன்ற பயிற்சிகள் ஹைதராபாத்தில் உள்ள தேசிய வேளாண் விரிவாக்க

மேலாண்மை நிலையம் (MANAGE) மூலம் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், வேளாண் சார்ந்த தொழில்நுட்பங்கள், துறை சார்ந்த அலுவலர்களுக்கும் விவசாயிகளுக்கும் நிகழ்நிலை பயிற்சிகள் மூலம் வழங்கப்படுகின்றன.

கடந்த 2024-25 ஆம் ஆண்டில் 838 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ரூ.24.90 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.12.4. நீர் மேலாண்மை பயிற்சி மையம், விநாயகபுரம், மதுரை மாவட்டம்.**

ஆண்டுதோறும் 900 விவசாயிகள் மற்றும் 180 களப்பணியாளர்களுக்கு, நீர் மேலாண்மை, நீர் பயன்பாட்டுத் திறன் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் மதுரை மாவட்டம், விநாயகபுரத்தில் செயல்பட்டு வரும் நீர் மேலாண்மை பயிற்சி மையம்

மூலம் ரூ.20.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.13. உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம்**

புதிய பயிர் சாகுபடித் தொழில்நுட்பங்கள் மற்றும் அரசு மானியத்திட்டங்களை கிராம ஊராட்சி அளவில் உழவர்களுக்கு நேரடியாக எடுத்து செல்வதே வேளாண் விரிவாக்க அலுவலர்களின் (உதவி வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர்கள்) முக்கியப் பணியாகும்.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் 10 முன்னோடி விவசாயிகளைத் தெரிவு செய்து (ஆதிதிராவிடர் / பழங்குடியினர் விவசாயிகள் 2 பேர் உட்பட) புதிய வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் விவசாயிகள் சார்ந்த அனைத்து திட்டச் செயல்பாடுகள்

குறித்து விளக்கங்களும், பயிற்சிகளும் உரிய கால இடைவெளியில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

வேளாண் விரிவாக்கப் பணியாளர்களுக்கு கிராம ஊராட்சியை ஒதுக்கீடு செய்து, ஊராட்சிக்குத் தேவையான, பகுதி வாரியான பயிர் சாகுபடித் தொழில்நுட்பங்களைத் தயாரித்து வழங்கி விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்றன. விரிவாக்க அலுவலர்கள் கிராம ஊராட்சிகளுக்கு வருகை புரியும் தேதி, இடம் முன்னணி விவசாயிகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும். உழவர் செயலி வலைதளத்தின் மூலம் அறிந்து கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம் 2.0**

வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டம்,

தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு 2025-26 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

### 1.14. தகவல் தொடர்பு சாதனத்தின் மூலம் கண்காணித்தல்

வேளாண் விரிவாக்க அலுவலர்கள் கிராம ஊராட்சிகளுக்குப் பயணம் மேற்கொண்ட விவரங்களைப் பதிவேற்றம் செய்திட மற்றும் களப்பயணங்களை வேளாண் உயர் அலுவலர்கள் கண்காணிக்க ஒரு பிரத்தியேக கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. விரிவாக்க அலுவலர்கள் களப்பணிக்குச் சென்றதும், அந்த இடத்துடன் கூடிய புகைப்படம் எடுத்து அதற்கென உருவாக்கப்பட்டுள்ள கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

வட்டாரம், மாவட்டம், மாநில அளவில் வேளாண் விரிவாக்கப் பணியாளர்கள் மேற்கொண்ட பயணம், மேற்கொள்ளத் தவறிய களப்பயணம், விவசாயிகள் முன்வைத்த பிரச்சனைகள் அதற்கு களப்பணியாளர்கள் வழங்கிய ஆலோசனைகள் மற்றும்

கண்காணிப்பு அலுவலர்களின் ஆய்வு உள்ளிட்டவை குறித்து இணைய முகப்பு தகவல் (Dash board) உருவாக்கப்பட்டு, இவ்விவரங்கள் ஆய்வுக் கூட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டு களப்பணியாளர்கள் களப்பணிக்குச் சென்று பணியாற்றுவது உறுதி செய்யப்பட்டு வருகிறது.

## 1.15. பேரிடர் மேலாண்மை

தமிழ்நாட்டில் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, இடுபொருள் மானியம் உரிய காலத்தில் வழங்கி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பேணிக்காத்து, விவசாயம் தொடர்ந்து நடைபெற்றிட, மாநில அரசு பல்வேறு சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது.

கடந்த 2021-22 ஆம் ஆண்டு முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளால் 19.84 இலட்சம் ஏக்கர் பரப்பில் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு நிவாரணமாக

ரூ 833.88 கோடி, 11.95 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

2024-25 **ஆம் ஆண்டில்** ஜனவரி மாதத்தில் பருவம் தவறிப் பெய்த கனமழை, தென்மேற்கு பருவமழை, கோடை மழை மற்றும் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் ஏற்பட்ட பெஞ்சல் புயல் போன்ற இயற்கை இடர்ப்பாடுகளால் **9.10 இலட்சம் ஏக்கர் பரப்பில் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு நிவாரணமாக ரூ.545.56 கோடி, 6.16 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.**

**கடந்த நான்காண்டுகளில் 28.94 இலட்சம் ஏக்கர் பரப்பில் ஏற்பட்ட வேளாண் பயிர் சேதத்திற்கு ரூ.1379.44 கோடி, 18.10 இலட்சம் விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டது.**

## 1.16. உழவர் நலன் காக்க வேளாண் மண்டலக் குழுக்கள்

வேளாண்மை இயக்குநர் / தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் தலைமையில் மாவட்ட ஆட்சியர்களை உள்ளடக்கி வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பொதுப்பணித் துறை/ நீர்வள ஆதாரத்துறை, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், வனத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள் மற்றும் சுற்றுச்சூழல் வல்லுநர்களை உறுப்பினர்களாகக் கொண்டு 7 மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

விவசாயம், இயற்கைப் பேரிடர்கள், மாசு தொடர்பான பிரச்சனைகள், புதிய திட்டங்களுக்கு விவசாய நிலத்தேவை தொடர்பான சிக்கல்கள் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் தற்போதைய

பிரச்சனைகளை தீர்க்கும் தளமாகச் செயல்பட்டு வருகிறது. நடப்பு 2025-26 ஆம் ஆண்டிலும், வேளாண் மண்டலக் குழுக்கள் தொடர்ந்து செயல்படும்.

**1.17. விவசாயக் கடன் அட்டை திட்டம்**

விவசாயிகள் உரிய நேரத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகளிடமிருந்து கடனுதவி பெற்று, பயிர் சாகுபடி செய்திட உதவும் வகையில் “விவசாயக் கடன் அட்டை” வழங்கும் திட்டம், 1998 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள், குத்தகைதாரர்கள் உள்ளிட்ட அனைவரும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். விவசாயிகளின் நிலவுடைமை மற்றும் பயிர் சாகுபடிப் பரப்பின் அடிப்படையில் **ரூ.1.60 இலட்சம் வரை வங்கிகளில் பிணையமில்லாத கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது**. இத்திட்டத்தில் இதுவரை விவசாயிகளுக்கு 44 இலட்சம் விவசாயக் கடன்

(புதுப்பித்த கடன் அட்டை உட்பட) அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.18. விவசாயிகளுக்கான இலவச மும்முனை மின்சாரத் திட்டம்

வேளாண் உற்பத்தியில் நிலத்தடி நீரின் பயன்பாடு பெருமளவு உள்ளதால், தமிழ்நாட்டில் பாசனம் மேற்கொள்ளத் தேவையான மின்சாரம் 1990 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

**கடந்த 2024-25 ஆம் ஆண்டில், 23.74 இலட்சம் பாசன மின் இணைப்புகளுக்கான இலவச மின்சாரம் வழங்கிட ரூ. 6962.93 கோடி நிதி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டிலும், ரூ.8,186 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

## 1.19. வேளாண்மைத்துறை சார்ந்த விருதுகள்

### 1.19.1. திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது

நெல் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், நெல் சாகுபடிக்கான நீர் பயன்பாட்டைக் குறைக்கவும் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை, விவசாயிகள் கடைப்பிடிக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது. எனவே, மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடித் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து, அதிக உற்பத்தித்திறன் பெறும் விவசாயிகளுக்கு, ஒவ்வொரு ஆண்டும், குடியரசு தினவிழாவின் போது, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்**, **சிறப்பு ரொக்கப் பரிசு ரூ.5 இலட்சம்**, **தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ்** ஆகியவை 2011-2012 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்விருது, 2021 ஆம் ஆண்டு முதல் "**திரு.சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது**" என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகிறது. 2024-25 ஆம் ஆண்டில் வெற்றி பெறும் விவசாயிக்கு, இவ்விருது 2026 ஆம் ஆண்டில் ஜனவரி, 26 குடியரசு தினத்தன்று வழங்கப்படும்.

### 1.19.2. மாநில அளவில் அதிக விளைச்சல் பெறும் விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசு

உயரிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து, உற்பத்தித்திறனை அதிகரிப்பதில் விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக 2023-24 ஆம் ஆண்டில் நெல்லுக்கு வழங்கி வந்ததைப் போன்றே கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, குதிரைவாலி, துவரை, உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை, எள் மற்றும் கரும்பு போன்ற பயிர்களைச் சாகுபடி செய்து மாநில அளவில் அதிக விளைச்சல் பெறும் முதல் மூன்று விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்க ஐந்து இலட்சம் ரூபாய் அறிவிக்கப்பட்டது.

விவசாயிகளிடையே உற்பத்தித்திறனைப் பெருக்குவதற்கான விழிப்புணர்வும், முயற்சியும் வெகுவாக இருந்ததால் 2024-25 ஆம் ஆண்டிலும், இத்திட்டம் தொடரப்பட்டு மாநில அளவில் முதல் பரிசாக ரூ.2.5 இலட்சமும், இரண்டாவது பரிசாக ரூ. 1.50 இலட்சமும் மூன்றாவது பரிசாக ரூ.1.00 இலட்சமும் வழங்கப்படவுள்ளது.

2025-26 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

**அட்டவணை: 1.10 - மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டிக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை (ரூபாயில்)**

| வ. எண் | பயிர்கள் | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|---|
| 1 | கம்பு, கேழ்வரகு, சாமை, தினை, குதிரைவாலி, துவரை, உளுந்து, பச்சைப் பயறு, நிலக்கடலை, எள் மற்றும் கரும்பு | 2,50,000 | 1,50,000 | 1,00,000 |

### 1.19.3. மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி

புதிய இரகங்களைப் பயிரிட்டு, புதிய அறிவியல் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி, அதிக உற்பத்தித்திறன் பெற்று, பிற விவசாயிகளுக்கு முன்னுதாரணமாகத் திகழும் விவசாயிகளை அங்கீகரிக்கும் விதமாக மாவட்ட அளவில் நெல், நிலக்கடலை, சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, பச்சைப்பயறு, துவரை, கரும்பு மற்றும் பருத்தி ஆகிய பயிர்களில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு, விவசாயிகளுக்கு பரிசுகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகின்றன.

நடப்பு 2025-26 ஆம் ஆண்டிலும் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு, விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

**அட்டவணை:1.11 - மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டிக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை (ரூபாயில்)**

| வ. எண் | பயிர்கள் | முதல் பரிசு | இரண்டாம் பரிசு |
|---|---|---|---|
| 1. | நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி | 15,000/- | 10,000/- |
| 2. | சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, பச்சைப்பயறு மற்றும் துவரை. | 10,000/- | 5,000/- |

### 1.19.4. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது

தமிழ்நாட்டில் பாரம்பரிய நெல் சாகுபடி நீண்ட காலமாகப் பழக்கத்தில் இருந்து வந்துள்ளது. பாரம்பரிய நெல் இரகங்களை சாகுபடி செய்து, அவற்றை பாதுகாத்து வரும் விவசாயிகளை அதிக அளவில் ஊக்குவிக்கும் பொருட்டு, பாரத ரத்னா டாக்டர்

எம்.ஜி.ஆர். பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருதுகள் கடந்த 2018-19 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

மாநில அளவில் பாரம்பரிய நெற்பயிரில் பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்பட்டு, அதிக விளைச்சல் பெறும் முதல் மூன்று விவசாயிகளுக்கு முதல் பரிசாக ரூபாய் ஒரு இலட்சம், இரண்டாம் பரிசாக ரூ. 75,000 மற்றும் மூன்றாம் பரிசாக ரூ. 50,000 வழங்கப்படுகின்றது.

நடப்பு 2025-26 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

**1.19.5. வேளாண் பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக நவீன வேளாண் கருவிகள், நவீன சாகுபடித் தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவற்றைக் கண்டறிந்து கடைபிடிக்கும் நபர்களுக்குப் பரிசு**

2025-26 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை –

உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில், வேளாண் **பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக நவீன வேளாண் கருவிகள்**, **நவீன சாகுபடித் தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவற்றைக் கண்டறிந்து கடைப்பிடிக்கும் நபர்களுக்கு** ஐந்து இலட்சம் ரூபாய் பரிசினை அறிவித்தார்கள்.

இதன்படி, வளர்ந்து வரும் மக்கள் தொகையின் உணவுத் தேவையினைப் நிறைவு செய்ய வேளாண் பயிர்களின் சாகுபடிக்கான செலவினைக் குறைத்து, வேளாண் உற்பத்தியினை அதிகரித்து, விவசாயிகள் இலாபகரமான வருமானம் பெற ஏதுவாக **நவீன வேளாண் கருவிகள்**, **நவீன சாகுபடித் தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவற்றைக் கண்டறிந்து நடைமுறையில் பயன்படுத்தும்** நபர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் மாநில அளவில் 3 நபர்களுக்கு முதல் பரிசாக ரூ.2.5 இலட்சம் ரொக்கப் பரிசும், இரண்டாம் பரிசாக ரூ.1.5 இலட்சம் ரொக்கப்

பரிசும், மூன்றாம் பரிசாக ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கப் பரிசும் வழங்கப்படும்.

எனவே, 2025-26 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.5.00 இலட்சம் மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 1.20. பயிர் காப்பீடு

இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்படும் வருவாய் இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கவும் அவர்களின் வாழ்வாதாரத்தை நிலைப்படுத்தவும், தமிழ்நாடு அரசு பயிர் காப்பீட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதோடு, பயிர்ச்சேதம் ஏற்படும்போது, நிவாரணத் தொகையும் வழங்கி விவசாயிகளுக்கு உறுதுணையாக உள்ளது.

2024-25 ஆம் ஆண்டில், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் 37 மாவட்டங்களை உள்ளடக்கிய 14 தொகுப்புகளில் ரூ. 1,775 கோடி நிதி ஒதுக்கீட்டில்

குறுவை, சம்பா மற்றும் நவரை ஆகிய மூன்று பருவங்களிலும் செயல்படுத்தப்பட்டது.

இடர் நிகழ்வு (Risk) பகிர்மான அடிப்படையிலான மாற்றுக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துதல், முறையற்ற காப்பீடு செய்வதைத் தவிர்க்க மின்னணு சாகுபடி சான்றிதழ் வழங்குதல், தொலையுணர்வு தொழில்நுட்ப அடிப்படையிலான மகசூல் கணக்கீடு மேற்கொள்ளுதல் என அரசால் வகுக்கப்பட்ட உறுதியான அணுகுமுறைகள் மற்றும் பல்வேறு சிறந்த முயற்சிகளால் ரூ. 1,764 கோடியாக இருந்த மாநில அரசின் காப்பீட்டுக் கட்டணத் தொகை, ரூ.329 கோடியாகக் குறைந்துள்ளது.

2024-25 ஆம் ஆண்டில், 34.73 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு 14.46 இலட்சம் விவசாயிகளால் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. கடன் பெறா விவசாயிகளைப் பதிவு செய்வதில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. 2024-25 ஆம் ஆண்டில், சுமார் 89 சதவீதம் கடன்

பெறா விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். விவசாயிகள் அதிகளவில் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதை உறுதி செய்யும் நோக்கத்துடன், அவர்கள் நலனில் அதிக அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசின் ஒப்புதலோடு சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர், நெல் தரிசில் உளுந்து மற்றும் நெல் தரிசில் பாசிப்பயறு ஆகிய பயிர்களுக்குக் காப்பீடு செய்வதற்கான கால வரம்பை நீட்டித்து வழங்கியது. தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட சீரிய முயற்சிகளால் 2024-25 ஆம் ஆண்டில், விதைப்பு பொய்த்தல் மற்றும் விதைப்பு செய்ய இயலாமை இனங்களின் கீழ் இழப்பீட்டுத் தொகை அறிவிக்கை செய்யப்பட்ட காலக்கெடுவுக்கும் முன்னதாகவே வழங்கப்பட்டது.

**இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இழப்பீட்டுத் தொகையாக இதுவரை ரூ.5,279 கோடி தகுதி வாய்ந்த 30 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.**

2024-25 ஆம் ஆண்டில், குறுவைப் பருவ பயிர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக இதுவரை ரூ.58 கோடி தகுதி வாய்ந்த 47,428 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பெஞ்சல் புயல், வடகிழக்குப் பருவ மழை மற்றும் பருவம் தவறிய மழையால் ஏற்பட்ட பயிர் இழப்பால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் துயர் துடைக்க அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் அறிவிக்கை செய்யப்பட்ட காலக்கெடுவான 2025, ஜூன் மாதத்திற்கு முன்னதாகவே இழப்பீட்டுத் தொகையை வழங்க, தமிழ்நாடு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக ரூ.30 கோடி விழுப்புரம், திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சார்ந்த 8,665 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களுக்கு விரைவில் இழப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2025-26 ஆம் ஆண்டிலும், இத்திட்டம் ரூ.841 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

## 1.21. பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி திட்டம் (PM-KISAN)

தமிழ்நாட்டில் "பிரதம மந்திரி கிசான் சம்மான் நிதி" திட்டமானது 2019 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயிர்களின் ஆரோக்கியம் மற்றும் அதிக விளைச்சலை உறுதி செய்வதற்குத் தேவையான பல்வேறு வேளாண் இடுபொருட்களைக் கொள்முதல் செய்ய அனைத்து விவசாயக் குடும்பங்களின் நிதித் தேவைகளுக்கு துணை புரிய ஏதுவாக, இந்த ஒன்றிய அரசுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சொந்த நிலம் உடைய தகுதியான விவசாயக் குடும்பங்களுக்கு உதவித் தொகையாக ஆண்டிற்கு ரூ.6,000/- மூன்று தவணைகளில், தகுதியான விவசாயிகளின் வங்கிக்

கணக்கில் நேரடிப் பணப்பரிமாற்றம் மூலமாக ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில் ரூ.1,408 கோடி நிதியானது, 22.50 இலட்சம் விவசாயிகளின் ஆதார் எண் இணைக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் (ABPS) 19 வது தவணையில் நேரடி பணப்பரிமாற்றம் மூலம் வரவு வைக்கப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.22. வேளாண்மைத் துறை பணியாளர் அமைப்பு

தொழில்நுட்ப அலுவலர்கள், அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் என, மொத்தம் 10,259 பணியாளர்களைக் கொண்டு வேளாண்மைத் துறை செயல்பட்டு வருகிறது.

**அட்டவணை: 1.12 - தொழில்நுட்ப அலுவலர்கள்**

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | வேளாண்மை கூடுதல் இயக்குநர் | 5 |
| 2 | வேளாண்மை இணை இயக்குநர் | 37 |

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 3 | வேளாண்மை துணை இயக்குநர் | 132 |
| 4 | வேளாண்மை உதவி இயக்குநர் | 424 |
| 5 | வேளாண்மை அலுவலர் | 1,060 |
| 6 | துணை வேளாண்மை அலுவலர் | 337 |
| 7 | உதவி விதை அலுவலர் | 509 |
| 8 | உதவி வேளாண்மை அலுவலர் | 2,267 |
| **மொத்தம் தொழில்நுட்ப அலுவலர்கள்** | | **4,771** |

**அட்டவணை : 1.13 - அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள்**

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | துணை இயக்குநர் (நிர்வாகம்) | 2 |
| 2 | ஆட்சி அலுவலர் | 34 |
| 3 | கண்காணிப்பாளர் | 185 |
| 4 | உதவியாளர் | 642 |
| 5 | இளநிலை உதவியாளர் | 388 |
| 6 | தட்டச்சர் | 366 |
| 7 | கண்காணிப்பாளர் (பிணையம்) | 148 |
| 8 | உதவியாளர் (பிணையம்) | 249 |
| 9 | இளநிலை உதவியாளர் (பிணையம்) | 572 |

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 10 | சுருக்குத் தட்டச்சர் (தரம்-1) | 1 |
| 11 | சுருக்குத் தட்டச்சர் (தரம்-2) | 39 |
| 12 | சுருக்குத் தட்டச்சர் (தரம்-3) | 95 |
| 13 | ஓட்டுநர் | 293 |
| 14 | ஆய்வக உதவியாளர் | 135 |
| 15 | பதிவறை எழுத்தர் | 157 |
| 16 | அலுவலக உதவியாளர் | 584 |
| 17 | காவலர் | 1,088 |
| 18 | தொலைபேசி இயக்குபவர் | 2 |
| 19 | இதர பணியாளர்கள் | 508 |
| **மொத்த அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள்** | | **5,488** |

## 2. தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறை

தோட்டக்கலைத் துறை, ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதிலும், ஊரக வேலைவாய்ப்பை அதிகரிப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. அதிக உற்பத்தித்திறன், மதிப்புக்கூட்டுதல் மூலம் நல்ல இலாபம், சந்தை வாய்ப்புகள் மற்றும் ஏற்றுமதிக்கு தோட்டக்கலைப் பயிர்கள் இன்றியமையாததாகும். பழங்கள், காய்கறிகள், சுவைதாளிதப் பயிர்கள், மலர்கள், மூலிகைகள் மற்றும் தேயிலை, காபி ஆகிய தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்களின் தேவை அதிகரித்து வருவதால், அதனை நிறைவு செய்யும் விதமாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் விவசாயப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தோட்டக்கலை சார்ந்த தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எளிதாகக் கிடைக்கச் செய்யவும், அதன் மூலம் விவசாயிகள் தோட்டக்கலைப்பயிர்களை அதிக அளவில் சாகுபடி செய்து இலாபம் அடைந்து பயன் பெறவும், நிலைத்தன்மையுடன் வளர்ச்சியடையவும் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தரமான நடவுப் பொருட்களை வழங்குதல், சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் போன்ற நுண்ணீர்ப்பாசன முறைகளை ஊக்குவித்தல், உயிர்ம விவசாயத்திற்கு ஊக்கமளித்தல், அறுவடைப் பின்செய் மேலாண்மையில் விளைநிலங்களில் சேமிப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், விவசாயிகள் காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் முறையில், பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடி செய்ய ஊக்குவித்தல், ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மைக்கு முக்கியத்துவம்

அளித்தல் ஆகியவையும் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

2025-26 ஆம் ஆண்டில், ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதிப்படுத்த, பழங்கள் மற்றும் காய்கறிகள் சாகுபடிக்கு முன்னுரிமை, நிலத்தடி நீரைத் திறமையாகப் பயன்படுத்த நுண்ணீர்ப்பாசன முறை, விவசாயிகள் நிலையான வருமானம் பெற மலர்ப் பயிர்கள், சுவைதாளிதப் பயிர்கள், முந்திரி, பனை, பாரம்பரிய காய்கறிகள் சாகுபடிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். தென்னைத் தோட்டங்களில் நோய் மற்றும் பூச்சி மேலாண்மை ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## 2.1 தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பு

தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களான காய்கறிகள், பழங்கள், சுவைதாளிதப் பயிர்கள், மருத்துவப் பயிர்கள், நறுமணப் பயிர்கள், மலர்கள் மற்றும் தோட்டப்பயிர்கள் ஆகியவை 16.09 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்படுகின்றன. மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 235 இலட்சம்

மெட்ரிக் டன்கள் ஆகும். தமிழ்நாட்டில் 2023-24 ஆம் ஆண்டில், தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு 0.37 சதவீதமும், உற்பத்தி 0.69 சதவீதமும் முந்தைய ஆண்டைக் காட்டிலும் அதிகரித்துள்ளன.

**அட்டவணை 2.1: தோட்டக்கலைப் பயிர்கள் - சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித் திறன்**

| வ. எண் | தோட்டக்கலைப் பயிர் வகை | 2022-23 (இறுதி மதிப்பீடு) | | | 2023-24 (இறுதி மதிப்பீடு) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சாகுபடிப் பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ.டன்கள் / எக்டர்) | சாகுபடிப் பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | உற்பத்தித் திறன் (மெ.டன்கள் / எக்டர்) |
| 1 | காய்கறிகள் | 3.62 | 91.96 | 25.38 | 3.64 | 93.34 | 25.64 |
| 2 | பழங்கள் | 3.34 | 74.43 | 22.31 | 3.34 | 77.33 | 23.18 |
| 3 | தோட்டப்பயிர்கள் | 7.33 | 56.08 | 7.65 | 7.42 | 53.06 | 7.15 |
| 4 | சுவை தாளித பயிர்கள் | 1.16 | 3.31 | 2.84 | 1.10 | 3.79 | 3.44 |
| 5 | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | 0.14 | 1.43 | 10.14 | 0.12 | 0.89 | 7.26 |
| 6 | மலர்கள் | 0.44 | 5.87 | 13.29 | 0.47 | 6.29 | 13.45 |
| **மொத்தம்** | | **16.03** | **233.08** | **14.54** | **16.09** | **234.69** | **14.59** |

## வரைபடம் 2.1: தமிழ்நாடு - தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிப் பரப்பு 2023-24





## அட்டவணை 2.2: தமிழ்நாடு - தோட்டக்கலைப் பயிர் சாகுபடிப்பரப்பில் தேசிய அளவிலான நிலை

| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|
| 1. வாழை | 1. கோகோ | 1. தென்னை |
| 2. மரவள்ளி | 2. செவ்வந்தி | 2. பெருநெல்லி |
| 3. மல்லிகை | 3. சம்பங்கி | 3. மிளகு |
| 4. கிராம்பு | 4. கருணைக்கிழங்கு | |
| 5. புளி | 5. ஜாதிக்காய் | |
| 6. கறிவேப்பிலை | | |
| 7. ர்பூசணி | | |

**ஆதாரம்**: இறுதி மதிப்பீடு 2023-24, தோட்டக்கலை புள்ளியியல் பிரிவு, வேளாண்மை - உழவர்நலத்துறை, புது தில்லி

## வரைபடம் 2.2: தமிழ்நாடு - தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தி 2023-24




## அட்டவணை 2.3: தமிழ்நாடு - தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியில் தேசிய அளவிலான நிலை


| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|
| 1. மரவள்ளி | 1. தென்னை | 1. பெருநெல்லி |
| 2. மல்லிகை | 2. ஜாதிக்காய் | 2. வாழை |
| 3. கிராம்பு | 3. செவ்வந்தி | 3. மஞ்சள் |
| 4. புளி | | 4. ர்பூசணி |
| 5. சம்பங்கி | | 5. கருணைக்கிழங்கு |
| 6. கறிவேப்பிலை | | |
| **ஆதாரம்**: இறுதி மதிப்பீடு 2023-24, தோட்டக்கலை புள்ளியியல் பிரிவு, வேளாண்மை - உழவர்நலத்துறை, புது தில்லி | | |

## அட்டவணை 2.4: தமிழ்நாடு - தோட்டக்கலைப் பயிர் உற்பத்தித்திறனில் தேசிய அளவிலான நிலை

| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|
| 1. கொய்யா | 1. பெருநெல்லி<br>2. ஜாதிக்காய்<br>3. கிராம்பு<br>4. புளி<br>5. கறிவேப்பிலை<br>6. மல்லிகை | 1. கோகோ<br>2. செவ்வந்தி |
| **ஆதாரம்**: இறுதி மதிப்பீடு 2023-24, தோட்டக்கலை புள்ளியியல் பிரிவு, வேளாண்மை - உழவர்நலத்துறை, புது தில்லி | | |

### 2.1.1: பழங்கள்

## வரைபடம் 2.3: தமிழ்நாட்டின் முக்கியப் பழங்கள்




**அட்டவணை 2.5: பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2023-24)**

| வ. எண் | பழங்கள் | பரப்பு (எக்டர்) | பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மா | 1,45,904 | கிருஷ்ணகிரி (32,147 எக்டர்), திண்டுக்கல் (16,094 எக்டர்), தருமபுரி (13,684 எக்டர்), திருவள்ளூர் (11,661 எக்டர்), தேனி (8,979 எக்டர்). |
| 2 | வாழை | 1,13,861 | ஈரோடு (22,053 எக்டர்), கோயம்புத்தூர் (9,784 எக்டர்), தூத்துக்குடி (9,227 எக்டர்), தேனி (6,921 எக்டர்), திருச்சிராப்பள்ளி (5,919 எக்டர்). |
| 3 | தர்பூசணி | 18,297 | செங்கல்பட்டு (8,470 எக்டர்), விழுப்புரம் (2,863 எக்டர்), திருவண்ணாமலை (1,282 எக்டர்), திருவள்ளூர் (1,251 எக்டர்), சேலம் (733 எக்டர்). |
| 4 | கொய்யா | 14,448 | திண்டுக்கல் (2,235 எக்டர்), மதுரை (1,765 எக்டர்), விருதுநகர் (1,353 எக்டர்), கடலூர் (1,174 எக்டர்), விழுப்புரம் (1,026 எக்டர்). |
| 5 | எலுமிச்சை | 12,295 | தென்காசி (3,017 எக்டர்), திண்டுக்கல் (2,352 எக்டர்), திருச்சிராப்பள்ளி (1,053 எக்டர்), விருதுநகர் (781 எக்டர்), தூத்துக்குடி (773 எக்டர்). |

| வ. எண் | பழங்கள் | பரப்பு (எக்டர்) | பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 6 | இதர பழங்கள் | 28,807 | திண்டுக்கல் (5,549 எக்டர்), தேனி (3,005 எக்டர்), நாமக்கல் (1,640 எக்டர்), திருநெல்வேலி (1,602 எக்டர்), தென்காசி (1,388 எக்டர்). |
| பழப்பயிர்கள் மொத்த சாகுபடிப் பரப்பு = 3,33,612 எக்டர் | | | |

## 2.1.2: காய்கறிகள்

### வரைபடம் 2.4: தமிழ்நாட்டின் முக்கியக் காய்கறிகள்



## அட்டவணை: 2.6: காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2023-24)

| வ. எ ண் | காய்கறிகள் | பரப்பு (எக்டர்) | காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மரவள்ளி | 98,832 | கள்ளக்குறிச்சி (18,576 எக்டர்), நாமக்கல் (18,336 எக்டர்), சேலம் (15,574 எக்டர்), தருமபுரி (14,498 எக்டர்), ஈரோடு (6,615 எக்டர்). |
| 2 | சின்ன வெங்காயம் | 43,741 | பெரம்பலூர் (7,079 எக்டர்), தூத்துக்குடி (6,215 எக்டர்), திருச்சிராப்பள்ளி (5,395 எக்டர்), நாமக்கல் (4,536 எக்டர்), திண்டுக்கல் (3,460 எக்டர்). |
| 3 | தக்காளி | 38,845 | தருமபுரி (11,507 எக்டர்), கிருஷ்ணகிரி (10,842 எக்டர்), சேலம் (3,751 எக்டர்), திண்டுக்கல் (2,274 எக்டர்), திருப்பூர் (1,877 எக்டர்). |
| 4 | வெண்டை | 22,325 | தருமபுரி (3,614 எக்டர்), சேலம் (2,736 எக்டர்), திருவண்ணாமலை (1,826 எக்டர்), கிருஷ்ணகிரி (1,067 எக்டர்), கள்ளக்குறிச்சி (900 எக்டர்). |


| வ. எண் | காய்கறிகள் | பரப்பு (எக்டர்) | காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 5 | கத்தரி | 21,451 | தருமபுரி (3,342 எக்டர்), சேலம் (2,548 எக்டர்),திருவண்ணாமலை (1,696 எக்டர்), கிருஷ்ணகிரி (1,640 எக்டர்), கள்ளக்குறிச்சி (984 எக்டர்). |
| 6 | இதர காய்கறிகள் | 1,38,842 | கிருஷ்ணகிரி (25,337 எக்டர்), திண்டுக்கல் (16,057 எக்டர்), தருமபுரி (11,549 எக்டர்), சேலம் (8,103 எக்டர்), நீலகிரி (8,086 எக்டர்). |
| **காய்கறிகள் மொத்த சாகுபடிப் பரப்பு = 3,64,036 எக்டர்** | | | |

“மக்கள் நலமும், நல்வாழ்வும் அவர்கள் உண்ணும் உணவைப்பொறுத்தே அமைகிறது. உடல் நலம் பேண, ஊட்டச்சத்து மிக்க உணவினை உரிய அளவில் உட்கொள்வது இன்றியமையாததாகும். ஊட்டச்சத்துக்ளை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள், பயறுவகைகள், சிறுதானியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. ஊட்டச்சத்து வழங்கும் இந்த விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன்,

உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் "**ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்**" என்னும் புதிய திட்டத்தில் 15 இலட்சம் காய்கறி விதைத்தொகுப்புகள் வழங்குதல், 9 இலட்சம் பழச்செடி தொகுப்பு வழங்குதல், 1 இலட்சம் துவரை, காராமணி போன்ற பருப்பு வகை விதைத்தளைகள் வழங்குதல், 4,693 எக்டரில் பழங்கள் பரப்பு விரிவாக்கம், 5,600 எக்டரில் காய்கறி பரப்பு விரிவாக்கம், 500 எக்டரில் பந்தல் காய்கறி சாகுபடி முறையை ஊக்குவித்தல், 5 காளான் உற்பத்திக் கூடங்கள் அமைத்தல், 4000 நடமாடும் விற்பனை வண்டிகள் வழங்குதல், 32,388 எக்டரில் துவரை சாகுபடி பரப்பு விரிவாக்கம், 2.288 இலட்சம் எக்டரில் பயிறு பெருக்கத் திட்டம் ஊக்குவித்தல் போன்ற முக்கிய திட்டக்கூறுகளுடன் இத்திட்டம் தமிழ்நாட்டில் 2025-2026 **ஆம் ஆண்டில் ரூ.125 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.**

## 2.1.3: தோட்டப்பயிர்கள் / மலைப்பயிர்கள் வரைபடம்

### 2.5: தமிழ்நாட்டின் முக்கிய தோட்டப்பயிர்கள்/ மலைப்பயிர்கள்





### அட்டவணை: 2.7: தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2023-24)

| வ. எண் | தோட்டப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | தென்னை | 4,92,614 | கோயம்புத்தூர் (93,226 எக்டர்), திருப்பூர் (78,663 எக்டர்), தஞ்சாவூர் (42,502 எக்டர்), திண்டுக்கல் (30,998 எக்டர்), கன்னியாகுமரி (25,219 எக்டர்). |

| வ. எண் | தோட்டப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 2 | முந்திரி | 83,556 | அரியலூர் (30,537 எக்டர்), கடலூர் (29,343 எக்டர்), புதுக்கோட்டை (5,797 எக்டர்), விழுப்புரம் (3,214 எக்டர்), தேனி (2,904 எக்டர்). |
| 3 | தேயிலை | 69,728 | நீலகிரி (56,010 எக்டர்), கோயம்புத்தூர் (11,194 எக்டர்), தேனி (1,509 எக்டர்), திருநெல்வேலி (804 எக்டர்), கன்னியாகுமரி (208 எக்டர்). |
| 4 | காபி | 33,281 | திண்டுக்கல் (11,281 எக்டர்), நீலகிரி (7,349 எக்டர்), சேலம் (7,131 எக்டர்), தேனி (2,777 எக்டர்), கோயம்புத்தூர் (2,248 எக்டர்). |
| 5 | ரப்பர் | 28,311 | கன்னியாகுமரி (28,144 எக்டர்), தென்காசி (84 எக்டர்) மற்றும் நீலகிரி (49 எக்டர்). |
| 6 | இதர மலைப்பயிர்கள் | 34,400 | சேலம் (7,901 எக்டர்), நாமக்கல் (4,740 எக்டர்), கோயம்புத்தூர் (3,589 எக்டர்), இராமநாதபுரம் (2,697 எக்டர்), தூத்துக்குடி (2,622 எக்டர்). |
| **தோட்டப்பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 7,41,890 எக்டர்** | | | |

### 2.1.4: சுவை தாளிதப் பயிர்கள்

**வரைபடம் 2.6: தமிழ்நாட்டின் முக்கிய சுவை தாளிதப் பயிர்கள்**





**அட்டவணை: 2.8: சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2023-24)**

| வ. எண் | சுவை தாளிதப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | சுவை தாளிதப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மிளகாய் | 48,203 | தூத்துக்குடி (16,019 எக்டர்), இராமநாதபுரம் (15,942 எக்டர்), சிவகங்கை (2,864 எக்டர்), விருதுநகர் (2,013 எக்டர்), திருவண்ணாமலை (1,646 எக்டர்). |

| வ. எண் | சுவை தாளிதப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | சுவை தாளிதப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 2 | மஞ்சள் | 23,148 | தருமபுரி (7,767 எக்டர்), சேலம் (5,204 எக்டர்), ஈரோடு (3,719 எக்டர்), கள்ளக்குறிச்சி (1,934 எக்டர்), நாமக்கல் (1,810 எக்டர்). |
| 3 | புளி | 13,402 | திண்டுக்கல் (3,165 எக்டர்), தேனி (1,495 எக்டர்), மதுரை (1,089 எக்டர்), கிருஷ்ணகிரி (949 எக்டர்), தருமபுரி (894 எக்டர்). |
| 4 | மிளகு | 7,806 | நாமக்கல் (2,622 எக்டர்), சேலம் (1,481 எக்டர்), திண்டுக்கல் (1,469 எக்டர்), நீலகிரி (980 எக்டர்), கன்னியாகுமரி (335 எக்டர்). |
| 5 | கொத்தமல்லி | 5,761 | தூத்துக்குடி (2,212 எக்டர்), இராமநாதபுரம் (1,445 எக்டர்), விருதுநகர் (1,138 எக்டர்), தருமபுரி (309 எக்டர்), திருப்பத்தூர் (230 எக்டர்). |
| 6 | இதர சுவை தாளிதப் பயிர்கள் | 11,875 | கோயம்புத்தூர் (2,187 எக்டர்), நீலகிரி (1,816 எக்டர்), தேனி (1,629 எக்டர்), திண்டுக்கல் (1,469 எக்டர்), கிருஷ்ணகிரி (1,385 எக்டர்). |
| **சுவை தாளிதப் பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 1,10,195 எக்டர்** | | | |

## 2.1.5: மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள்

### வரைபடம் 2.7: தமிழ்நாட்டின் முக்கிய மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள்





### அட்டவணை: 2.9: மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2023-24)

| வ. எண் | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | கண்வலிக்கிழங்கு | 5,938 | திண்டுக்கல் (3,003 எக்டர்), திருப்பூர் (2,254 எக்டர்), கரூர் (623 எக்டர்), திருச்சிராப்பள்ளி (30 எக்டர்), நாமக்கல் (16 எக்டர்). |

| வ. எண் | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 2 | மருந்துக் கூர்க்கன் | 1,385 | திருவண்ணாமலை (593 எக்டர்), கள்ளக்குறிச்சி (369 எக்டர்), சேலம் (295 எக்டர்), திருச்சிராப்பள்ளி (34 எக்டர்), நாமக்கல் (29 எக்டர்). |
| 3 | பால்மரோசா | 503 | தருமபுரி (209 எக்டர்), திருவண்ணாமலை (198 எக்டர்), கள்ளக்குறிச்சி (53 எக்டர்), விழுப்புரம் (16 எக்டர்), தூத்துக்குடி (10 எக்டர்). |
| 4 | எலுமிச்சைப் புல் | 444 | திருவண்ணாமலை (415 எக்டர்), தேனி (11 எக்டர்), கடலூர் (5 எக்டர்). |
| 5 | நீல அவுரி | 340 | விழுப்புரம் (328 எக்டர்), தருமபுரி (5 எக்டர்), திருவண்ணாமலை (2 எக்டர்), கடலூர் (2 எக்டர்), செங்கல்பட்டு (2 எக்டர்). |
| 6 | இதர பயிர்கள் | 3,661 | விருதுநகர் (865 எக்டர்), தூத்துக்குடி (478 எக்டர்), மதுரை (308 எக்டர்), திருநெல்வேலி (234 எக்டர்), திண்டுக்கல் (196 எக்டர்). |
| **மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 12,271 எக்டர்** | | | |

### 2.1.6: மலர்கள்

**வரைபடம் 2.8: தமிழ்நாட்டின் முக்கிய மலர்கள்**




**அட்டவணை: 2.10: மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2023-24)**

| வ. எண் | மலர்கள் | பரப்பு (எக்டர்) | மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மல்லிகை | 17,103 | மதுரை (1,849 எக்டர்), தருமபுரி (1,324 எக்டர்), திண்டுக்கல் (1,311 எக்டர்), திருவண்ணாமலை (1,249 எக்டர்), திருவள்ளூர் (1,239 எக்டர்). |
| 2 | செவ்வந்தி | 10,275 | கிருஷ்ணகிரி (4,180 எக்டர்), தருமபுரி (3,149 எக்டர்), சேலம் (1,591 எக்டர்), திருவண்ணாமலை (435 எக்டர்), திண்டுக்கல் (135 எக்டர்). |

| வ. எண் | மலர்கள் | பரப்பு (எக்டர்) | மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 3 | சம்பங்கி | 6,686 | தருமபுரி (2,457 எக்டர்), திருவண்ணாமலை (1,380 எக்டர்), ஈரோடு (560 எக்டர்), திண்டுக்கல் (294 எக்டர்), மதுரை (194 எக்டர்). |
| 4 | ரோஜா | 3,992 | கிருஷ்ணகிரி (1,838 எக்டர்), தருமபுரி (557 எக்டர்), திருவண்ணாமலை (253 எக்டர்), சேலம் (196 எக்டர்), திண்டுக்கல் (183 எக்டர்). |
| 5 | சாமந்தி | 3,879 | கிருஷ்ணகிரி (2,032 எக்டர்), திருவண்ணாமலை (563 எக்டர்), தருமபுரி (362 எக்டர்), ஈரோடு (129 எக்டர்), தேனி (103 எக்டர்). |
| 6 | இதர மலர்கள் | 4,810 | சேலம் (1,592 எக்டர்), தருமபுரி (895 எக்டர்), திண்டுக்கல் (866 எக்டர்), திருவண்ணாமலை (794 எக்டர்), நாமக்கல் (539 எக்டர்). |
| **மலர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 46,745 எக்டர்** | | | |

## 2.2. ஒன்றிய, மாநில நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 2.2.1: துளி நீரில் அதிக பயிர் - தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்

பயிர் சாகுபடிப் பரப்பினை உயர்த்துவதில் பாசன நீர் உரிய அளவில் கிடைக்கச் செய்வது இன்றியமையாததாகும். நிலத்தடி நீரின் செறிவூட்டலை அதிகரித்தும் பாசனநீரின் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தும் சாகுபடிப் பரப்பினை உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென, '**துளி நீரில் அதிக பயிர்**' **திட்டம்** செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்செயல்பாட்டின் மூலம் பாசன நீரை திறம்பட பயன்படுத்தி சாகுபடிப்பரப்பு அதிகரிக்கப்படுவதோடு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனும் உயர்கின்றன.

இத்திட்டத்தினைப் பெருமளவு ஊக்கப்படுத்தும் விதமாக, மாநில அரசு சிறு/குறு விவசாயிகளுக்கு

100% மானியமும் இதர விவசாயிகளுக்கு 75% மானியம் வழங்க ஏதுவாக கூடுதல் நிதி அளித்து வருகிறது. இதனுடன் நுண்ணீர்ப் பாசன அமைப்புகளுக்கான 12% சரக்கு மற்றும் சேவை வரியையும் அனைத்து விவசாயிகளுக்கும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

2024-25 ஆம் ஆண்டில் துளி நீரில் அதிக பயிர் திட்டம் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் (RKVY) கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 3,91,507 எக்டர் பரப்பளவில் ரூ.3102.69 கோடி நிதி செலவில் 3,95,852 விவசாயிகளுக்கு நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டில் ரூ.1173.25 கோடி நிதியில் 1,20,030 எக்டர் பரப்பில் 1,31,040 விவசாயிகள் பயனடையும் வகையில் கீழ்க்கண்ட பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

1. 1,20,000 எக்டர் பரப்பில் 1,30,000 விவசாயிகளுக்கு நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவுதல்.

2. வன உரிமைச்சட்டத்தின் மூலம் பட்டா பெற்ற 40 விவசாயிகளுக்கு 30 எக்டர் பரப்பில் நுண்ணீர்ப் பாசனம் நிறுவுதல்.
3. விவசாயிகள் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவுவதை ஊக்குவிக்கும் வகையில் நீர் ஆதாரங்களான ஆழ்துளைக் கிணறு, நீர் செலுத்தும் குழாய், மின் மோட்டார் மற்றும் நீர் சேகரிப்புக் குட்டைகள் அமைப்பதற்கு 50% மானியம் வழங்குதல்.

**2.2.2: தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)**

இத்திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத்தின் துணைத் திட்டமாக 2014-15 ஆம் ஆண்டு முதல் 60:40 என்ற ஒன்றிய, மாநில அரசு நிதி பங்களிப்புடன் 26 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வந்தது. 2022-23 ஆம் ஆண்டு முதல் வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் (Krishonnati Yojana) கீழ் செயல்படுத்தப்பட்டு வரும்

இத்திட்டம், **2025-26 ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்**

2024-25 ஆம் ஆண்டில், 133.33 கோடி ரூபாய் நிதியில் 67,888 விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் ரூ.25.97 கோடி நிதியில், தோட்டக்கலை பயிர்களில் 12,925 எக்டரில் பரப்பு விரிவாக்கமும், 500 எக்டரில் இயற்கை முறையில் பயிர் சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டு காளான் உற்பத்திக்கூடங்கள் ரூ.0.16 கோடி நிதியில் அமைக்கப்பட்டு வருகின்றன. 500 தனிநபர்களுக்கு நீர் சேமிப்பு அமைப்புகள் ரூ.3.75 கோடி நிதியில் உருவாக்கப்பட்டுள்ளன. பாதுகாக்கப்பட்ட சூழல் பயிர் சாகுபடி, ரூ.14.83 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அறுவடைக்குப் பிந்தைய இழப்பினைக் குறைப்பதற்காக ஒருங்கிணைந்த அறுவடைப் பின்செய் மேலாண்மை சார்ந்த கட்டமைப்புகள் ரூ.40.28 கோடி நிதியில் உருவாக்கப்பட்டு வருகின்றன.

2025-26 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடி, காளான் வளர்ப்பு, நீர் சேமிப்பு அமைப்புகள் உருவாக்குதல், மகரந்த சேர்க்கையை தேனீ வளர்ப்பின் மூலம் ஊக்குவித்தல், பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல், அறுவடைப் பின்செய் மேலாண்மை ஆகிய இனங்களுடன் ரூ.136.66 கோடி நிதியில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.3: பிரதம மந்திரியின் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (PM RKVY)- விரிவான திட்ட அறிக்கைகள் அடிப்படையிலான திட்டம் (DPR based projects)

உழவர்களின் புதிய திட்டங்களுக்கு ஊக்கமளித்தல், இடுபொருட்கள் வழங்குதல், புதிய கட்டமைப்புகளை நிறுவுதல், புதிய தோட்டக்கலை உத்திகளை பரவலாக்குதல், எதிர்பாரா இடர்பாடுகளை எதிர்கொள்ளுதல், தோட்டக்கலைப்பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல்

முதலியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.37.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் 6,289 எக்டரிலும், சிறப்பு தோட்டக்கலைப் பயிர்களான டிராகன் பழம், கொடுக்காய்ப்புளி, அத்தி, விளாம்பழம் மற்றும் இலந்தை ஆகியன 74 எக்டர் பரப்பளவிலும் சாகுபடி செய்ய மானியம் வழங்கப்படுகிறது. வாழை சாகுபடியை ஊக்குவித்து தரமான வாழைப்பழங்களைப் பெற, வாழைத்தார் உறைகள் 750 எக்டர் பரப்பளவிலும், வாழை மரங்களை சூறாவளிக் காற்றிலிருந்து பாதுகாக்க முட்டுக்கொடுத்தல் 1,200 எக்டர் பரப்பளவிலும் மேற்கொள்ளப்படுகின்றன. மல்லிகை மலர்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்க 200 எண்கள் காற்றோட்டமான நெளி இழை அட்டைப்

பெட்டிகள் மல்லிகை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

பந்தல் காய்கறிகள் மற்றும் திராட்சை சாகுபடி செய்ய ஏதுவாக 575 எக்டர் பரப்பளவில் நிரந்தரப் பந்தலும், பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடி செய்ய 19,000 சதுர மீட்டர் அளவில் பசுமைக்குடில் மற்றும் நிழல்வலைக் கூடாரங்களும் அமைக்கப்படுகின்றன. 290 எக்டரில் மா மற்றும் முந்திரிப் பயிர்களில் உள்ள பழைய தோட்டங்களைப் புதுப்பித்தலும், 30 எண்கள் தேனீ பெட்டிகள் விநியோகமும் செய்யப்படுகிறது. மாதவரத்தில் தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையத்தில் பயிலும் பெண்களுக்கு ரூ.4 கோடி நிதியில் விடுதி அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.34.85 கோடி நிதியில் செயல்படுத்தப்படும். தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், ரூ.16.65 கோடி ஒதுக்கீட்டில் 6,773 எக்டரில் செயல்படுத்தப்படும். இதில், பழப்பயிர்கள் மற்றும் காய்கறிப் பயிர்கள்

முறையே 1,913 எக்டர் மற்றும் 2,930 எக்டரில் ஊக்குவிக்கப்படும். தரமான கொடிவகை காய்கறிகளை உற்பத்தி செய்திட 540 எக்டர் பரப்பில், ரூ.16.20 கோடி நிதியில் நிரந்தரப் பந்தல் அமைக்கப்படும். திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்தில் உள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மைய வளாகத்தில் கல்வி மற்றும் ஆய்வகக் கட்டடம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

**2.2.4: மானாவாரிப் பகுதி மேம்பாடு (RAD) திட்டம்**

இயற்கை வளங்களைப் பாதுகாத்து அவற்றின் நிலையான பயன்பாட்டை உறுதி செய்வதற்கும், வேளாண் உற்பத்தி முறைகளை வலுப்படுத்துவதற்கும், இடம் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் முறையை ஊக்குவிப்பதன் மூலம் விவசாயத்தை அதிக உற்பத்தித்திறன் கொண்ட, நிலையான, இலாபகரமான மற்றும் காலநிலைக்கு ஏற்றதாக மாற்றுவதும் அதன் மூலம் விவசாயிகளின்

வாழ்வாதாரத்தை மேம்பாடுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2024-25 ஆம் ஆண்டில், மானாவாரிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒருங்கிணைந்த பண்ணையம் செங்கல்பட்டு, கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், புதுக்கோட்டை, இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தென்காசி, தேனி, திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருநெல்வேலி, திருச்சி, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம், விருதுநகர் ஆகிய 25 மாவட்டங்களில் ரூ12.04 கோடி நிதியில், கறவை மாடு / ஆடு வளர்ப்பு, மண்புழு உரப்படுக்கைகள், தேன் பெட்டி, காய்கறி விதைகள், பழச்செடிகள் போன்றவை அடங்கிய அலகுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 4,000 விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர்.

2025-26 ஆம் ஆண்டில், ரூ.20.81 கோடி நிதியில் 6,860 ஒருங்கிணைந்த பண்ணைய அலகுகள்

அமைத்து 6,860 விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**2.2.5. மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம் (CDP):**

இத்திட்டத்தில் புகையிலைப் பயிருக்கு மாற்றுப் பயிராக, காய்கறிகளைப் பயிரிடுவதற்கு விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

2024-25-ஆம் ஆண்டில் ரூ.13.33 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 66.65 எக்டர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2025-26 ஆம் ஆண்டிலும் ரூ.13.33 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 66.65 எக்டர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**2.2.6. வேளாண் காடுகள் (Agro Forestry) :**

2023-24 ஆம் ஆண்டு முதல் வேளாண் காடுகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண் காடுகளின் பரப்பினை அதிகரித்து, கால்நடைகள் மற்றும் இதர பயிர்களின் சாகுபடியை ஒருங்கிணைத்து உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், கிராமங்களில் வேலை வாய்ப்பினை ஊக்குவிக்கவும்,

வருமானத்தைப் பெருக்கவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது. 2024-25-ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.3.28 கோடி நிதி ஒதுக்கீட்டில் உயர் தொழில்நுட்ப நாற்றங்கால் (ரூ.100 இலட்சம்) பெரிய நாற்றங்கால் (ரூ.48 இலட்சம்) சிறிய நாற்றங்கால் (ரூ. 40 இலட்சம்), ஏற்கனவே உள்ள நாற்றங்கால் பண்ணைகளில் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து வழங்குதல் (ரூ.135 இலட்சம்) ஆகிய திட்டக்கூறுகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2025-26 – ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.5.12 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

**2.2.7. பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (PKVY):**

2024-25 ஆம் ஆண்டில், உயிர்ம வேளாண்மைக் (PKVY) குழுக்களுக்கு இரண்டாம் ஆண்டு தொடர்திட்டம், முன்னேற்றத்தை நாடும் மாவட்டங்களான விருதுநகர், இராமநாதபுரம் ஆகியவற்றில் உருவாக்கப்பட்ட உயிர்ம வேளாண்மைக் குழுக்கள் மற்றும் இயற்கை வேளாண் (ZBNF) குழுக்களுக்கு இரண்டாம் மற்றும் மூன்றாம்

ஆண்டுகளுக்கான தொடர் திட்டம், இயற்கை வேளாண்மை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 2 ஆம் ஆண்டு உயிர்ம வேளாண்மைச்சான்றிதழ் கட்டணங்களுக்கான நிதி ஆகிய இனங்கள் ரூ.6.19 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2025-26 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.5.63 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

**2.2.8: தேசிய மூங்கில் இயக்கம் (NBM)**

வனமல்லாத அரசு நிலங்களிலும், தனியார் நிலங்களிலும் மூங்கில் தோட்டங்களின் பரப்பளவை அதிகரிக்கச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே 60:40 விகித நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில் ரூ.1.41 கோடி நிதியில் 421 எக்டரில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2025-26 ஆம் நிதி ஆண்டில் ரூ.2 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**2.2.9.: தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் – எண்ணெய்ப் பனை (NMEO-OP)**

தேசிய சமையல் எண்ணெய் இயக்கம்-எண்ணெய்ப்பனைத் திட்டம், தமிழ்நாட்டில் சமையல் எண்ணெய்ப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரித்திடும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எண்ணெய்ப்பனை பராமரிப்பிற்காகவும், எண்ணெய்ப்பனையில் ஊடுபயிருக்காகவும் முதல் நான்கு ஆண்டுகளுக்கு இத்திட்டத்தில் மானியம் வழங்கப்படுகிறது. மேலும், ஆழ்துளைக்கிணறு அமைத்தல், டீசல்/ மின்சார பம்புசெட்டுகள், எண்ணெய்ப்பனை பழக்குலைகளை அறுவடை செய்ய கருவிகள் உபகரணங்கள் ஆகியவற்றிற்கும் இத்திட்டத்தில் 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் ஐந்தாம் ஆண்டிலிருந்து 8 அல்லது 8 மெட்ரிக் டன்னிற்கு மேல் எண்ணெய்ப்பனை பழக்குலை உற்பத்தி செய்யும்

விவசாயிகளுக்கு உற்பத்தி மானியமாக ஒரு மெட்ரிக் டன்னிற்கு ரூபாய் 1000/- ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

2024-25-ம் ஆண்டில், ரூ.4.11 கோடி நிதி பெறப்பட்டு, இதுவரை 152 எக்டர் பரப்பளவில் எண்ணெய்ப்பனை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2025-26 ஆம் ஆண்டில், ரூ.1.75 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**2.2.10. ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம்**

தமிழ்நாட்டில் தென்னை 4.727 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு 67,989 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் மாநிலத் திட்டங்கள் தென்னையில் உற்பத்தி, உற்பத்தித்திறனை உயர்த்தும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2024-25 ஆம் ஆண்டில் தென்னை வளர்ச்சி வாரிய திட்டத்தில் செயல் விளக்கத்திடல்கள் அமைத்தல்,

தென்னந்தோப்பில் மறுநடவு மற்றும் புத்தாக்கம், மண்டல தென்னை நாற்றுப்பண்ணைகள் அமைத்தல் ஆகிய இனங்கள் ரூ.21.37 கோடி நிதி செலவினத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தென்னை வளர்ச்சி வாரியத் திட்டங்கள் வரும் 2025-26 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தென்னையில் ஏற்படும் பல்வேறு பூச்சி நோய் தாக்குதல்களால் மகசூல் குறைவதால் தென்னை உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் குறைகிறது. அதில் முக்கியமானது தென்னை வேர்வாடல் நோய் ஆகும். இந்நோய் கேரள மாநிலத்திற்கு அருகில் உள்ள மாவட்டங்களில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியது. தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தென்னை வேர் வாடல் நோய் மீட்பு திட்டத்தினை 2023-24 மற்றும் 2024-25 ஆம் ஆண்டு 4,500 எக்டர் பரப்பில் ரூ.21.14 கோடி நிதி செலவினத்தில் செயல்படுத்திட அறிவித்தார்கள். இத்திட்டத்தில் நோய் தாக்கிய மரங்களை வெட்டி அகற்றுதல்,

தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்குதல் மற்றும் நோய் தாக்கிய தென்னந்தோப்புகளை புத்தாக்கம் செய்ய இடுபொருட்கள் வழங்குதல் ஆகிய இனங்கள் தற்போது வரை 3,943 எக்டர் பரப்பில் ரூ.17.83 கோடி நிதி செலவினத்தில் கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தென்னை சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயிகள் விருப்பத்தின்படி நெட்டை, நெட்டை x குட்டை, குட்டை x நெட்டை இரக தென்னங்கன்றுகள் பரப்பு விரிவாக்கம், 2025-2026 ஆம் ஆண்டு 9,800 ஏக்கர் பரப்பில் ரூ.4.80 கோடி நிதியில் செயல்படுத்தப்படும். கூடுதலாக வருவாய் ஈட்டும் வகையில் தென்னந்தோப்புகளில் வாழை, ஜாதிக்காய், மிளகு போன்ற பயிர்களின் ஊடுபயிர் சாகுபடி 8,000 ஏக்கர் பரப்பில் ரூ.3.23 கோடி நிதியில் ஊக்குவிக்கப்படும். தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதலை ஒருங்கிணைந்த

முறையில் கட்டுப்படுத்திட விவசாயிகளுக்கு மஞ்சள் ஒட்டுப் பொறி, ஒட்டுண்ணி/இறைவிழுங்கி அட்டைகள் 50% மானியத்தில் வழங்கப்படும். இத்திட்டம், 1.68 இலட்சம் ஏக்கரில், 1.20 இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.12.07 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

மேலும், 2025-26 ஆம் ஆண்டில் தென்னை வளர்ச்சி வாரிய திட்டத்தின் கீழ் தென்னந்தோப்புகளில் மறுநடவு மற்றும் புத்தாக்கம் செய்தல், விவசாயிகளின் வயல்களில் செயல்விளக்கத்திடல் அமைத்தல் ஆகிய திட்ட இனங்கள் ரூ.10.70 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

**2.2.11. தோட்டக்கலைப் பயிர்களுக்கான பயிர்க் காப்பீடு:**

காலநிலை மாற்றங்களால் தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூல் பாதிப்படைந்து விவசாயிகள் கணிசமான நிதி இழப்பினை எதிர்கொள்கின்றனர். எதிர்பாராத இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்படும் பயிர் இழப்பினை

விவசாயிகள் ஈடுசெய்யும் வகையில் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பயிர்காப்பீட்டுத் திட்டமானது காரீப், சிறப்பு, இராபி ஆகிய பருவங்களில் செயல்படுத்தப்பட்டு வாழை, கத்தரி, வெண்டை, முட்டைக்கோஸ், கேரட், தேங்காய், கொத்தமல்லி, பூண்டு, இஞ்சி, வெங்காயம், உருளை, மிளகாய், தக்காளி, மரவள்ளி மற்றும் மஞ்சள் ஆகிய 15 தோட்டக்கலைப் பயிர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில் ரூ.56.88 கோடி மதிப்பீட்டில் 99,265 ஏக்கர் பரப்பிலான தோட்டக்கலைப் பயிர்களுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழையால் வெங்காயம், கொத்தமல்லி, மிளகாய் மற்றும் வாழைப் பயிர்களில் பெரும் இழப்பு ஏற்பட்டது. இவ்விழப்பினை ஈடு செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு இழப்பீட்டு தொகையாக ரூ.18.97 கோடி நிதியினை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது.

2025-26 ஆம் ஆண்டில் இத்திட்டம் உத்தேசமாக ரூ.85.32 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களில் செயல்படுத்தப்படும்.

**2.3. மாநிலத் திட்டங்கள்**

**2.3.1: மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS)**

2024-25 ஆம் ஆண்டு மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டமானது, தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், குறைவான இடவசதியினை உடைய நகர்ப்புறங்களில் காய்கறி தேவையை நிறைவு செய்யும் பொருட்டு மாடித்தோட்டத் தளைகள் வழங்குதல், ஹைட்ரோபோனிக்ஸ் மற்றும் செங்குத்துத் தோட்டங்களை ஊக்குவித்தல், உயர் தொழில்நுட்ப முறைகளான பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் வளர்ப்பு, ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவித்தல், குறைந்த செலவிலான வெங்காய சேமிப்புக் கிடங்குகள் அமைத்தல், சீமைக்கருவேல மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடி செய்தல், காளான் வளர்ப்புக் கூடம் அமைத்தல், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் மூலம் ஊட்டச்சத்து

தளைகள் வழங்குதல் மற்றும் கோடைக்காலத்தில் நிழல்வலைக் குடில் அமைத்து காய்கறிகள் சாகுபடியினை ஊக்குவித்தல், நீலகிரியில் அங்கக வேளாண்மையை ஊக்குவித்தல் போன்ற முக்கிய திட்டக்கூறுகளுடன் இத்திட்டம் 100 சதவீத மாநில அரசின் பங்களிப்புடன் ரூ. 34.22 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2025-26 ஆம் நிதியாண்டில், தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், மாடித்தோட்டத் தளைகள் வழங்குதல், பலாவில் ஊடுபயிராக காய்கறிகள் சாகுபடியை ஊக்குவித்தல் மற்றும் சீமைக்கருவேல மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடி செய்தல் போன்ற திட்டக்கூறுகளுடன் ரூ.26.075 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 2.3.2: கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் (KAVIADP)

ஐந்தாண்டு காலத்தில் அனைத்து கிராமங்களிலும், வேளாண்மையில் ஒட்டுமொத்த

வளர்ச்சியை உறுதி செய்வதுடன், வேளாண்மையில் தன்னிறைவு அடையும் பொருட்டு கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் 2021-22 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் சந்தைகளில் காய்கறிகள் வரத்தினை அதிகரிக்க காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல், பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், ஊட்டச்சத்து தன்னிறைவை மேம்படுத்த பழச்செடித் தொகுப்புகள் வழங்குதல் போன்ற திட்டக்கூறுகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் 2024-25 ஆம் நிதியாண்டில், 2,482 கிராமங்களில் ரூ.15.20 கோடி நிதியில் தோட்டக்கலைப் பயிர்கள் சார்ந்த இனங்கள் செயல்படுத்தப்பட்டன.

மேலும், தோட்டக்கலைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் நுண்ணீர் பாசனத் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சித்

திட்டம், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், போன்ற பல்வேறு திட்டங்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2025-26 ஆம் ஆண்டில் இத்திட்டம் 2,338 கிராமங்களில், சந்தைகளில் காய்கறிகள் வரத்தினை அதிகரிக்க காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல், பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், ஊட்டச்சத்து தன்னிறைவை மேம்படுத்த பழச்செடி தொகுப்புகள் வழங்குதல் மற்றும் தென்னங்கன்றுகள் வழங்குதல் போன்ற திட்டக்கூறுகளுடன் ரூ. 21.66 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

**2.3.3.: பனை மேம்பாட்டு இயக்கம் (Palmyra Development Mission)**

பனை மரங்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கவும், பனை பொருட்களின் மதிப்புக் கூட்டலை ஊக்குவித்து வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும் பனை மேம்பாட்டு இயக்கம் 2021-22 ஆம்

ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2024-25 ஆம் ஆண்டில் ரூ. 1.21 கோடி நிதியில் (ரூ. 0.68 கோடி தோட்டக்கலை துறை மூலமும், ரூ.0.53 கோடி பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலமும்) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பனை விதைகள் விநியோகம், பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல் போன்ற திட்டக்கூறுகள் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க பயிற்சியும் உபகரணங்களும் வழங்குதல், பெண்களுக்குப் பனை ஓலையில் இருந்து பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும் கருவிகளும் வழங்குதல் போன்ற திட்டக்கூறுகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2025-26 ஆம் ஆண்டில் ரூ.1.75 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 2.4. நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)

2023-24 ஆம் நிதியாண்டில், 8,550 எக்டர் பரப்பளவில் அங்கக தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி மற்றும் 1,29,020 எக்டர் பரப்பளவிற்கு நுண்ணீர் பாசன அமைப்புகள் ஆகிய நிலையான வளர்ச்சி இலக்குக்கான குறியீடுகள் அடையப்பெற்றுள்ளன.

மேலும், இலக்குகளில் கோரப்பட்ட 93.33 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகள், 77.33 இலட்சம் மெட்ரிக் டன் பழங்கள் மற்றும் 3.79 இலட்சம் மெட்ரிக் டன் வாசனை மற்றும் சுவைதாளிதப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## 2.5.: தோட்டக்கலைத்துறையின் கட்டமைப்பு வசதிகள்

### 2.5.1: அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

தமிழ்நாட்டில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் 37 மாவட்டங்களில், 73 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன

**அட்டவணை 2.11.: மாநிலத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்**

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | கீழப்பழுவூர் | 2018 | 7.580 |
| 2 | சென்னை | மாதவரம் | 1980 | 2.020 |
| 3 | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி | 1986 | 12.000 |
| 4 | கோயம்புத்தூர் | கண்ணம்பாளையம் | 2001 | 11.200 |
| 5 | கடலூர் | விருதாச்சலம் | 1975 | 10.430 |
| 6 | கடலூர் | நெய்வேலி | 1985 | 39.530 |
| 7 | தருமபுரி | போலயம்பள்ளி | 2013 | 2.730 |
| 8 | தருமபுரி | வட்டார நாற்றங்கால் மையம், தருமபுரி | 2020 | 0.250 |
| 9 | திண்டுக்கல் | சந்தையூர் | 2018 | 15.190 |
| 10 | திண்டுக்கல் | சிறுமலை | 1980 | 56.400 |
| 11 | ஈரோடு | பகுதம்பாளையம் | 2018 | 10.000 |
| 12 | செங்கல்பட்டு | ஆத்தூர் | 1961 | 12.240 |
| 13 | கள்ளக்குறிச்சி | அ. சாத்தனூர் | 2018 | 10.000 |
| 14 | காஞ்சிபுரம் | விச்சந்தாங்கல் | 1982 | 23.250 |
| 15 | காஞ்சிபுரம் | மேல்கதிர்பூர் | 1982 | 42.630 |
| 16 | காஞ்சிபுரம் | மேலொட்டிவாக்கம் | 1982 | 20.600 |
| 17 | காஞ்சிபுரம் | பிச்சிவாக்கம் | 1982 | 34.000 |
| 18 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 1922 | 6.570 |
| 19 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை | 1967 | 6.000 |

| வ. எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்-பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 20 | கரூர் | முதலைப்பட்டி | 1978 | 24.250 |
| 21 | கிருஷ்ணகிரி | திம்மாபுரம் | 1952 | 9.620 |
| 22 | கிருஷ்ணகிரி | ஜீனூர் | 1980 | 123.445 |
| 23 | மதுரை | பூஞ்சுத்தி | 2012 | 5.765 |
| 24 | நாகப்பட்டினம் | வண்டுவாஞ்சேரி | 2018 | 6.540 |
| 25 | நாகப்பட்டினம் | புஷ்பவனம் | 2021 | 9.920 |
| 26 | நாமக்கல் | செம்மேடு | 1974 | 11.100 |
| 27 | நாமக்கல் | படசோலை | 1989 | 22.670 |
| 28 | பெரம்பலூர் | வெங்கலம் | 2018 | 4.720 |
| 29 | புதுக்கோட்டை | குடுமியான்மலை | 1974 | 118.680 |
| 30 | புதுக்கோட்டை | வல்லத்திராக் கோட்டை | 1977 | 521.200 |
| 31 | புதுக்கோட்டை | நாட்டுமங்கலம் | 1985 | 53.020 |
| 32 | இராமநாதபுரம் | ஓரியூர் | 2013 | 14.770 |
| 33 | இராணிப்பேட்டை | நவ்லாக் | 1981 | 85.400 |
| 34 | சேலம் | மாபெரும் பழப்பண்ணை கருமந்துறை | 1981 | 419.770 |
| 35 | சேலம் | மணியார்குன்றம் | 1982 | 100.00 |
| 36 | சேலம் | அ.தோ.ப. கருமந்துறை | 1981 | 39.350 |
| 37 | சேலம் | முள்ளுவாடி | 1985 | 48.400 |

| வ. எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 38 | சேலம் | சிறுமலை | 1987 | 8.000 |
| 39 | சேலம் | ஏற்காடு | 1975 | 4.052 |
| 40 | சிவகங்கை | தேவக்கோட்டை | 1985 | 81.190 |
| 41 | சிவகங்கை | நேமம் | 1979 | 38.770 |
| 42 | சிவகங்கை | கிளாதரி | 2019 | 12.810 |
| 43 | தஞ்சாவூர் | ஆடுதுறை | 1988 | 8.800 |
| 44 | தஞ்சாவூர் | மருங்குளம் | 1966 | 10.770 |
| 45 | தேனி | பெரியகுளம் | 1950 | 9.310 |
| 46 | தூத்துக்குடி | கீழவல்லநாடு | 2019 | 2.668 |
| 47 | திருநெல்வேலி | வன்னிக் கோனேந்தல் | 2018 | 9.850 |
| 48 | திருப்பூர் | சங்கராமநல்லூர் | 2018 | 10.120 |
| 49 | திருவாரூர் | மூவாநல்லூர் | 2018 | 5.825 |
| 50 | திருவள்ளூர் | ஈக்காடு கண்டிகை | 2020 | 3.620 |
| 51 | திருவண்ணா மலை | புதூர்செக்கடி | 2018 | 12.760 |
| 52 | திருவண்ணா மலை | வட்டார நாற்றங்கால் பண்ணை, ஜமுனாமரத்தூர் | 2019 | 0.680 |
| 53 | திருவண்ணா மலை | வட்டார நாற்றங்கால் பண்ணை, போளூர் | 2020 | 1.520 |
| 54 | திருப்பத்தூர் | கூடப்பட்டு | 1961 | 10.080 |
| 55 | திருப்பத்தூர் | தகரக்குப்பம் | 1985 | 34.400 |

| வ. எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்-பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 56 | திருச்சிராப்பள்ளி | தொரக்குடி | 2013 | 12.340 |
| 57 | வேலூர் | அகரம்சேரி | 2020 | 34.530 |
| 58 | விருதுநகர் | பூவானி | 1967 | 9.460 |
| 59 | விருதுநகர் | ஸ்ரீவில்லிப்புத்தூர் | 1982 | 46.270 |
| 60 | விருதுநகர் | ஆதித்தநேந்தல் | 2020 | 0.810 |
| 61 | விழுப்புரம் | இலவலப்பாக்கம் | 2021 | 7.000 |
| 62 | கொடைக்கானல் | தாண்டிக்குடி | 1985 | 5.450 |
| 63 | கொடைக்கானல் | அ.தோ.ப. கொடைக்கானல் | 1961 | 1.650 |
| 64 | நீலகிரி | கல்லார் | 1900 | 8.920 |
| 65 | நீலகிரி | பர்லியார் | 1871 | 6.250 |
| 66 | நீலகிரி | தேவாலா | 1978 | 80.000 |
| 67 | நீலகிரி | பழவியல் நிலையம், குன்னூர் | 1948 | 10.460 |
| 68 | நீலகிரி | தும்மனட்டி | 1956 | 9.800 |
| 69 | நீலகிரி | நஞ்சநாடு | 1917 | 64.000 |
| 70 | நீலகிரி | கோல்கிரைன் | 1989 | 20.400 |
| 71 | நீலகிரி | பழப் பதனிடும் நிலையம், குன்னூர் | 1965 | 0.100 |
| 72 | நீலகிரி | காட்டேரி | 1974 | 16.956 |
| 73 | நீலகிரி | தொட்டபெட்டா | 1969 | 2.520 |
| | | **மொத்தம்** | | **2543.356** |

இப்பண்ணைகளில், தோட்டக்கலைப் பயிர்களின் இனத்தூய்மையான, தரமான நடவுச்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் நியாயமான விலையில் விநியோகம் செய்யப்படுகின்றன. இப்பண்ணைகள் விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை விளக்கும் மாதிரி செயல் விளக்கப் பண்ணைகளாக விளங்குவதுடன், நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினையும் அளித்து வருகின்றன.

2024-25 ஆம் ஆண்டில், அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் 21.45 கோடி நடவுச்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் காய்கறி, மலர் நாற்றுகள் மட்டும் 18.23 கோடி எண்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இது தவிர, 159.60 மெட்ரிக் டன் உண்மை நிலை (Truthfuly labelled) காய்கறி விதைகள், ஆதாரநிலை விதைகள், பாரம்பரிய (Traditional) காய்கறி

விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும், 674 மெ.டன் மண்புழு உரம், 52 மெ.டன் உயிர் கட்டுப்பாட்டு காரணிகள் மற்றும் 8.60 மெ.டன் உயிர் உரங்கள் ஆகியவையும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்டு பண்ணைகளுக்கும் விவசாயிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2025-26 ஆம் ஆண்டில் 18 கோடி குழித்தட்டு காய்கறி மற்றும் மலர் நாற்றுகள் உள்ளிட்ட 22 கோடி நடவுச்செடிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது, மேலும், 300 மெட்ரிக் டன் உண்மை நிலை (Truthfuly labelled) காய்கறி விதைகள், ஆதாரநிலை விதைகள் மற்றும் பாரம்பரிய (Traditional) காய்கறி விதைகள், 1,200 மெ.டன் மண்புழு உரம், 100 மெ.டன் உயிர் கட்டுப்பாட்டு காரணிகள், உயிர் உரங்கள் ஆகியவற்றையும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலும் பூங்காக்களிலும் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 2.5.2: பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள்

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, எட்டு மாவட்டங்களில் 24 பூங்காக்களை பராமரித்து வருகிறது. இவை பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு மையங்களாகவும், மாணவர்களுக்கு பயிலிடங்களாகவும் விளங்குகின்றன

**அட்டவணை 2.12.: மாநிலத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பூங்காக்கள்**

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | தோட்டக்கலைப் பூங்கா, மாதவரம் | 2018 | 8.700 |
| 2 | சென்னை | செம்மொழிப் பூங்கா, சென்னை | 2010 | 3.640 |
| 3 | சென்னை | பாரம்பரியப்பூங்கா, வண்ணாரப் பேட்டை | 2021 | 1.560 |
| 4 | சென்னை | கலைஞர் நூற்றாண்டு பூங்கா | 2024 | 5.287 |
| 5 | கன்னியாகுமரி | சுற்றுச்சூழல் பூங்கா, கன்னியாகுமரி | 2018 | 6.070 |

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 6 | இராமநாதபுரம் | பாலை மரபணுப் பூங்கா, அச்சடிபிரம்பு | 2015 | 10.000 |
| 7 | சேலம் | ரோஜா தோட்டம், ஏற்காடு | 2005 | 2.000 |
| 8 | சேலம் | மரபியல் பூங்கா | 2012 | 9.608 |
| 9 | சேலம் | அண்ணா பூங்கா, ஏற்காடு | 1999 | 1.844 |
| 10 | சேலம் | ஏரி பூங்கா, ஏற்காடு | 2018 | 1.252 |
| 11 | சேலம் | அரசு தாவரவியல் பூங்கா – 1, ஏற்காடு | 2012 | 8.520 |
| 12 | சேலம் | அரசு தாவரவியல் பூங்கா – 2, ஏற்காடு | 2012 | 7.600 |
| 13 | தென்காசி | சுற்றுச்சூழல் பூங்கா, குற்றாலம் | 1986 | 14.890 |
| 14 | திருவண்ணா மலை | திருவண்ணாமலை பூங்கா | 2021 | 3.640 |
| 15 | திண்டுக்கல் | ரோஜா பூங்கா மற்றும் கொய்மலர் செயல் விளக்க மையம், கொடைக்கானல் | 2012 | 4.080 |
| 16 | திண்டுக்கல் | பிரையண்ட் பூங்கா மற்றும் அண்ணா பூங்கா, கொடைக்கானல் | 1900 | 8.200 |

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 17 | திண்டுக்கல் | செட்டியார் பூங்கா, கொடைக்கானல் | 1980 | 2.020 |
| 18 | நீலகிரி | காட்டேரி பூங்கா | 2012 | 2.000 |
| 19 | நீலகிரி | தேயிலை பூங்கா, தொட்டபெட்டா | 2015 | 1.600 |
| 20 | நீலகிரி | சிம்ஸ் பூங்கா, குன்னூர் | 1874 | 11.340 |
| 21 | நீலகிரி | அரசு ரோஜா பூங்கா, ஊட்டி | 1995 | 14.400 |
| 22 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா, ஊட்டி | 1848 | 22.000 |
| 23 | நீலகிரி | மரவியல் பூங்கா, உதகை | 2008 | 1.520 |
| 24 | நீலகிரி | ஜான் சல்லிவான் பூங்கா | 2024 | 4.080 |
| | | **மொத்தம்** | | **155.851** |

சென்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவும், நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் ஜான் சல்லிவன் பூங்காவும் 2024 ஆம் ஆண்டில் புதிதாக மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டன. நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் நெய்தல் பூங்கா,

கடலூர் மாவட்டம், வடலூரில் தோட்டக்கலைப் பூங்கா அமைக்கும் பணிகளும், ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவினை மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகிறது. சென்னை மாதவரம் தோட்டக்கலைப் பூங்காவினை மேம்படுத்துவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், அரசு தாவரவியல் பூங்கா, ஏற்காட்டில் தாவர அலங்கார வடிவங்கள் தோட்டமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் சூரியத் தோட்டமும், முல்லைப் பூங்காவும் அமைக்க ஆயத்தப்பணிகள் நடைபெற்றுவருகின்றன.

**2.5.3: மகத்துவ மையங்கள்**

உயர் தொழில் நுட்பங்களுடன் கூடிய செயல் விளக்கத்திடல்கள் அமைக்கவும், விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் அளிக்கவும், ஐந்து இடங்களில் பயிர்களுக்கு ஏற்ப மகத்துவ மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது

தவிர, ஐந்து இடங்களில், மகத்துவ மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**அட்டவணை 2.13: மகத்துவ மையங்கள் விபரம்**

| வ. எண் | மகத்துவ மையங்கள் | இடம் |
|---|---|---|
| **செயல்பாட்டில் உள்ள மகத்துவ மையங்கள்** | | |
| 1. | கொய் மலர்கள் | தளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 2. | காய்கறிகள் | ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் மாவட்டம். |
| 3. | மலை காய்கறி பயிர்கள் | நஞ்சநாடு, நீலகிரி மாவட்டம். |
| 4. | வெப்ப மண்டல பழப்பயிர்கள் | கஞ்சநாயக்கன்பட்டி, திருச்சி |
| 5 | பாரம்பரிய மலர்கள் | திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம். |
| **பணிகள் நடைபெற்று வரும் மகத்துவ மையங்கள்** | | |
| 6. | தேனீ வளர்ப்பு | பேச்சிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம். |
| 7. | மா | வெதரம்பட்டி, தருமபுரி மாவட்டம். |
| 8. | நெல்லி | களக்காடு, திருநெல்வேலி மாவட்டம். |
| 9. | மித வெப்பமண்டல தோட்டக்கலைப்பயிர்கள் | கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம் |
| 10. | மலர்களுக்கான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் | தளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |

## 2.6 மாநில தென்னை நாற்றுப்பண்ணைகள்

தோட்டக்கலைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் 23 மாநில தென்னை நாற்றுப்பண்ணைகள் மற்றும் 16 தென்னை ஒட்டு மையங்கள் மூலம் தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்கள் வாயிலாகவும் நேரடி விற்பனை மூலமாகவும் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

**அட்டவணை 2.14: மாநில தென்னை நாற்றுப்பண்ணைகள்**

| வ. எண் | மாவட்டம் | பண்ணை | தொடங்கப்பட்ட வருடம் | பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | பிச்சிவாக்கம் | 1968 | 3.00 |
| 2 | திருவள்ளூர் | மாதவரம் | 1975 | 4.21 |
| 3 | கடலூர் | நெய்வேலி | 1984 | 150.00 |
| 4 | இராணிப் பேட்டை | நவ்லாக் | 1974 | 53.81 |
| 5 | திருவண்ணா மலை | வாழவச்சனூர் | 2015 | 0.97 |
| 6 | சேலம் | டேனிஷ் பேட்டை | 1977 | 9.66 |
| 7 | கிருஷ்ணகிரி | பி.ஜி.புதூர் | 1970 | 2.31 |
| 8 | கோயம்புத்தூர் | ஆழியார் நகர் | 1995 | 8.12 |

| வ. எண் | மாவட்டம் | பண்ணை | தொடங்கப்பட்ட வருடம் | பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|---|
| 9 | ஈரோடு | பவானி சாகர் | 1984 | 1.92 |
| 10 | புதுக்கோட்டை | வெள்ளாள விடுதி | 1985 | 2.00 |
| 11 | தஞ்சாவூர் | பட்டுக் கோட்டை | 1946 | 3.39 |
| 12 | மயிலாடுதுறை | மல்லியம் | 1962 | 1.51 |
| 13 | தேனி | வைகை அணை | 1964 | 6.72 |
| 14 | இராமநாதபுரம் | தேவிப் பட்டினம் | 1961 | 2.63 |
| 15 | இராமநாதபுரம் | உச்சிபுலி | 1960 | 5.31 |
| 16 | சிவகங்கை | எஸ்.வி.மங்க லம் | 2004 | 0.55 |
| 17 | விருதுநகர் | தேவதானம் | 1957 | 2.25 |
| 18 | தென்காசி | செங்கோட் டை | 1958 | 0.64 |
| 19 | தென்காசி | வடகரை | 1964 | 1.74 |
| 20 | தூத்துக்குடி | கிள்ளிகுளம் | 1962 | 4.72 |
| 21 | கன்னியாகுமரி | புத்தாளம் | 1966 | 1.96 |
| 22 | திருவாரூர் | வடுவூர் | 2019 | 6.07 |
| 23 | திருச்சி | தொரக்குடி | 2024 | 5.00 |
| | **மொத்தம்** | | | **278.486** |

### 2.6.1. தென்னங்கன்றுகள் விநியோகம்

தமிழ்நாட்டில் உள்ள 23 மாநில தென்னை நாற்றுப்பண்ணைகளிலும், 16 தென்னை ஒட்டு மையங்களிலும் 2024-25 ஆம் ஆண்டில் 11.16 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2025-26 ஆம் ஆண்டில் 12.21 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.6.2. தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்கள்

தென்னை கருந்தலைப்புழுவை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த, தருமபுரி, ஈரோடு, சேலம், கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் செயல்படும் ஐந்து தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்களில் பிரக்கோனிட் ஒட்டுண்ணிகள் 6,000 எக்டர் பரப்பிற்கு (ஒரு எக்டருக்கு 3,000 எண்கள் என்ற அளவில்) தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. நடப்பு 2025-26 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 2.7: தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள்

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையில் நான்கு பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம், சென்னை மாதவரத்திலும், தோட்டக்கலை பயிற்சி மையம், புதுக்கோட்டை குடுமியான் மலையிலும், உழவர் பயிற்சி மையம், நீலகிரி உதகமண்டலத்திலும், தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், கிருஷ்ணகிரி தளியிலும் இயங்கி வருகின்றன. மேலும், திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்திலுள்ள காய்கறி மகத்துவ மையம், மதுரை திருப்பரங்குன்றத்திலுள்ள பாரம்பரிய மலர் பயிர்களுக்கான மகத்துவ மையம், திருச்சி கஞ்சநாயக்கன்பட்டியிலுள்ள வெப்ப மண்டல பழப்பயிர்களுக்கான மகத்துவ மையம் ஆகியவற்றிலும் விவசாயிகளுக்கு தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**2.7.1. ஈராண்டு தோட்டக்கலைப் பட்டயப் படிப்பு (Two Years Diploma in Horticulture)**

தோட்டக்கலைத்துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம், மாதவரம், சென்னை, தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் தளி, கிருஷ்ணகிரி மற்றும் காய்கறி மகத்துவ மையம் ரெட்டியார்சத்திரம், திண்டுக்கல் ஆகிய மூன்று நிலையங்களில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் பெற்ற, ஈராண்டு பட்டயப்படிப்பு ஆண்டு தோறும் தலா 50 மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

**2.8: அலுவலர்கள், பணியாளர்கள் விபரம்**

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## அட்டவணை 2.15: அலுவலர்கள், பணியாளர்கள்

| வ.எண் | பணியிட விபரம் | மொத்த பணியிடம் |
|---|---|---|
| **அ.** | **தொழில்நுட்ப அலுவலர்கள்** | |
| 1. | தோட்டக்கலை கூடுதல் இயக்குநர் | 2 |
| 2. | தோட்டக்கலை இணை இயக்குநர் | 6 |
| 3. | தோட்டக்கலை துணை இயக்குநர் | 44 |
| 4. | தோட்டக்கலை உதவி இயக்குநர் | 397 |
| 5. | தோட்டக்கலை அலுவலர் | 443 |
| 6. | துணை தோட்டக்கலை அலுவலர் | 123 |
| 7. | உதவி தோட்டக்கலை அலுவலர் | 1,674 |
| 8. | உதவி விதை அலுவலர் | 5 |
| | **மொத்தம்** | **2,694** |
| **ஆ.** | **அமைச்சுப் பணியாளர்கள்** | |
| 9. | இதர அலுவலர் பணியிடங்கள் விவரம் (துணை இயக்குநர் (நிர்வாகம்), முதன்மை கணக்கு அலுவலர், ஆட்சி அலுவலர், கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் இதர பணியிடங்கள் | 1,345 |
| | **மொத்தம்** | **4,039** |

## 3. வேளாண்மைப் பொறியியல் துறை

வேளாண் இயந்திரமயமாக்குதல், சூரிய சக்தியின் பயன்பாட்டினை வேளாண்மையில் ஊக்குவித்தல், வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டுதல், வேளாண் நிலங்களையும், நீர் ஆதாரங்களையும் மேம்படுத்துவதன் மூலம் வேளாண்மையில் நீடித்த நிலையான உற்பத்தியை அதிகரித்திட, வேளாண்மைப் பொறியியல் துறை பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### 3.1. வேளாண் இயந்திரமயமாக்குதல்

வேளாண் பணிகளுக்கு ஆட்கள் கிடைப்பது தற்போது சவாலாக உள்ள நிலையில், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு வேளாண் இயந்திரமயமாக்கல் மிகவும் இன்றியமையாதது ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டத்தில் பின்வரும் திட்ட இனங்கள் ஒன்றிய

அரசின் 60 சதவீத பங்களிப்புடனும், மாநில அரசின் 40 சதவீத பங்களிப்புடனும் செயல்படுத்தப்படுகின்றன

### 3.1.1. உழவர்களுக்கு வேளாண் இயந்திரங்களும் கருவிகளும் மானியத்தில் வழங்குதல்

வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டத்தின் மூலம் வேளாண் பணிகளுக்கு ஏற்ற வேளாண் இயந்திரக் கருவிகளான டிராக்டர்கள், சுழற்கலப்பைகள், பவர்டில்லர்கள், நெல்நாற்று நடவுசெய்யும் இயந்திரங்கள், விதை மற்றும் உரமிடும் கருவிகள், விசைக்களையெடுப்பான்கள், புதர் அகற்றும் இயந்திரங்கள், தட்டை வெட்டும் கருவிகள், தாள் அறுவடை இயந்திரங்கள், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரங்கள், தென்னை ஓலை துகளாக்கும் கருவிகள், வைக்கோல் கட்டு கட்டும் கருவிகள் போன்ற வேளாண் இயந்திரங்கள், கருவிகள், உழவர்கள் விளைவித்த விளைபொருட்களை பண்ணை அளவிலேயே உலர வைத்து மதிப்புக்கூட்டிட ஏதுவாக சூரியக் கூடார உலர்த்திகள்,

மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

டிராக்டர்கள் உள்ளிட்ட உயர்மதிப்பு வேளாண் இயந்திரங்களை மானியத்தில் பெறும் உழவர்கள், வேளாண்மைப் பொறியியல் துறையினால் உருவாக்கப்பட்ட தனியார் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல் தொடர்பான கைபேசி செயலியில் (Mobile App) கட்டாயம் பதிவு செய்து, குறைந்தது 100 நாட்களுக்கு தேவைப்படும் உழவர்களுக்கு வாடகைக்கு வழங்க வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ், 2025-26 ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள 2,338 கிராமங்களில் 5,000 வேளாண் இயந்திரங்களும், கருவிகளும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட உள்ளன.

இத்திட்டத்தில் சிறு, குறு, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண் உழவர்களுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் விலையில் 50 சதவீதம், இதர உழவர்களுக்கு 40 சதவீதம் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2024-25 ஆம் ஆண்டில், 19,146 உழவர்கள் பயன்பெறும் வகையில், வேளாண் இயந்திரங்கள், கருவிகள், சூரியக் கூடார உலர்த்திகள் ஆகியவை ரூ.178.12 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 2025-26 ஆம் ஆண்டில், சிறு, குறு உழவர்கள் பயன் பெறும் வகையில் 7,900 பவர்டில்லர்கள், 6,000 விசைக் களையெடுப்பான்கள் உட்பட மொத்தம் 17,000 வேளாண் இயந்திரங்கள், கருவிகள், சூரிய கூடார உலர்த்திகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள்

ஆகியவற்றை உழவர்கள் மானியத்தில் வாங்கிட ரூ.215.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.1.2. சிறு, குறு உழவர்களும் வேளாண் இயந்திரங்களை வாங்கிப் பயன் பெற கூடுதல் மானியம்

வேளாண்மையில் மிகவும் சவாலான பணிகள் நாற்று நடுதல் மற்றும் களையெடுத்தல் ஆகும். இவற்றில் இயந்திரமயமாக்கலை அதிகரித்திட, பொதுப் பிரிவினைச் சார்ந்த சிறு குறு உழவர்கள் பயன்பெறும் வகையில், நெல்நாற்று நடும் இயந்திரங்கள் மற்றும் விசைக் களையெடுப்பான்கள் வாங்குவதற்கு உதவிடும் வகையில் நடைமுறையில் வழங்கப்படும் 50 சதவீதம் மானியத்துடன், கூடுதலாக மாநில நிதியில் இருந்து 10 சதவீதம் மானியம் சேர்த்து 60 சதவீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2024-25 ஆம் ஆண்டில், 2,073 சிறு, குறு உழவர்கள் பயன்பெறும் வகையில், நெல் நாற்று நடவு

செய்யும் கருவிகள், விசைக்களையெடுப்பான்கள் வாங்க கூடுதலாக ரூ.273 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு உழவர்களுக்கு நடைமுறையிலுள்ள 50 சதவீதம் மானியத்துடன் கூடுதலாக 20 சதவீதம் சேர்த்து, 70 சதவீதம் மானியத்தில் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் சூரிய கூடார உலர்த்திகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் பெற மாநில நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

கடந்த 2024-25 ஆம் ஆண்டில், 2,760 ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு உழவர்களுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வாங்க கூடுதலாக ரூ.18.86 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.1.3. பயிர் சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள்

வேளாண் இயந்திரங்கள் பற்றாக் குறையினைக் குறைத்து, உழவர்கள் வேளாண் பணிகளைக் குறித்த காலத்தில் முடித்திட, சிறு, குறு உழவர்கள் வாங்க இயலாத உயர்திறன் மற்றும் உயர் மதிப்புள்ள வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளான டிராக்டர்கள், அறுவடை இயந்திரங்கள், டிரோன்கள் போன்ற வேளாண் இயந்திரங்களைக் குறைந்த வாடகைக்குப் பெற்றுப் பயன்பெற, வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டத்தில் வேளாண் இயந்திர வாடகை மையங்கள் மானியத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன. விவசாய கூட்டுறவு சங்கங்கள், சுய உதவிக்குழுக்கள், பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள், ஊரகத் தொழில்முனைவோர்கள் (ஊரக இளைஞர்கள் மற்றும் உழவர்கள்), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு வட்டார மற்றும் கிராம அளவிலான வேளாண் இயந்திர

வாடகை மையங்கள் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.

கடந்த 2024-25 ஆம் ஆண்டில், 130 கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள், 26 வட்டார வேளாண் இயந்திர வாடகை மையங்கள், 8 கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் என மொத்தம் 164 வாடகை மையங்கள் ரூ.15.41 கோடி மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், 2025-26 ஆம் ஆண்டில், 125 கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள், 5 வட்டார வேளாண் இயந்திர வாடகை மையங்கள் என மொத்தம் 130 வாடகை மையங்கள் ரூ.10.50 கோடி மானியத்தில் அமைக்கப்பட உள்ளன.

### 3.1.4. பயிர் சாகுபடியில் விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்குதல்

வேளாண் பயிர் சாகுபடியில், சில வேளாண் பணிகளில் மட்டுமே இயந்திரங்கள்

ஈடுபடுத்தப்படுகின்றன. இதனால், சாகுபடிச் செலவு அதிகரிப்பதுடன், பணிகளை முடிக்க கூடுதல் காலமும் தேவைப்படுகிறது. எனவே, உழவர்களின் பயிர் சாகுபடிச் செலவைக் குறைத்து, உழவர்களின் வருமானத்தை அதிகரிக்க, பயிர் சாகுபடியில் உழவு, விதைப்பு, களையெடுத்தல், பயிர்ப்பாதுகாப்பு, அறுவடை, பயிர்க்கழிவு மேலாண்மை ஆகிய அனைத்து வேளாண் பணிகளிலும் இயந்திரமயமாக்குதலைக் கடைப்பிடித்தல் அவசியமாகிறது.

நெல், மக்காச்சோளம், வாழை, நிலக்கடலை, உளுந்து ஆகிய பயிர்களுக்குரிய சாகுபடியில் இயந்திரமயமாக்குதலைக் கடைப்பிடித்திடும் பொருட்டு, உழவர்களின் நிலங்களில் 1,550 ஏக்கர் பரப்பளவில் 'வேளாண் தொழில்நுட்ப முனைவோர்' மூலம் வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மை - உழவர் நலத்துறையின் சகோதரத்துறைகளுடன் இணைந்து உழவர்களுக்குச் செயல் விளக்கங்கள் காண்பிக்கப்படும். இந்த செயல்

விளக்கங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள உழவர்கள் நேரில் கண்டு பயனடையும் வகையில் 'அட்மா' திட்ட ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்படும். இச்செயல் விளக்கங்கள் ரூ.3.85 கோடி செலவில் மாநில நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட உள்ளது.

### 3.1.5. வனப்பகுதியில் நில உடைமை பெற்றுள்ள பழங்குடியின உழவர்களுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்குதல்

வன உரிமைகள் சட்டத்தின் கீழ் வனப்பகுதியில் நில உடைமை பெற்றுள்ள பழங்குடியின உழவர்கள் தங்கள் நிலங்களைப் பண்படுத்தி விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலமாக மாற்றுவதற்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மிகவும் இன்றியமையாததாக உள்ளன. இவர்கள் சிறு, குறு உழவர்களாக இருப்பதால், 2025-26 ஆம் நிதியாண்டில் புதிய திட்டமாக 90 சதவீத மானியத்தில் சிறிய வகை

இயந்திரங்கள் மற்றும் கருவிகளான பவர்டில்லர்கள், விசை களையெடுப்பான்கள், புதர் அகற்றும் கருவிகள் போன்றவை 140 உழவர்கள் பயன்பெறும் வகையில் வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் கீழ் ரூ.1.90 கோடியில் வழங்கப்பட உள்ளது.

## 3.2. உழவர் செயலியில் உள்ள இ-வாடகை மூலம் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் திட்டம்

உழவர்கள், தங்களுக்கேற்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை தாங்கள் இருப்பிடத்திலிருந்தே முன்பதிவு செய்யவும், வாடகைத் தொகையை ஆன்லைனில் செலுத்தவும் உழவர் கைபேசி செயலியில் உள்ள இ-வாடகை (e-Vaadagai) வசதி பயன்படுகிறது. கடந்த 2021-22-ஆம் ஆண்டிலிருந்து 2024-25 ஆம் ஆண்டு வரை மொத்தம் 1,97,094 பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. இ-வாடகை ஆன்லைன் செயலியின் மூலம் 67,084 உழவர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் ரூ.126.20 கோடி வாடகை வருவாய் கிடைத்துள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறையில் உழவர்களுக்கு வாடகைக்கு வழங்கப்படும் வேளாண் இயந்திரங்களின் எண்ணிக்கை மற்றும் வாடகை விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை. 3.1. வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்கள் மற்றும் வாடகை விவரம்**

| வரிசை எண். | இயந்திரத்தின் விவரம் | எண்ணிக்கை | வாடகை விவரம் |
|---|---|---|---|
| **நில மேம்பாட்டுத் திட்ட இயந்திரங்கள்** | | | |
| 1 | புல்டோசர் (Bull Dozer) | 85 | ரூ.1,230/- ஒரு மணிக்கு |
| 2 | டிராக்டர் (Tractor) | 513 | ரூ. 500/- ஒரு மணிக்கு |
| 3 | டிராக்டர்களுக்கான இணைப்பு கருவிகள் (Tractor operated implements) | 2,501 | ரூ. 500/- ஒரு மணிக்கு டிராக்டருடன் |

| வரிசை எண். | இயந்திரத்தின் விவரம் | எண்ணிக்கை | வாடகை விவரம் |
|---|---|---|---|
| 4 | சக்கர வகை நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester – Wheel Type) | 8 | ரூ.1,160/- ஒரு மணிக்கு |
| 5 | டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester – Track Type) | 45 | ரூ.1,880/- ஒரு மணிக்கு |
| 6 | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் (Backhoe with Front end loader) | 80 | ரூ.890/- ஒரு மணிக்கு |
| 7 | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் (Crawler Excavator) | 10 | ரூ.1,910/- ஒரு மணிக்கு |
| 8 | சிறு டிராக்டர் (Mini Tractor) | 6 | ரூ.460/- ஒரு மணிக்கு |
| 9 | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் மற்றும் இன்ஃபீல்டர்கள் (Sugarcane Harvester with infielders) | 6 | ரூ.5,120/- ஒரு மணிக்கு |

| வரிசை எண். | இயந்திரத்தின் விவரம் | எண்ணிக்கை | வாடகை விவரம் |
|---|---|---|---|
| 10 | வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் (Truck Operated Coconut Hoist) | 20 | ரூ.450/- ஒரு மணிக்கு |
| 11 | கனரக மரம் அறுக்கும் கருவிகள் (Heavy Duty Chain Saws) | 805 | ரூ.85/- ஒரு மணிக்கு |
| 12 | டிராக்டரால் இயங்கக்கூடிய நீர் இறைக்கும் பம்புகள் (Tractor Operated Pumpsets) | 21 | ரூ.500/- ஒரு மணிக்கு டிராக்டருடன் |
| **சிறுபாசனத் திட்ட இயந்திரங்கள்** | | | |
| 13 | சுழல் விசைத்துளைக் கருவிகள் (Rotary Drills) | 24 | ரூ.130/- ஒரு மீட்டருக்கு |
| 14 | பெர்குஷன் துளைக் கருவிகள் (Percussion Drills) | 2 | ரூ.300/- நாள் ஒன்றிற்கு |
| 15 | சிறு விசைத்துளைக் கருவிகள் (Mini Drills) | 18 | ரூ.70/- ஒரு மீட்டருக்கு |

| வரிசை எண். | இயந்திரத்தின் விவரம் | எண்ணிக்கை | வாடகை விவரம் |
|---|---|---|---|
| 16 | கைத்துளைக் கருவிகள் (Hand Boring Sets) | 13 | ரூ.30/- ஒரு மீட்டருக்கு |
| 17 | பாறை வெடிக் கருவிகள் (Rock Blasting Units) | 3 | ரூ.250/- ஒரு வெடிப்புக்கு |
| 18 | நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள் (Resistivity Meters) | 21 | ரூ.500/- ஒரு ஆய்விற்கு |
| 19 | மின்னியல் ஆய்வுக் கருவிகள் (Electrical Loggers) | 2 | ரூ.1,000/- ஒரு குழாய் கிணறுக்கு |

**குறிப்பு**: வரிசை எண். 13 முதல் 19 வரையிலான இயந்திரங்களுக்குத் தேவையான எரிபொருள் (டீசல்), வேலையாட்கள், குழாய்கள், கூழாங்கற்கள் மற்றும் பொருட்களை எடுத்துச்செல்வதற்கான வாகனச் செலவு ஆகியவை சம்பந்தப்பட்ட உழவர்களைச் சார்ந்தது ஆகும்.

### 3.2.1. நிவாரணப் பணிகள் மேற்கொள்ள பேரிடர் மேலாண்மை இயந்திரங்கள்

கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கைப் பேரிடர் நிகழ்வுகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக, வேளாண்மைப் பொறியியல் துறையின் கீழ் டிராக்டரால் இயங்கும் 21 நீர் இறைக்கும் பம்புகளும், 805 கனரக மரம் அறுக்கும் கருவிகளும் பயன்பாட்டில் உள்ளன.

கடந்த 2023 ஆம் ஆண்டு தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் கனமழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால், வேளாண் நிலங்களில் படிந்த மணல் படிவுகளை அகற்றும் பணியில், வேளாண்மைப் பொறியியல் துறையின் பேரிடர் மேலாண்மை இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டு 1,523.84 எக்டர் பரப்பளவில் மணல் திட்டுக்கள் அகற்றப்பட்டுள்ளன.

பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல், தாழ்நில மற்றும் மழைநீர் தேங்கிய பகுதிகளில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்த்தல் போன்ற வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக 2024 - 25 ஆம் ஆண்டில், 5 சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்கள் ரூ.25 இலட்சம் செலவில் பேரிடர் கால நிவாரண ஊர்திகளாக மாற்றி வடிவமைக்கப்பட்டுள்ளன.

### 3.2.2. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் சேவையை வட்டார அளவில் வலுப்படுத்துதல்

உழவர்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் பல்வேறு உழவுப் பணிகள் மற்றும் பிற வேளாண்மைப் பணிகளை மேற்கொள்வதற்காக, 2021-22 முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை, 275 டிராக்டர்கள், 512 ரோட்டவேட்டர்கள், டிராக்டரால் இயங்கக்கூடிய

172 ஐந்து கொத்து கலப்பைகள், டிராக்டரால் இயங்கக்கூடிய 337 ஒன்பது வரிசை கொத்து கலப்பைகள், 120 கேஜ்வீல்கள், டிராக்டரால் இயங்கக்கூடிய 38 நிலம் சமன்செய்யும் கருவிகள், டிராக் வகை 35 நெல் அறுவடை இயந்திரங்கள், சக்கர வகை 7 நெல் அறுவடை இயந்திரங்கள், 5 கரும்பு அறுவடை இயந்திரங்கள் மற்றும் டிராக்டருடன் இயங்கக்கூடிய 5 செட் கரும்பு இன்பீல்டர்கள், 15 நிலநீர் ஆய்வுக் கருவி தொகுப்புகள், 135 பிற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ஆகியவை ரூ.72.05 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டு, அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகையில், உழவர் செயலியில் உள்ள இ-வாடகை சேவை மூலம் உழவர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.2.3. உழவர் செயலியில் உள்ள இ-வாடகை சேவை மூலம் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் திட்டத்தினை வலுப்படுத்துவதற்கு புதிய வேளாண் இயந்திரங்கள், கருவிகள் கொள்முதல் செய்தல்

உழவர்களுக்கு, உழவர் செயலியில் உள்ள இ-வாடகை சேவை மூலம் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் திட்டத்தினை நடப்பாண்டில் மேலும் வலுப்படுத்துவதற்காக, நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் டிராக்டரால் இயங்கக்கூடிய கருவிகளான 100 கேஜ்வீல் செட்கள், 15 நிலம் சமன் செய்யும் லேசர் கருவிகள், 50 சட்டிக் கலப்பைகள், 45 சுழல் தழைக்கூளங்கள் மற்றும் 4 நில நீர் ஆய்வு கருவிகளின் தொகுப்புகள் ரூ.3.40 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட உள்ளன.

மேலும், பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம், 25 டிராக்டர்கள், டிராக்டரால் இயங்கக்கூடிய 75 ரோட்டவேட்டர்கள், 125 ஐந்து வரிசை கொத்துக் கலப்பைகள், 125 ஒன்பது வரிசை கொத்துக் கலப்பைகள், 5 வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவிகள், குழி தோண்டும் கருவி மற்றும் விதை விதைக்கும் கருவி தலா 1 எண், 10 நீர் இறைக்கும் கருவிகள், சக்கர வகை 12 நெல் அறுவடை இயந்திரங்கள் மற்றும் மண் தள்ளும் இயந்திரத்தினை சுமந்து செல்லும் 5 வாகனங்கள் ரூ.13.97 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட உள்ளன. மொத்தமாக 2025-26 ஆம் ஆண்டில் 603 வேளாண் இயந்திரங்களும் கருவிகளும் ரூ.17.37 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து உழவர் செயலியின் இ-வாடகை சேவையின் மூலம் வாடகைக்கு வழங்கப்பட உள்ளன.

**3.2.4. தனியாருக்குச் சொந்தமான வேளாண் இயந்திரங்களின் விவரங்களை உழவர் செயலியில் பதிவேற்றுதல்**

உழவர்கள் தங்கள் வேளாண் பணிகளை தங்குதடையின்றி மேற்கொள்ள, தனியாருக்குச் சொந்தமான நெல், மக்காச்சோளம், பயறு வகைகள், பிற தானியங்களை அறுவடை செய்யும் 4,456 அறுவடை செய்யும் இயந்திரங்களின் உரிமையாளர்கள், 45,849 டிராக்டர் உரிமையாளர்கள், 8,201 சக்கர வகை மண் அள்ளும் இயந்திரங்களின் உரிமையாளர்கள், 52 டிராக் வகை மண் அள்ளும் இயந்திரங்களின் உரிமையாளர்கள், 78 டிரோன்களின் உரிமையாளர்கள், 294 சுழல் விசைத்துளைக் கருவிகளின் உரிமையாளர்கள், 184 கரும்பு அறுவடை செய்யும் இயந்திரங்களின் உரிமையாளர்கள், 4,322 இயந்திர பழுது நீக்குபவர்கள் ஆகியோரின் பெயர்கள், அலைபேசி எண்கள் போன்ற விவரங்கள் வட்டாரம் மற்றும் மாவட்ட வாரியாக உழவர் செயலியில்

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், உழவர்கள் தனியார் இயந்திர உரிமையாளர்களையும், இயந்திர பழுது நீக்குபவர்களையும் நேரடியாகக் கைபேசி மூலம் தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

### 3.2.5. வேளாண்மைப் பொறியியல் தொழில் நுட்பங்கள், வேளாண் இயந்திரங்கள், கருவிகள் தொடர்பான தொழில்நுட்பக் கையேடு தயார் செய்தல்

வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்கள் அடங்கிய 40 அத்தியாயங்களைக் கொண்ட தொழில்நுட்பக் கையேடுகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், வேளாண் இயந்திரங்கள் தயாரிப்பாளர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் உழவர்கள், கள அலுவலர்கள் பயன்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டு வழங்கப்பட உள்ளது.

### 3.2.6. உழவர்களுக்கான தனியார் வேளாண் இயந்திர வாடகை கைபேசி செயலி

தனியார் வேளாண் இயந்திரங்கள் வாடகை கைபேசி செயலி, டிராக்டர்கள், நெல் அறுவடை இயந்திரங்கள், கரும்பு அறுவடை இயந்திரங்கள், பவர் டில்லர்கள், விசைக்களையெடுப்பான்கள் மற்றும் நெல் நடவு இயந்திரங்கள் போன்ற தனியார் வேளாண் இயந்திரங்களை தேவைப்படும் உழவர்களுக்கு உரிய நேரத்தில் மற்றும் எளிதாகக் கிடைப்பதை உறுதி செய்து, தனியார் வேளாண் இயந்திரங்களை திறம்பட பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

இச்செயலி மூலம் தனியாருக்குச் சொந்தமான வேளாண் இயந்திரங்களின் வாடகை பயன்பாடு அதிகரித்து, அவர்களுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கவும், உழவர்களுக்கு எளிதாக வாடகை இயந்திரங்கள் கிடைத்திடவும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 3.3. வேளாண்மையில் சூரிய சக்தி

### 3.3.1. முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம்

முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தில் மின் கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் மானியத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சூரிய ஆற்றலைப் பயன்படுத்தி உழவர்கள் பாசனத்திற்கான நீரினை தடையின்றிப் பெற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை ரூ.69.13 கோடி மானியத்தில் 3,171 உழவர்களுக்கு சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த சிறு, குறு உழவர்களுக்கு 80 சதவீத மானியத்திலும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த இதர

உழவர்கள், பொதுப்பிரிவைச் சார்ந்த சிறு, குறு உழவர்களுக்கு 70 சதவீத மானியத்திலும் மற்றும் இதர உழவர்களுக்கு 60 சதவீத மானியத்திலும், 1,000 உழவர்கள் பயன்பெறும் வகையில் சூரிய சக்தி பம்புசெட்டுகள் அமைத்திட ஒன்றிய அரசின் நிதி ரூ.10.5 கோடி மற்றும் மாநில அரசின் நிதி ரூ.13.5 கோடி, ஆக மொத்தம் ரூ.24 கோடி மானியத்தில் 2025-26 ஆம் ஆண்டில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

### 3.3.2. சூரிய சக்தி மின்வேலிகள்

சூரியசக்தியைப் பயன்படுத்தி, பயிர்களை அழித்திடும் விலங்குகளிடமிருந்து வேளாண் பயிர்களைப் பாதுகாத்திட, சூரிய சக்தி மின்வேலி அமைப்புகள் 2021-22 ஆம் ஆண்டு முதல் 2024-25 வரை 370 உழவர்களின் நிலங்களில், ரூ.3.3 கோடி மானியத்தில் நிறுவப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சூரிய சக்தி மின்வேலி அமைப்பானது 5 வரிசை, 7 வரிசை, 10 வரிசை வேலிக்கம்பிகளைக்

கொண்டதாக யானைகள் தவிர்த்த பிற விலங்குகளுக்கான சூரிய மின்வேலி அமைப்பாகவும், யானைகளை விரட்டிட கூடுதலாக தொங்கும் சூரிய மின்வேலி அமைப்புகளாகவும் வகைப்படுத்தப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உழவர்கள் பயன்பெறும் வகையில், 2025-26 ஆம் ஆண்டில் சூரியசக்தி மின்வேலி அமைப்புகள் 50 சதவீத மானியத்தில் ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்பட உள்ளன. மேலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த சிறு, குறு உழவர்களுக்கு கூடுதலாக 20 சதவீத மானியம் மாநில நிதியிலிருந்து வழங்கப்பட உள்ளது.

**3.3.3. சூரியக் கூடார உலர்த்திகள்**

வேளாண் விளைபொருட்களில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளைக் குறைத்து, சிறந்த முறையில் சீராக உலரவைத்து தரத்தினைப் பாதுகாத்து உழவர்கள் அதிக வருவாய் ஈட்டிட உதவிடும்

பொருட்டு, பாலிகார்பனேட் தகடுகளாலான பசுமைக் குடில் வகை சூரியக் கூடார உலர்த்திகள் உழவர்களுக்கு மானியத்துடன் அமைத்துத் தரப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 2021-22-ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை ரூ.8.60 கோடி மானியத்தில் 390 உழவர்களுக்கு சூரியக் கூடார உலர்த்திகள் அமைக்கப்பட்டுள்ளன.

சூரியக் கூடார உலர்த்திகள் அமைக்க ஏற்படும் செலவில் ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் உழவர்களுக்கு, அதிகபட்சமாக 50 சதவீதம் அல்லது ரூ.3.50 இலட்சம் மற்றும் இதர உழவர்களுக்கு 40 சதவீதம் அல்லது ரூ.2.80 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்பட உள்ளது. இத்திட்டம் வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் கீழ் ரூ.3 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2025-26 ஆம் ஆண்டில் நிறுவப்பட உள்ளது. மேலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த சிறு, குறு

உழவர்களுக்கு கூடுதலாக 20 சதவீத மானியம் மாநில நிதியிலிருந்து வழங்கப்பட உள்ளது.

### 3.4. மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு

நிலையான வளர்ச்சி இலக்குகளில் (Sustainable Development Goals), ஆறாவது இலக்கின் ஓர் அங்கமான நீர் வள மேலாண்மையை மேற்கொண்டு நீர் தொடர்பான சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுத்துப் பாதுகாக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் மழைநீர் சேகரிப்புத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, வேளாண்மைப் பொறியியல் துறையால் நிலவளம், நீர்வளப் பாதுகாப்பு, நீர் மேலாண்மை ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

#### 3.4.1. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் 2021-22 ஆம் ஆண்டு முதல்

100 சதவீத மாநில அரசின் நிதிப் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த நான்காண்டுகளில் இத்திட்டம் 10,187 கிராம பஞ்சாயத்துகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட தரிசு நிலத் தொகுப்புகளில் இதுவரை 978 கிணறுகள் புதிதாக உருவாக்கப்பட்டு, அவற்றிற்கான மின்/சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தனிப்பட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த உழவர்களுக்கு இதுவரை 1,615 கிணறுகள் புதிய நீர் ஆதாரங்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

தங்களது நிலத்திலேயே மழை நீரினைச் சேமித்திட இத்திட்டத்தின் மூலம் இதுவரை 2,378 உழவர்களுக்கு பண்ணைக்குட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு பாசனக் குளங்கள், ஊருணிகள், குளங்கள், வரத்துக்

கால்வாய்கள் மற்றும் இதர நீர் சேகரிப்புக் கட்டுமானங்களில் இதுவரை 8,427 இடங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் தொகுப்புகளில் அமைக்கப்பட்ட கிணறுகளில் 238 செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டுமானங்கள் இதுவரை உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் 1,526 உழவர்களுக்கு மானியத்தில் பவர் டில்லர்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 2025-26 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.73.67 கோடி நிதியில் 2,338 கிராம பஞ்சாயத்துகளில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.4.2. திறந்த வெளி பாசனக் கிணறுகளைப் புனரமைத்தல்

நிலத்தடிநீர்ப் பாசனத்தின் முக்கியக் கட்டமைப்பான திறந்தவெளி பாசனக் கிணறுகளில், பெரும்பாலானவை சுற்றுச்சுவர் இல்லாமல் அல்லது

சுற்றுச்சுவர் சேதமடைந்து, முறையான பராமரிப்பு இல்லாமல் தூர்ந்து போய், செயல்திறன் இழப்பு ஏற்படுவதுடன் மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும், பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு திறந்த வெளிக் கிணறுகளுக்கு சுற்றுச்சுவர், நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்புகள் ஏற்படுத்திட 50 சதவீத மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.2.50 இலட்சம் என்ற அடிப்படையில் பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.2.50 கோடி செலவில் 100 திறந்த வெளி கிணறுகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 3.4.3. மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை அமைத்தலும், பராமரித்தலும்

வறண்ட நிலத்தை மேம்படுத்தும் வகையில், மழை நீரைச் சேகரித்து நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடும் பொருட்டு, வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள் மூலம், 2021-22 ஆம் ஆண்டு

முதல் இதுவரை, ஏற்கனவே உருவாக்கப்பட்ட 3,685 மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டும், சமுதாயக் குளங்கள் போன்ற 89 புதிய மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டும், தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமுதாயக் குளங்கள் போன்ற 100 புதிய மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைத்தல், பல்வேறு நீர்வடிப்பகுதிகளில் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் ஏற்கனவே அமைக்கப்பட்ட 500 நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைப் பயன்படுத்தி 2025-26 ஆம் ஆண்டில், ரூ.2.75 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 3.4.4. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத்திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலையின் அருகிலுள்ள வனப்பகுதி கிராமங்களில், அப்பகுதி மக்களின்

வாழ்வாதாரங்களை மேம்படுத்திடும் பணிகள், இயற்கை வளங்களைப் பாதுகாத்திட மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள், நில மேம்பாட்டுப் பணிகள், விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் 2021-22 ஆம் ஆண்டு முதல் இதுவரை நான்கு ஆண்டுகளில் மொத்தமாக 496 மண்வளம், நீர்வள பாதுகாப்புப் பணிகள், 32,847 மீட்டர் நீளத்திற்கு ஓடை பராமரிப்புப் பணிகள், நிலச்சரிவு தடுப்புப் பணிகள் என மொத்தம் ரூ.50.93 கோடி மதிப்பில் மாநில அரசு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 2024–25 ஆம் நிதியாண்டு முதல் கிழக்குத் தொடர்ச்சி மலையின் வனப்பகுதிகளை ஒட்டியுள்ள தருமபுரி, கிருஷ்ணகிரி, கள்ளக்குறிச்சி, நாமக்கல், திண்டுக்கல், ஈரோடு, சேலம், திருப்பத்தூர், திருவண்ணாமலை, திருச்சி, வேலூர் ஆகிய 11 மாவட்டங்களில் உள்ள உழவர்கள் பயன்பெறும்

வகையில் 33 வட்டாரங்களில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத்திட்டப் பகுதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் ரூ.9.78 கோடி மதிப்பில், 61 மண்வளம், நீர்வளப்பாதுகாப்புப் பணிகள், 6,522.70 மீட்டர் நீளத்திற்கு ஓடை பராமரிப்பு மற்றும் நிலச்சரிவு தடுப்புப் பணிகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிதியினைப் பயன்படுத்தி இத்திட்டப் பணிகள் 2025-26 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### 3.4.5. அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பல்நோக்கு நீர் தேக்கங்களில் வண்டல் மண் படிவதை தடுத்து கொள்ளளவு குறையாமல் சேமித்திட, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அணைகளின் நீர்பிடிப்புப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு மற்றும்

நீர்வடிப்பகுதி மேலாண்மைப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

தேனி மாவட்டத்தில் வைகை அணை, சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணை, ஆகிய அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் 2025-26 ஆம் ஆண்டில் ரூ.15.60 கோடி மதிப்பீட்டில் 361 வண்டல் மண் தடுப்புக் கட்டமைப்புகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**3.5. நீர் மேலாண்மை**

**3.5.1. கடைமடை உழவர்களுக்கும் தடையற்ற பாசன நீர்**

பாசன நீரைத் தங்கு தடையின்றிக் கொண்டு செல்லவும், மழைக்காலங்களில் பெரும்பாலான மழைநீர் வயல்களில் நிரம்பி பயிர் சேதம் ஏற்படுவதை தடுக்கவும், கடந்த மூன்று ஆண்டுகளாக 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்களில் தூர்வாரும் பணிகள் 5,427 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.19.97 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பணிகளின் முக்கியத்துவம் கருதி 2025-26 ஆம் ஆண்டில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், அரியலூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் காவேரி வடிநிலப்பகுதி, வெண்ணாறு வடிநிலப்பகுதி, வெள்ளார் வடிநிலப்பகுதி, கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதிகளில் உள்ள 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்களில் 2,925 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.13.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

### 3.5.2. உழவர்களுக்கு மானியத்தில் மின்மோட்டார் பம்புசெட் வழங்குதல்

ஐந்து ஏக்கர் வரை நிலம் உள்ள மின் வசதி கொண்ட உழவர்களுக்கு, பாசன நீரை இறைத்திட உதவும் வகையில், மானியத்தில் புதியதாக திறன்மிகு நான்கு நட்சத்திர தரச்சான்றுடைய மின்மோட்டார் பம்புசெட்டுகள் வாங்கவும், திறன் குறைந்த பழைய மின்மோட்டார் பம்பு செட்டுகளை மாற்றிடவும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் மின்மோட்டார் பம்புசெட் வாங்கிட ஆகும் மொத்த தொகையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.15,000/- உழவர்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. கடந்த 2021-22 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 4,989 உழவர்களுக்கு ரூ.6.47 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2025-26 ஆம் ஆண்டில் அனைத்துத் தரப்பு உழவர்களும் பயனடையும் வகையில் ரூ. 1.50 கோடி மானியத்தில் 1,000 மின்மோட்டார் பம்புசெட்டுகள் வழங்கப்பட உள்ளன.

### 3.5.3. நுண்ணீர்ப் பாசனத் திட்டம் – பிரதம மந்திரியின் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் - ஒரு துளி நீரில் அதிக பயிர்

பாசன நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்திடவும், நீரின் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்திடவும் நுண்ணீர்ப் பாசனத் திட்டமானது தமிழ்நாடு

தோட்டக்கலை மேம்பாட்டு முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ள நிலத்தில் வேளாண்மைத் துறை / தோட்டக்கலைத் துறை / சர்க்கரைத் துறை அலுவர்களுடன் இணைந்து, கூட்டாய்வு மற்றும் அளவீடுகள் பதிவு செய்யும் பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 2024-25 ஆம் ஆண்டில் 1,15,353 எக்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணீர்ப்பாசன அமைப்புகளில் கூட்டாய்வு மற்றும் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.6. மண் அள்ளும் இயந்திரம், டிராக்டர், டிரோன், அறுவடை இயந்திரங்களை இயக்குவதற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி

வேளாண்மைப் பொறியியல் துறையின் அரசு இயந்திரக் கலப்பைப் பணிமனைகளில், கிராமப்புர

இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கும், தொழில் முனைவோராவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டு வருகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் பணிமனைகளில் 2024-25-ஆம் ஆண்டில், டிராக்டர் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைக்கப்பட்டு, டிராக்டர் பாவனைப் பயிற்சி சாதனம் (Simulator) உதவியுடன் 271 கிராமப்புர இளைஞர்களுக்கு, டிராக்டர் இயக்குவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு, இதுவரை 54 இளைஞர்களுக்கு டிராக்டர் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 49 கிராமப்புர இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்கள் குறித்த செயல்விளக்கப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

ஓட்டுநர் பயிற்சியினைச் சிறப்பாக வழங்கிட, மண் அள்ளும் இயந்திரம், டிராக்டர், டிரோன், அறுவடை இயந்திரங்களுக்கான பாவனைப் பயிற்சி சாதனம்

அரசு இயந்திரக் கலப்பைப் பணிமனைகளில் அமைக்கப்பட்டு, 120 கிராமப்புர இளைஞர்களுக்கு, அவ்வியந்திரங்களை இயக்குவதற்கான பயிற்சி அளித்து, ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும் 180 கிராமப்புர இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்கள் குறித்த செயல் விளக்கப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. ஆக மொத்தம் 300 கிராமப்புர இளைஞர்கள் பயன்பெறும் வகையில், 2025-26 ஆம் ஆண்டில் ரூ.1.84 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

**3.7. கட்டமைப்புகளை உருவாக்குதல்**

வேளாண்மைப் பொறியியல் துறை புதிய கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல், வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, ஆகிய சகோதரத்

துறைகளின் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

உழவர்களுக்கு வேளாண்மைப் பொறியியல் துறைக்குச் சொந்தமான வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் இ-வாடகைத் திட்டத்தினை வலுப்படுத்தும் விதமாக, கடந்த நான்கு ஆண்டுகளில் 100 வேளாண் இயந்திரக் கூடங்கள் மொத்தம் ரூ.18.80 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறைக்கென, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2024-25-ன்கீழ், திருவண்ணாமலை மாவட்டத்தில் புதிய உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகக் கட்டடம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

## 3.8. நிர்வாக அமைப்பு

### அட்டவணை.3.2. வேளாண்மைப் பொறியியல் துறை பணியாளர்களின் விவரம்

| வரிசை எண் | பதவியின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் (எண்கள்) |
|---|---|---|
| 1 | தலைமைப் பொறியாளர் (வே.பொ.) | 1 |
| 2 | தலைமைப் பொறியாளர் (வே.பொ.), நபதி | 1 |
| 3 | கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ.) | 14 |
| 4 | செயற் பொறியாளர் (வே.பொ.) | 38 |
| 5 | உதவி செயற் பொறியாளர் (வே.பொ.) | 123 |
| 6 | உதவிப் பொறியாளர் (வே.பொ.)/ இளநிலைப் பொறியாளர் (வே.பொ.) | 847 |
| 7 | அமைச்சுப் பணியாளர்கள் | 1471 |
| 8 | களப் பணியாளர்கள் | 1507 |
| | **மொத்தம்** | **4002** |

## 4. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில் உற்பத்தியையும் உற்பத்தித்திறனையும் அதிகரிக்க, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் வேளையில், வேளாண் பெருமக்கள் தங்கள் விளைபொருட்களுக்கு இலாபகரமான விலையைப் பெறுவதற்கு ஏற்றவாறு தேவையான கட்டமைப்புகளுடன் கூடிய சிறந்த சந்தை வசதிகளை வழங்குவது அவசியமாகும். மேலும், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானம் பெருகுவதுடன் அவர் தம் வாழ்க்கைத்தரமும் மேம்படுகிறது. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை பெற்றுத்தர வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

## 4.1 வேளாண்மை விற்பனை

### 4.1.1 விற்பனைக்குழுக்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

வேளாண் விளைபொருள் விற்பனையை முறைப்படுத்தவும், முறையான சந்தை நிர்வாக அமைப்பை உருவாக்கவும், தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987ம், அதன் விதிகள் 1991ம் நடைமுறையில் உள்ளன.

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி, விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சந்தைப்படுத்த ஏதுவாக தமிழ்நாட்டில் 27 விற்பனைக்குழுக்களின் கீழ் 284 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களும் 13 துணை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களும் செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் எவ்வித இடைத்தரகர்களின் குறுக்கீடின்றி வேளாண் விளைபொருள் வர்த்தகத்தை மேற்கொள்ளும்

ஒரு பொதுத்தளமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விளங்குகின்றன. விவசாயிகளால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குக் கொண்டு வரப்படும் வேளாண் விளை பொருட்கள் மறைமுக ஏலமுறை மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. இச்சேவைக்கு விவசாயிகளிடமிருந்து எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்த விளைபொருட்களின் மதிப்பில் 1 சதவீதம் சந்தை கட்டணமாக பெறப்படுகிறது. 2024-2025 ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) 29.70 இலட்சம் மெ.டன் வேளாண் விளைபொருட்கள் 9.25 இலட்சம் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு ரூ.152 கோடி இவ்வகையில் பெறப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில், கட்டமைப்பு வசதிகளான சேமிப்புக்கிடங்குகள் (532 எண்கள், 6.79 இலட்சம் மெ. டன் கொள்ளளவு),

பரிவர்த்தனைக் கூடங்கள் (399), உலர்களங்கள் (424), வணிகர் கடைகள் (863), குளிர்பதனக் கிடங்குகள் (275), குளிர்பதனக் கிடங்கு வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள், விவசாயிகள் ஓய்வறை மற்றும் இதர அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விலைவீழ்ச்சி காலங்களில் குறைந்த விலைக்கு விளைபொருள் விற்பனையைத் தவிர்க்கவும், விவசாயிகளின் உடனடி பணத் தேவையை நிறைவு செய்யவும், விவசாயிகளுக்கு அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் அல்லது ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் கிடங்குகளில் அவர்கள் இருப்பு வைத்துள்ள விளைபொருளின் மதிப்பில் 50% பொருளீட்டுக் கடனாக 5% வட்டி வீதத்தில் அதிகபட்சமாக ஆறுமாத காலத்திற்குக் (மஞ்சளுக்கு மட்டும் ஓர் ஆண்டு வரை) கடனுதவி வழங்கப்படுகிறது. 2024-2025 ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) 1,328 விவசாயிகள் பொருளீட்டுக் கடனாக ரூ.43.29 கோடி பெற்றுள்ளனர்.

மேலும் விவசாயிகளுக்கான பணப்பட்டு வாடாவினைத் துரிதப்படுத்தும் பொருட்டு, இச்சேவை விரிவுபடுத்தப்பட்டு வியாபாரிகளுக்கும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் கிடங்குகளில் அவர்கள் இருப்பு வைத்துள்ள விளைபொருளின் மீது ரூ.2 இலட்சம் வரை 9% வட்டிவீதத்தில் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. 2024-2025 ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) 145 வியாபாரிகள் பொருளீட்டுக் கடனாக ரூ.2.70 கோடி பெற்றுள்ளனர். மேலும், 2025-26 ஆம் ஆண்டு முதல், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கும் பொருளீட்டுக்கடனாக ரூ.10 இலட்சம் வரை வழங்க இந்த ஆண்டின் வேளாண் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட உள்ளது.

இது தவிர, விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெற்ற சேமிப்பு

கிடங்குகளில் வைக்கப்பட்டுள்ள பொருளின் மதிப்பில் 80 சதவீதம் வரை மின்னணு மாற்றத்தகு கிடங்கு ரசீது மூலம் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளில் கடன் பெறலாம். இதுவரை 247 கிடங்குகளுக்கு கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு 152 பயனாளிகள் ரூ.142.20 கோடி கடன்பெற்று பயனடைந்துள்ளனர்.

மேலும் 2025-26 ஆம் ஆண்டில், வாடகை கட்டிடங்களில் இயங்கி வரும் சேலம் மாவட்டம் கொளத்தூர், தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி, கரூர் மாவட்டம் சின்னதாராபுரம், விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு, திருவில்லிபுத்தூர், பெரம்பலூர் மாவட்டம் பூலாம்பாடி, திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி, தொட்டியம், இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி, வேலூர் மாவட்டம் காட்பாடி ஆகிய ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கு பரிவர்த்தனைக் கூடங்கள், சேமிப்புக் கிடங்குகள் போன்ற கட்டமைப்பு வசதிகள்

மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் G.அரியூர் துணை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பரிவர்த்தனைக்கூடம் ஆகியன 50 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளன.

அறுவடைக் காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கவும், கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் அங்கீகாரம் பெற்று மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது (e-Negotiable Warehouse Receipt) முறையில் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளில் கடன் பெறும் வசதியை ஊக்குவிக்கவும், திங்கள் சந்தை, தொடுவட்டி, திண்டிவனம், செஞ்சி, சூலூர், கும்பகோணம், உடுமலைப்பேட்டை, கீழ்பெண்ணாத்தூர், உசிலம்பட்டி ஆகிய ஒன்பது ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் தலா 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.

அறுவடைக் காலங்களில் அதிக வரத்துள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வரத்தினை ஒழுங்குபடுத்திடவும், வேளாண் விளைபொருள்களை எளிதில் சந்தைப்படுத்திட ஏதுவாகவும், 2025-26 ஆம் ஆண்டில் வட்டாரம் தோறும் பொது சேகரிப்பு மையங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அட்டவணை: 4.1. மாவட்ட மற்றும் விற்பனைக்குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்**

| வ.எண் | மாவட்டம் | விற்பனை குழு | ஒழுங்கு முறை விற்பனை கூடங்களின் எண்ணிக்கை | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1. காஞ்சிபுரம் | 3 | காஞ்சிபுரம், உத்திரமேரூர், சுங்குவார்சத்திரம் |
| 2 | செங்கல்பட்டு | | 4 | மதுராந்தகம், திருக்கழுக் குன்றம், அச்சரப்பாக்கம், செங்கல்பட்டு |
| 3 | திருவள்ளூர் | | 8 | திருத்தணி, திருவள்ளூர், |

| வ.எண் | மாவட்டம் | விற்பனை குழு | ஒழுங்கு முறை விற்பனை கூடங்களின் எண்ணிக்கை | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | செங்குன்றம், பொன்னேரி, பள்ளிப்பட்டு, ஊத்துக்கோட்டை, கும்மிடிப்பூண்டி, நசரத்பேட்டை |
| 4 | கடலூர் | 2. கடலூர் | 11 | விருத்தாசலம், கடலூர், பண்ருட்டி, திட்டக்குடி, காட்டுமன்னார்கோயில், சிதம்பரம், குறிஞ்சிப்பாடி, சேத்தியாதோப்பு, ஸ்ரீமுஷ்ணம், புவனகிரி வேப்பூர் |
| 5 | விழுப்புரம் | 3. விழுப்புரம் | 11 | திண்டிவனம், திருக்கோவிலூர், விழுப்புரம், செஞ்சி, திருவெண்ணெய்நல்லூர், அவலூர்பேட்டை, மரக்காணம், விக்கிரவாண்டி, அனந்தபுரம், வளத்தி, மேல்சித்தாமூர் |

| வ.எண் | மாவட்டம் | விற்பனை குழு | ஒழுங்கு முறை விற்பனை கூடங்களின் எண்ணிக்கை | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பெயர் |
|---|---|---|---|---|
| 6 | கள்ளக்குறிச்சி | 4. கள்ளக் குறிச்சி | 8 | மணலூர்பேட்டை, மூங்கில்துறைப்பட்டு, உளுந்தூர்பேட்டை, திருநாவலூர், சின்னசேலம், கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், சங்கராபுரம் |
| 7 | வேலூர் | 5. வேலூர் | 3 | வேலூர், குடியாத்தம், காட்பாடி |
| 8 | திருப்பத்தூர் | | 3 | திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர் |
| 9 | இராணிப் பேட்டை | | 6 | ஆற்காடு, காவேரிப்பாக்கம், கலவை, அம்மூர், திமிரி, அரக்கோணம் |
| 10 | திருவண்ணாம லை | 6. திருவண்ணா மலை | 18 | திருவண்ணாமலை, ஆரணி, வந்தவாசி, சேத்துப்பட்டு, செய்யாறு, போளூர், செங்கம், புதுப்பாளையம், வாணாபுரம், வேட்டவலம், தெள்ளார், மங்கலமாமண்டூர், தேசூர், பெரணமல்லூர், |

| வ.எண் | மாவட்டம் | விற்பனை குழு | ஒழுங்கு முறை விற்பனை கூடங்களின் எண்ணிக்கை | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | தூசி, கீழ்பென்னாத்தூர், ஆதமங்கலம்புதூர், நாயுடுமங்கலம் |
| 11 | சேலம் | 7. சேலம் | 14 | சேலம், ஆத்தூர், சங்ககிரி, கொங்கணாபுரம், கொளத்தூர், மேச்சேரி, வாழப்பாடி, தம்மம்பட்டி, தலைவாசல், ஓமலூர், காடையாம்பட்டி, கெங்கவல்லி, கருமந்துறை , எடப்பாடி |
| 12 | நாமக்கல் | 8. நாமக்கல் | 6 | நாமக்கல், ராசிபுரம், திருச்செங்கோடு, பரமத்திவேலூர், நாமகிரிப்பேட்டை, சோளக்காடு |
| 13 | தருமபுரி | 9. தருமபுரி | 7 | தருமபுரி, பாலக்கோடு, பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிபட்டி, கம்பைநல்லூர், பாப்பாரப்பட்டி |

| வ.எண் | மாவட்டம் | விற்பனை குழு | ஒழுங்கு முறை விற்பனை கூடங்களின் எண்ணிக்கை | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பெயர் |
|---|---|---|---|---|
| 14 | கிருஷ்ணகிரி | | 9 | கிருஷ்ணகிரி, ஓசூர், கெலமங்கலம், போச்சம்பள்ளி, காவேரிபட்டினம், ஊத்தங்கரை, பர்கூர், இராயக்கோட்டை, தேன்கனிக்கோட்டை |
| 15 | கோயம்புத்தூர் | 10. கோயம் புத்தூர் | 10 | அன்னூர், காரமடை, கோயம்புத்தூர், சூலூர், ஆனைமலை, பொள்ளாச்சி, மலையடிப்பாளையம், நெகமம், கிணத்துக்கடவு, தொண்டாமுத்தூர் |
| 16 | திருப்பூர் | 11. திருப்பூர் | 15 | குன்னத்தூர், காங்கேயம், வெள்ளக்கோவில், தாராபுரம், மூலனூர், அலங்கியம், முத்தூர், திருப்பூர், அவினாசி, சேவூர், பல்லடம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், பெதப்பம்பட்டி, பொங்கலூர் |

| வ.எண் | மாவட்டம் | விற்பனை குழு | ஒழுங்கு முறை விற்பனை கூடங்களின் எண்ணிக்கை | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பெயர் |
|---|---|---|---|---|
| 17 | ஈரோடு | 12. ஈரோடு | 18 | ஈரோடு, அவல்பூந்துறை, கொடுமுடி, சிவகிரி, சித்தோடு, பவானி, பூதப்பாடி, அந்தியூர், மயிலம்பாடி, கவுந்தப்பாடி, கோபிசெட்டிப் பாளையம், நம்பியூர், வெள்ளாங்கோவில், சத்தியமங்கலம், புஞ்சைபுளியம்பட்டி, தாளவாடி, பெருந்துறை, எழுமாத்தூர் |
| 18 | திருச்சிராப் பள்ளி | 13. திருச்சிராப்-பள்ளி | 10 | மணப்பாறை, துறையூர், லால்குடி, திருச்சிராப்பள்ளி, தொட்டியம், மண்ணச்சநல்லூர், துவரங்குறிச்சி, புல்லம்பாடி, தாத்தையங்கார்பேட்டை, காட்டுபுதூர் |
| 19 | கரூர் | | 4 | குளித்தலை, கரூர், இரும்பூதிப்பட்டி, சின்னதாராபுரம் |

| வ.எண் | மாவட்டம் | விற்பனை குழு | ஒழுங்கு முறை விற்பனை கூடங்களின் எண்ணிக்கை | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பெயர் |
| --- | --- | --- | --- | --- |
| 20 | பெரம்பலூர் | 14. பெரம்பலூர் | 2 | பெரம்பலூர், பூலாம்பாடி |
| 21 | அரியலூர் | | 4 | அரியலூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், மேலணிக்குழி |
| 22 | புதுக் கோட்டை | 15. புதுக் கோட்டை | 10 | ஆலங்குடி, அறந்தாங்கி, புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை, ஆவுடையார்கோவில், கீரனூர், கீரமங்கலம், பொன்னமராவதி, இலுப்பூர், கறம்பக்குடி |
| 23 | தஞ்சாவூர் | 16. தஞ்சாவூர் | 13 | அதிராமபட்டினம், அம்மாபேட்டை, பூதலூர், கும்பகோணம், மதுக்கூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பாபநாசம், பேராவூரணி, தஞ்சாவூர், வல்லம், திருப்பனந்தாள், பாப்பாநாடு |

| வ.எண் | மாவட்டம் | விற்பனை குழு | ஒழுங்கு முறை விற்பனை கூடங்களின் எண்ணிக்கை | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பெயர் |
|---|---|---|---|---|
| 24 | திருவாரூர் | 17. திருவாரூர் | 8 | கொரடாச்சேரி, குடவாசல், வலங்கைமான், திருத்துறைப்பூண்டி, பூந்தோட்டம், மன்னார்குடி, திருவாரூர், வடுவூர் |
| 25 | நாகப்பட்டினம் | 18. நாகப் பட்டினம் | 4 | கீவளூர், நாகப்பட்டினம், வேதாரண்யம், திருப்பூண்டி |
| 26 | மயிலாடுதுறை | | 4 | குத்தாலம், மயிலாடுதுறை, செம்பனார்கோவில், சீர்காழி |
| 27 | மதுரை | 19. மதுரை | 6 | திருமங்கலம், உசிலம்பட்டி, மேலூர், மதுரை, டிகல்லுப்பட்டி. வாடிப்பட்டி |
| 28 | தேனி | 20. தேனி | 7 | தேனி, கம்பம், போடிநாயக்கனூர், சின்னமனூர், ஆண்டிப்பட்டி, உத்தமபாளையம், பெரியகுளம் |

| வ.எண் | மாவட்டம் | விற்பனை குழு | ஒழுங்கு முறை விற்பனை கூடங்களின் எண்ணிக்கை | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பெயர் |
|---|---|---|---|---|
| 29 | திண்டுக்கல் | 21. திண்டுக்கல் | 8 | திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழனி, நத்தம், வத்தலகுண்டு, கோபால்பட்டி, வடமதுரை, வேடசந்தூர் |
| 30 | இராமநாதபுரம் | 22. இராமநாதபுரம் | 6 | இராமநாதபுரம், பரமக்குடி, கமுதி, திருவாடனை, இராஜசிங்கமங்கலம், முதுகுளத்தூர் |
| 31 | விருதுநகர் | 23. விருதுநகர் | 7 | விருதுநகர், இராஜபாளையம், சாத்தூர், அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, வெம்பக்கோட்டை |
| 32 | சிவகங்கை | 24. சிவகங்கை | 7 | சிவகங்கை, திருப்புவனம், மானாமதுரை, சிங்கம்புணரி, காரைக்குடி, இளையான்குடி, தேவகோட்டை |

| வ.எண் | மாவட்டம் | விற்பனை குழு | ஒழுங்கு முறை விற்பனை கூடங்களின் எண்ணிக்கை | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் பெயர் |
|---|---|---|---|---|
| 33 | திருநெல் வேலி | 25. திருநெல் வேலி | 4 | அம்பாசமுத்திரம், வள்ளியூர், திருநெல்வேலி, திசையன்விளை |
| 34 | தென்காசி | | 7 | தென்காசி, சங்கரன்கோவில், பாவூர்சத்திரம், திருவேங்கடம், சிவகிரி, ஆலங்குளம், கடையநல்லூர் |
| 35 | தூத்துக்குடி | | 9 | கோவில்பட்டி, தூத்துக்குடி, புதூர், கடம்பூர், கழுகுமலை, ஸ்ரீவைகுண்டம், விளாத்திகுளம், எட்டையபுரம், சாத்தான்குளம் |
| 36 | நீலகிரி | 26. நீலகிரி | 4 | உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர், கூடலூர் |
| 37 | கன்னியா குமரி | 27. கன்னியா குமரி | 6 | ஈத்தாமொழி, வடசேரி, களியக்காவிளை, திங்கள்சந்தை, குலசேகரம், தொடுவட்டி |
| | **மொத்தம்** | | **284** | |

**அட்டவணை: 4.2 விற்பனைக்குழு வாரியாக துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்**

| வ. எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனை கூடங்களின் பெயர் | துணை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | ஈரோடு | அந்தியூர் | பர்கூர் |
| 2 | | பெருந்துறை | வெப்பிலி |
| 3 | திருவண்ணாமலை | சேத்பட் | கொழப்பலூர் |
| 4 | | போளூர் | கேளூர் |
| 5 | | வானாபுரம் | தானிப்பாடி |
| 6 | | ஆரணி | கண்ணமங்கலம் |
| 7 | திருவாரூர் | திருவாரூர் | பெருந்தரக்குடி |
| 8 | விழுப்புரம் | விழுப்புரம் | சிறுவந்தாடு |
| 9 | கள்ளக்குறிச்சி | தியாகதுருகம் | G. அரியூர் |
| 10 | | சின்னசேலம் | வடகனந்தல் |
| 11 | தஞ்சாவூர் | கும்பகோணம் | தென்னூர் |
| 12 | நாகப்பட்டினம் | செம்பனார்கோவில் | மாணிக்கப்பங்கு |
| 13 | கோயம்புத்தூர் | கிணத்துக்கடவு | வடக்கிபாளையம் |

**அட்டவணை: 4.3. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகள் (எண்களில்)**

| வ. எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனைக் கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | குளிர்பதனக் கிடங்குகள் | குளிர்பதனக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | சிறப்பு வணிக வளாகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 3 | 5 | 6,200 | 2 | 2 | 6 | 3 | 15 | -- |
| 2 | செங்கல்பட்டு | 4 | 2 | 2,600 | 1 | -- | 2 | 1 | 5 | -- |
| 3 | திருவள்ளூர் | 8 | 8 | 11,500 | 4 | -- | 7 | 3 | 7,005 | -- |
| 4 | கடலூர் | 11 | 19 | 29,000 | 27 | 73 | 14 | 11 | 1,602 | -- |
| 5 | விழுப்புரம் | 11 | 21 | 52,600 | 28 | 32 | 12 | 4 | 50 | -- |
| 6 | கள்ளக்குறிச்சி | 8 | 18 | 24,000 | 18 | 13 | 8 | 3 | 55 | -- |
| 7 | வேலூர் | 3 | 6 | 4,400 | 4 | 36 | 3 | 5 | 39 | -- |
| 8 | இராணிப்பேட்டை | 6 | 8 | 7,300 | 13 | 16 | 6 | 1 | 5 | -- |
| 9 | திருப்பத்தூர் | 3 | 8 | 6,800 | 2 | 4 | 2 | 2 | 30 | -- |
| 10 | திருவண்ணாமலை | 18 | 39 | 46,900 | 49 | 54 | 28 | 11 | 195 | -- |
| 11 | தருமபுரி | 7 | 5 | 5,800 | 7 | 10 | 9 | 10 | 6,320 | 1 |
| 12 | கிருஷ்ணகிரி | 9 | 7 | 7,800 | 6 | 18 | 11 | 25 | 1,567 | 2 |
| 13 | சேலம் | 14 | 17 | 15,200 | 20 | 20 | 22 | 16 | 1,275 | 1 |
| 14 | நாமக்கல் | 6 | 10 | 8,600 | 3 | 0 | 6 | 6 | 84 | 1 |
| 15 | ஈரோடு | 18 | 53 | 72,514 | 53 | 37 | 49 | 14 | 1,260 | 3 |
| 16 | திருப்பூர் | 15 | 64 | 86,500 | 30 | 10 | 52 | 8 | 162 | 2 |

| வ. எண் | மாவட்டம் | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனைக் கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | குளிர்பதனக் கிடங்குகள் | குளிர்பதனக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | சிறப்பு வணிக வளாகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | கோயம்புத்தூர் | 10 | 32 | 31,405 | 16 | 46 | 30 | 23 | 6,704 | 3 |
| 18 | நீலகிரி | 4 | -- | -- | 2 | 5 | -- | 10 | 597 | 2 |
| 19 | பெரம்பலூர் | 2 | 2 | 2,500 | 1 | -- | 1 | 4 | 85 | 1 |
| 20 | அரியலூர் | 4 | 7 | 6,200 | 10 | -- | 6 | 1 | 25 | -- |
| 21 | திருச்சிராப்பள்ளி | 10 | 12 | 15,375 | 12 | 20 | 11 | 15 | 3,297 | 4 |
| 22 | கரூர் | 4 | 2 | 1000 | 4 | 0 | 1 | 1 | 25 | -- |
| 23 | தஞ்சாவூர் | 13 | 28 | 41,250 | 18 | 16 | 19 | 8 | 155 | 2 |
| 24 | திருவாரூர் | 8 | 19 | 21,500 | 8 | 20 | 16 | 3 | 15 | -- |
| 25 | நாகப்பட்டினம் | 4 | 3 | 4,500 | 4 | -- | -- | - | - | -- |
| 26 | மயிலாடுதுறை | 4 | 10 | 11,320 | 7 | -- | 5 | - | - | -- |
| 27 | புதுக்கோட்டை | 10 | 4 | 3,500 | 3 | -- | 5 | 5 | 140 | 1 |
| 28 | மதுரை | 6 | 14 | 18,000 | 4 | 43 | 6 | 5 | 42 | 2 |
| 29 | திண்டுக்கல் | 8 | 17 | 23,200 | 8 | 105 | 18 | 14 | 2,135 | 1 |
| 30 | தேனி | 7 | 12 | 12,500 | 5 | 0 | 10 | 12 | 722 | 2 |
| 31 | விருதுநகர் | 7 | 14 | 16,200 | 4 | 57 | 6 | 11 | 190 | -- |
| 32 | சிவகங்கை | 7 | 16 | 15,850 | 1 | 0 | 8 | 2 | 30 | -- |
| 33 | இராமநாதபுரம் | 6 | 13 | 17,100 | 4 | 140 | 10 | 7 | 2,160 | 1 |
| 34 | திருநெல்வேலி | 4 | 7 | 9,600 | 4 | 18 | 7 | 9 | 310 | 1 |
| 35 | தென்காசி | 7 | 8 | 16,000 | 3 | 55 | 9 | 7 | 1,755 | 1 |
| 36 | தூத்துக்குடி | 9 | 15 | 17,800 | 10 | 5 | 13 | 13 | 2282 | 1 |
| 37 | கன்னியாகுமரி | 6 | 7 | 6,500 | 4 | 8 | 6 | 2 | 27 | 2 |
| | **மொத்தம்** | **284** | **532** | **6,79,014** | **399** | **863** | **424** | **275** | **40,365** | **34** |

### 4.1.2 மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM)

மின்னணு தேசிய வேளாண் சந்தையில் இணைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கில் (SDG-Goal 2) தேசிய அளவிலான குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மின்னணு தேசிய வேளாண் சந்தைத் திட்டம், தற்போது 157 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின்னணு தேசிய வேளாண் சந்தை மூலம் தேங்காய் உட்பட 219 வேளாண் விளைபொருட்கள் வர்த்தகம் செய்யப்படுகின்றன.

2024-2025 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) ரூ.2,256 கோடி மதிப்பிலான மற்றும் 7.06 இலட்சம் மெ.டன் வேளாண் விளைபொருட்களும் 116.29 இலட்சம் தேங்காய்களும் இ-நாம் சந்தைகளில் வர்த்தகம் செய்யப்பட்டு, 6.74 இலட்சம்

விவசாயிகளுக்கு ரூ.1022.29 கோடி மின்னணு பணப்பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

வர்த்தகர்கள் மாநிலத்தின் அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலும் இணையதள வர்த்தகத்தை மேற்கொள்ள ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் (Unified Single Licence) வழங்கப்பட்டுள்ளது. இதுவரை, 8,634 வர்த்தகர்களுக்கு ஒன்றுபட்ட ஒற்றை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

விற்பனைக்கூடங்களுக்கு இடையிலான வர்த்தகத்தில் (Inter-Mandi) ரூ.1107.63 கோடி மதிப்பிலான 3.48 இலட்சம் மெ.டன் வேளாண் விளைபொருட்கள் 2024-2025 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) 7,197 வர்த்தகர்களால் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன. மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகத்தில், ரூ.10.48 கோடி மதிப்பிலான 2,036.21 மெ.டன் வேளாண் விளைபொருட்கள் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன.

மேலும், பண்ணை வழி வர்த்தகம் மூலம் ரூ.52.92 கோடி மதிப்பிலான 27,496 மெ.டன் வேளாண் விளைபொருட்கள் 2024-2025 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2025 வரை) இ-நாம் வலைதளம் மூலம் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன.

மேலும் 2025-26 ஆம் ஆண்டில் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கிற்கிணங்க கூடுதலாக 56 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை மின்னணு தேசிய வேளாண் சந்தையில் ஒருங்கிணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அட்டவணை: 4.4 மாவட்ட மற்றும் விற்பனைக்குழு வாரியாக மின்னணு வேளாண் சந்தைகள்**

| மாவட்டம் | மின்னணு தேசிய வேளாண் சந்தை |
|---|---|
| **1. வேலூர் விற்பனைக்குழு** | |
| ராணிப்பேட்டை (3) | அம்மூர், கலவை, ஆற்காடு |
| வேலூர் (2) | வேலூர், குடியாத்தம் |
| திருப்பத்தூர் (2) | திருப்பத்தூர், வாணியம்பாடி |
| **2. கோயம்புத்தூர் விற்பனைக்குழு** | |
| கோயம்புத்தூர் (9) | அன்னூர், பொள்ளாச்சி, ஆனைமலை, |

| மாவட்டம் | மின்னணு தேசிய வேளாண் சந்தை |
|---|---|
| | நெகமம்,<br>கோயம்பத்தூர்,கிணத்துக்கடவு,<br>செஞ்சேரி, சூலூர், தொண்டாமுத்தூர் |
| **3. திண்டுக்கல் விற்பனைக்குழு** | |
| திண்டுக்கல் (7) | திண்டுக்கல், நத்தம், பழநி,<br>ஒட்டன்சத்திரம், கோபால்பட்டி ,<br>வத்தலகுண்டு, வடமதுரை |
| **4 ஈரோடு விற்பனைக்குழு** | |
| ஈரோடு (14) | அந்தியூர், ஈரோடு, சத்தியமங்கலம்,<br>கோபிசெட்டிப்<br>பாளையம், பெருந்துறை,<br>புஞ்சைப்புளியம்பட்டி, சிவகிரி,<br>எழுமாத்தூர், பூதப்பாடி,<br>அவல்பூந்துறை, கொடுமுடி,தாளவாடி,<br>வெள்ளாங்கோயில், பவானி, |
| **5. இராமநாதபுரம் விற்பனைக்குழு** | |
| இராமநாதபுரம் (6) | பரமக்குடி, முதுகுளத்தூர்,<br>இராஜசிங்கமங்கலம், இராமநாதபுரம்,<br>கமுதி, திருவாடானை |
| **6 .விழுப்புரம் விற்பனைக்குழு** | |
| விழுப்புரம் (7) | திண்டிவனம், செஞ்சி,<br>விக்கிரவாண்டி, விழுப்புரம்,<br>அவலூர்பேட்டை, வளத்தி,<br>மரக்காணம் |

| மாவட்டம் | மின்னணு தேசிய வேளாண் சந்தை |
|---|---|
| 7.கள்ளக்குறிச்சி **விற்பனைக்குழு** | |
| கள்ளக்குறிச்சி (7) | உளுந்தூர்பேட்டை, சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், சின்னசேலம், மணலூர்பேட்டை அரகண்டநல்லூர் |
| **8. திருப்பூர் விற்பனைக்குழு** | |
| திருப்பூர் (9) | திருப்பூர், உடுமலைப்பேட்டை, பெதப்பம்பட்டி, வெள்ளக்கோவில், மூலனூர், பொங்கலூர், மடத்துக்குளம், காங்கேயம், சேவூர் |
| **9.தேனி விற்பனைக்குழு** | |
| தேனி (4) | கம்பம், தேனி, சின்னமனூர், போடிநாயக்கனூர் |
| **10.கடலூர் விற்பனைக்குழு**. | |
| கடலூர் (7) | விருத்தாச்சலம், பண்ருட்டி, கடலூர் முதுநகர், குறிஞ்சிப்பாடி, சேத்தியாத்தோப்பு, காட்டுமன்னார்கோவில், ஸ்ரீமுஷ்ணம் |
| **11.நாமக்கல் விற்பனைக்குழு** | |
| நாமக்கல் (2) | பரமத்திவேலூர், நாமகிரிப்பேட்டை |
| **12.திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழு** | |
| திருச்சிராப்பள்ளி (5) | லால்குடி, துவரங்குறிச்சி, மணப்பாறை, துறையூர், திருச்சிராப்பள்ளி |

| மாவட்டம் | மின்னணு தேசிய வேளாண் சந்தை |
|---|---|
| **13.மதுரை விற்பனைக்குழு** | |
| மதுரை (5) | மதுரை, உசிலம்பட்டி, டி.வாடிப்பட்டி ,மேலூர், திருமங்கலம் |
| **14.திருவண்ணாமலை விற்பனைக்குழு** | |
| திருவண்ணாமலை (8) | செய்யாறு, ஆரணி, தேசூர், வேட்டவலம், போளூர், சேத்துப்பட்டு, கீழ்பென்னாத்தூர், வந்தவாசி |
| **15.நாகப்பட்டினம் விற்பனைக்குழு** | |
| மயிலாடுதுறை (4) | குத்தாலம், மயிலாடுதுறை, செம்பனார்கோவில், சீர்காழி |
| நாகப்பட்டினம்(1) | திருப்பூண்டி |
| **16.காஞ்சிபுரம் விற்பனைக்குழு** | |
| காஞ்சிபுரம் (2) | காஞ்சிபுரம், உத்திரமேரூர் |
| செங்கல்பட்டு (1) | மதுராந்தகம் |
| திருவள்ளூர்(3) | செங்குன்றம், திருத்தணி, திருவள்ளூர் |
| **17.விருதுநகர் விற்பனைக்குழு** | |
| விருதுநகர் (4) | இராஜபாளையம், விருதுநகர், சாத்தூர், அருப்புக்கோட்டை |
| **18.தருமபுரி விற்பனைக்குழு** | |
| தருமபுரி (3) | அரூர், பாலக்கோடு, தருமபுரி |
| கிருஷ்ணகிரி (3) | போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி, ஓசூர் |
| **19. பெரம்பலூர் விற்பனைக்குழு** | |
| அரியலூர் (1) | ஜெயங்கொண்டம் |
| பெரம்பலூர் (1) | பெரம்பலூர் |

| மாவட்டம் | மின்னணு தேசிய வேளாண் சந்தை |
|---|---|
| 20. திருவாரூர் **விற்பனைக்குழு** | |
| திருவாரூர் (4) | குடவாசல் , மன்னார்குடி, திருவாரூர், வலங்கைமான் |
| 21. கன்னியாகுமாரி **விற்பனைக்குழு** | |
| கன்னியாகுமாரி (1) | குலசேகரம் |
| 22. திருநெல்வேலி **விற்பனைக்குழு** | |
| திருநெல்வேலி(3) | அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, வள்ளியூர் |
| தூத்துக்குடி (1) | ஸ்ரீவைகுண்டம் |
| தென்காசி (4) | தென்காசி, சங்கரன்கோவில், பாவூர்ச்சத்திரம், கடையநல்லூர் |
| 23. சிவகங்கை **விற்பனைக்குழு** | |
| சிவகங்கை(5) | சிவகங்கை, மானாமதுரை, சிங்கம்புணரி, காரைக்குடி, தேவகோட்டை |
| 24. புதுக்கோட்டை **விற்பனைக்குழு** | |
| புதுக்கோட்டை(3) | ஆலங்குடி, அறந்தாங்கி, இலுப்பூர் |
| 25. தஞ்சாவூர் **விற்பனைக்குழு** | |
| தஞ்சாவூர் (6) | பாபநாசம், கும்பகோணம், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், பூதலூர் |
| 26. சேலம் **விற்பனைக்குழு** | |
| சேலம்(10) | சேலம், வாழப்பாடி, ஆத்தூர், கெங்கவல்லி, கொங்கணாபுரம், எடப்பாடி, மேச்சேரி, தம்மம்பட்டி கருமந்துறை, ஓமலூர் |

## 4.2 வேளாண் வணிகம்

### 4.2.1. உழவர் சந்தை

விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையே இடைத்தரகர்களைத் தவிர்த்து நேரடி சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்கும் வண்ணம் தமிழ்நாட்டில் உழவர் சந்தைத் திட்டம் 1999ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது. விவசாயிகளுக்கு இலாபகரமான விலையினை உறுதி செய்வதிலும், நுகர்வோருக்கு நியாயமான விலையில் பசுமைக் காய்கறிகள் கிடைக்கச் செய்வதிலும் உழவர் சந்தைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

**அட்டவணை : 4.5 மாவட்ட வாரியாக உழவர் சந்தைகள்**

| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | உழவர் சந்தைகள் |
|---|---|---|---|
| 1 | அரியலூர் | 2 | அரியலூர், ஜெயங்கொண்டம் |
| 2 | கோயம்புத்தூர் | 8 | ஆர்.எஸ்.புரம், சிங்காநல்லூர், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், குறிச்சி, சூலூர், வடவள்ளி, சுந்தராபுரம் |

| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | உழவர் சந்தைகள் |
|---|---|---|---|
| 3 | கடலூர் | 6 | கடலூர், சிதம்பரம், விருத்தாச்சலம், பண்ருட்டி, வடலூர், காட்டுமன்னார்கோவில் |
| 4 | தருமபுரி | 6 | தருமபுரி, பென்னாகரம், பாலக்கோடு, ஏ.ஜெட்டிஅள்ளி, அரூர், காரிமங்கலம் |
| 5 | திண்டுக்கல் | 6 | திண்டுக்கல், பழனி, சின்னாளப்பட்டி, கொடைக்கானல், வத்தலக்குண்டு, வேடசந்தூர் |
| 6 | ஈரோடு | 6 | சம்பத்நகர், கோபிச்செட்டிப்பாளையம், சத்தியமங்கலம், பெரியார் நகர், பெருந்துறை, தாளவாடி |
| 7 | காஞ்சிபுரம் | 4 | காஞ்சிபுரம், படப்பை, சுங்குவார்சத்திரம், குன்றத்தூர் |
| 8 | செங்கல்பட்டு | 9 | பல்லாவரம், செங்கல்பட்டு, மேடவாக்கம், நங்கநல்லூர், மதுராந்தகம், கீழ்க்கட்டளை, ஜமீன்ராயப்பேட்டை, கூடுவாஞ்சேரி, திருக்கழுக்குன்றம் |

| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | உழவர் சந்தைகள் |
|---|---|---|---|
| 9 | கன்னியாகுமரி | 2 | வடசேரி, மயிலாடி |
| 10 | கரூர் | 6 | கரூர், குளித்தலை, வேலாயுதம்பாளையம், பள்ளப்பட்டி, வெங்கமேடு, காந்திகிராமம் |
| 11 | கிருஷ்ணகிரி | 5 | ஓசூர், கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், தேன்கனிக்கோட்டை, ஆவலப்பள்ளி |
| 12 | மதுரை | 7 | அண்ணாநகர், சொக்கிக்குளம், பழங்காநத்தம், உசிலம்பட்டி, திருமங்கலம், மேலூர், ஆனையூர், |
| 13 | நாகப்பட்டினம் | 2 | நாகப்பட்டினம், வேதாரண்யம் |
| 14 | மயிலாடுதுறை | 2 | மயிலாடுதுறை, சீர்காழி |
| 15 | நாமக்கல் | 6 | நாமக்கல், திருச்செங்கோடு, இராசிபுரம், குமாரபாளையம், பரமத்திவேலூர், மோகனூர் |
| 16 | நீலகிரி | 4 | உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர் |
| 17 | பெரம்பலூர் | 2 | பெரம்பலூர், வேப்பந்தட்டை |
| 18 | புதுக்கோட்டை | 7 | புதுக்கோட்டை, அறந்தாங்கி, ஆலங்குடி, கந்தர்வகோட்டை, கறம்பக்குடி, விராலிமலை, பொன்னமராவதி |

| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | உழவர் சந்தைகள் |
|---|---|---|---|
| 19 | இராமநாதபுரம் | 3 | இராமநாதபுரம், பரமக்குடி, கமுதி |
| 20 | சேலம் | 13 | சூரமங்கலம், அம்மாபேட்டை, ஆத்தூர், தாதகாப்பட்டி, மேட்டூர், ஆட்டையாம்பட்டி, அஸ்தம்பட்டி, இளம்பிள்ளை, தம்பம்பட்டி, ஜலகண்டாபுரம், எடப்பாடி, வாழப்பாடி, மேச்சேரி |
| 21 | சிவகங்கை | 5 | சிவகங்கை, தேவகோட்டை, காரைக்குடி, திருப்பத்தூர், சிங்கம்புணரி |
| 22 | தஞ்சாவூர் | 6 | தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருக்காட்டுப்பள்ளி, பாபநாசம், பேராவூரணி |
| 23 | தேனி | 7 | தேனி, கம்பம், போடிநாயக்கனூர், பெரியகுளம், தேவாரம், ஆண்டிப்பட்டி, சின்னமன்னூர் |
| 24 | திருநெல்வேலி | 5 | பாளையங்கோட்டை, கண்டியப்பேரி, மேலப்பாளையம், அம்பாசமுத்திரம், என்.ஜி.ஓ காலனி |
| 25 | தென்காசி | 2 | சங்கரன்கோவில், தென்காசி |

| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | உழவர் சந்தைகள் |
|---|---|---|---|
| 26 | திருப்பூர் | 6 | உடுமலைப்பேட்டை, திருப்பூர் (வடக்கு), திருப்பூர் (தெற்கு), பல்லடம், காங்கேயம், தாராபுரம் |
| 27 | திருவள்ளூர் | 6 | திருத்தணி, திருவள்ளூர், அம்பத்தூர், பருத்திப்பட்டு, நாரவாரிக்குப்பம், பேரம்பாக்கம் |
| 28 | திருவண்ணாமலை | 8 | திருவண்ணாமலை, போளூர், ஆரணி, செய்யார், செங்கம், வந்தவாசி, கீழ்பென்னாத்தூர், தாமரைநகர் |
| 29 | திருவாரூர் | 7 | திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி-1, திருவாரூர், நீடாமங்கலம், முத்துப்பேட்டை, மன்னார்குடி-2, வலங்கைமான் |
| 30 | திருச்சிராப்பள்ளி | 8 | அண்ணாநகர், கே.கே.நகர், துறையூர், மணப்பாறை, முசிறி, துவாக்குடி, லால்குடி, மணச்சநல்லூர் |
| 31 | தூத்துக்குடி | 2 | தூத்துக்குடி , கோவில்பட்டி |
| 32 | வேலூர் | 6 | வேலூர், காட்பாடி, குடியாத்தம், காகிதப்பட்டறை, பேரணாம்பட்டு, பள்ளிகொண்டா |

| வ. எண் | மாவட்டம் | எண்ணிக்கை | உழவர் சந்தைகள் |
|---|---|---|---|
| 33 | இராணிப்பேட்டை | 2 | இராணிப்பேட்டை, ஆற்காடு |
| 34 | திருப்பத்தூர் | 3 | திருப்பத்தூர், நாட்றாம்பள்ளி, வாணியம்பாடி |
| 35 | விழுப்புரம் | 3 | திண்டிவனம், விழுப்புரம், செஞ்சி |
| 36 | கள்ளக்குறிச்சி | 3 | சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி |
| 37 | விருதுநகர் | 8 | அருப்புக்கோட்டை, இராஜபாளையம்,. ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், சிவகாசி, சாத்தூர், காரியாப்பட்டி, தளவாய்புரம் |
| | **மொத்தம்** | **193** | |

உழவர் சந்தைகளில், நாளொன்றுக்கு சராசரியாக ரூ.10 கோடி மதிப்புள்ள 2,350 மெட்ரிக் டன் காய்கனிகள் 8,100 விவசாயிகளால் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகின்றன. உழவர் சந்தைகளின் தினசரி விலை விவரங்களை வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் இணையதளத்திலும் (www.agrimark.tn.gov.in), "உழவர்

செயலியிலும்” (Uzhavar App) தெரிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2021-22ஆம் ஆண்டிலிருந்து உழவர் சந்தைகள் பல்வேறு வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன. 2021-22 முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை 125 உழவர் சந்தைகள் ரூ.35.68 கோடி செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன. 2024-25ஆம் ஆண்டில் ரூ.2.75 கோடி செலவில் 20 உழவர் சந்தைகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திப் பொலிவூட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், 14 புதிய உழவர் சந்தைகள் ரூ.7.53 கோடி செலவில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இது தவிர, திருவாரூர் உழவர் சந்தை ரூ.75 இலட்சம் செலவில் புதுப்பொலிவுடன் மறுகட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் சந்தை மற்றும் உழவர் சந்தையின் அன்றாட விலை விபரங்களை விவசாயிகள் மற்றும் நுகர்வோர்கள் அறிந்திடும் வண்ணம் 50 உழவர்

சந்தைகளில் ரூ.1.15 கோடி செலவில் மின்னணு விலைப்பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. உழவர் சந்தைக் கழிவுகளை உரமாக்கும் இயந்திரங்கள் 25 உழவர் சந்தைகளில் ரூ.2.75 கோடி செலவில் நிறுவப்பட்டு 2024-25 ஆம் ஆண்டில் இதுவரை 34.83 மெட்ரிக் டன் இயற்கை உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இல்லம் தேடிப் பண்ணைக் காய்கறிகள் திட்டத்தில் திருச்சி, கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், செங்கல்பட்டு, கடலூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் விவசாயிகள், நுகர்வோர்கள் மற்றும் படித்த இளைஞர்கள் பயனடையும் வகையில் 30 நடமாடும் காய்கனி அங்காடிகள் வாங்குவதற்கு மானியமாக ரூ.53.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் (FSSAI) தரமதிப்பீட்டுச் சான்று இதுவரை 93 உழவர் சந்தைகளுக்குப் பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் உழவர் சந்தைகளில்

விற்பனை செய்யப்படும் காய்கனிகளின் தரம் உறுதி செய்யப்படுகிறது.

உழவர் சந்தைகளில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் கிடைத்திடும் வகையிலும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டும் 85 உழவர் சந்தைகளில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்குக் கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

2025-26 ஆம் ஆண்டில், 50 உழவர் சந்தைகளில் புதிய கடைகள், குடிநீர், கழிப்பறை வசதிகள், கடைகள் புனரமைத்தல், தரைத்தளம் மற்றும் கூரைகள் சீர்ப்படுத்துதல், நடைபாதை வசதிகள் போன்ற பல்வேறு அடிப்படைக் கட்டமைப்புகள் ரூ.8 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளன.

மேலும், உழவர் சந்தைகளின் செயல்பாட்டினை அதிகரிக்க, பசுமைக் காய்கறிகளை நுகர்வோர் தங்கள் இல்லத்திலேயே நேரடியாக பெற்றுக்கொள்ள ஏதுவாக மாவட்டத் தலைமையிடங்களுக்கு அருகிலுள்ள

உழவர் சந்தைகள் உள்ளூர் இணைய வர்த்தகத் தளத்துடன் (Online Sale Platform) இணைக்க முதற்கட்டமாக 20 உழவர் சந்தைகளில் இத்திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4.2.2 குளிர்பதனக் கிடங்குகள்**:

பழங்கள் மற்றும் காய்கறிகள் எளிதில் அழுகுவதினால் ஏற்படும் இழப்பைக் குறைக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் 40,365 மெ.டன் கொள்ளளவு கொண்ட 275 குளிர்பதன கிடங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விளைபொருட்களைக் குறைந்த விலைக்கு விற்கும் நிலை தவிர்க்கப்பட்டு, உரிய விலை பெற ஏதுவாக விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தொழில் முனைவோர்கள், ஏற்றுமதியாளர்கள் இக்குளிர்பதன வசதிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். 2024-25 ஆம் ஆண்டில் 5,617 விவசாயிகளும், 34 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களும், 165 வர்த்தகர்களும் இவ்வசதியினைப் பயன்படுத்தி உள்ளனர்.

**அட்டவணை : 4.6 கொள்ளளவு அடிப்படையில் மாநிலத்தில் உள்ள குளிர்பதனக் கிடங்குகள் விவரம்**

| கொள்ளளவு (மெ.டன்) | எண்ணிக்கை | மொத்த கொள்ளளவு (மெ.டன்) |
|---|---|---|
| 5000 | 3 | 15,000 |
| 1000-2000 | 11 | 15,000 |
| 500-999 | 9 | 4,500 |
| 100-200 | 18 | 2,155 |
| 50-99 | 12 | 650 |
| 10–49 | 113 | 2,576 |
| <10 | 109 | 484 |
| **மொத்தம்** | **275** | **40,365** |

மேலும், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று ஈரோடு மாவட்டத்தில் தாளவாடி, பர்கூர், சித்தோடு, வெள்ளாங்கோயில் மற்றும் வெப்பிலி ஆகிய 5 இடங்களில் காய்கறி மற்றும் பழங்களைச் சேமிக்க 1,750 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்குகள் ரூ.11.64 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு

பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் மூலம், குளிர்பதனக் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு 42,115 மெட்ரிக் டன்னாக அதிகரிக்கும்.

### 4.2.3 வேளாண் விளைபொருட்களுக்கான மதிப்புக் கூட்டும் மையம்:

வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துவதை ஊக்குவிக்கவும், அதன் மூலம் விவசாயிகளுக்கு இலாபகரமான விலை கிடைக்கவும் கீழ்க்காணும் மதிப்புக் கூட்டு மையங்கள் அமைக்கப்பட்டு விவசாயிகள், தொழில் முனைவோர்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**அட்டவணை** : 4.7 மதிப்புக் கூட்டு மையங்கள்

| வ. எண் | மதிப்புக் கூட்டுதல் மையம் | அமைந்துள்ள இடம்/ மாவட்டம் | மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தென்னை மதிப்புக் கூட்டுதல் மையம் | செண்பகராமன் புதூர்/ கன்னியாகுமரி | 16.00 |
| 2 | தென்னை மதிப்புக் கூட்டுதல் மையம் | பட்டுக்கோட்டை/ தஞ்சாவூர் | 5.20 |
| 3 | மக்காச்சோள விற்பனை மேம்பாட்டு மையம் | தொழுதூர்/ கடலூர் | 3.78 |
| 4 | சிறுதானியங்கள் பதப்படுத்தும் மையம் | கோத்தகிரி/நீலகிரி | 0.35 |
| 5 | வாழை ஏல மையம் | களக்காடு/ திருநெல்வேலி | 6.47 |
| 6 | சமையல் எண்ணெய்க்கான நவீன சிப்பம் கட்டும் வசதியுடன் கூடிய சந்தை ஊக்குவிப்பு மையம் | தெள்ளானந்தல்/ திருவண்ணாமலை | 3.20 |
| 7 | காபி கொட்டை உடைத்து தரம் பிரிக்கும் இயந்திரம், மிளகு தரம்பிரித்து பொடி செய்யும் இயந்திரம் | அய்யன்கொல்லி/ நீலகிரி | 0.75 |

| வ. எண் | மதிப்புக் கூட்டுதல் மையம் | அமைந்துள்ள இடம்/ மாவட்டம் | மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 8 | மிளகு பதப்படுத்தும் மையம் | கொல்லிமலை/ நாமக்கல் | 0.50 |
| 9 | வெங்காயம் | மணச்சநல்லூர்/ திருச்சி | 0.42 |
| 10 | சிவப்பு மிளகாய் | முதுகுளத்தூர்/ இராமநாதபுரம் | 0.23 |
| 11 | மாம்பழம் | போச்சம்பள்ளி/ கிருஷ்ணகிரி | 2.25 |

2024-25 ஆம் ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பலா விவசாயிகள் வருமானத்தை பெருக்கிட பலா மதிப்பு கூட்டும் மையம் கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் ரூ.16.13 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

2024-25ஆம் ஆண்டில், மஞ்சளைப் பதப்படுத்தி அதன் சேமிப்பு காலத்தை அதிகரித்து உரிய விலை கிடைக்க ஏதுவாக ஈரோடு, தருமபுரி மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களுக்கு மொத்தம் 5 மஞ்சள்

மெருகேற்றும் இயந்திரங்கள் மற்றும் 8 வேகவைக்கும் இயந்திரங்கள் ரூ.2.11 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

2025-26ஆம் ஆண்டில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் சின்னவெங்காயம் விற்பனையை ஊக்குவிற்பதற்கான மையம் ரூ.3.65 கோடி மதிப்பீட்டிலும், மஞ்சளுக்கென ஈரோடு மாவட்டத்தில் 1,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ரூ.6.30 கோடி மதிப்பீட்டிலும் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் 2025-26 ஆம் ஆண்டில், **தக்காளி, மிளகாய், சின்னவெங்காயம், முருங்கை, மஞ்சள், வாழை, மா, மல்லிகை, சிறுதானியங்கள், பாரம்பரிய அரிசி உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களுக்கு** 100 மதிப்புக்கூட்டு மையங்கள் அமைப்பதற்கு முதற்கட்டமாக **ரூபாய் 50 கோடி** மதிப்பீட்டில் நிதி

ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 4.2.4 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

தமிழ்நாட்டில் மொத்தம் 1,274 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வெவ்வேறு முகமைகள் மூலமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைத்துறை மூலம் தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு மற்றும் தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் ஆகியவற்றின் கீழ் மொத்தம் 397 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு அவை ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

**அட்டவணை**:4.8. மாவட்ட வாரியாக இத்துறையின் மூலம் உருவாக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விவரம் (2014-15 முதல் 2021-22)

| வ. எண் | மாவட்டம் | தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு (எண்கள்) | தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (எண்கள்) |
|---|---|---|---|
| 1. | அரியலூர் | 8 | 3 |
| 2. | கோயம்புத்தூர் | 11 | 1 |
| 3. | கடலூர் | 11 | 7 |
| 4. | செங்கல்பட்டு | 7 | 1 |
| 5. | தருமபுரி | 11 | 3 |
| 6. | திண்டுக்கல் | 10 | 2 |
| 7. | ஈரோடு | 13 | 3 |
| 8. | கள்ளக்குறிச்சி | 7 | 3 |
| 9. | காஞ்சிபுரம் | 6 | 2 |
| 10. | கன்னியாகுமரி | 5 | - |
| 11. | கரூர் | 8 | 1 |
| 12. | கிருஷ்ணகிரி | 12 | 2 |
| 13. | மதுரை | 11 | 4 |
| 14. | மயிலாடுதுறை | 4 | 1 |
| 15. | நாகப்பட்டினம் | 5 | 2 |
| 16. | நாமக்கல் | 9 | 3 |
| 17. | நீலகிரி | 9 | - |
| 18. | பெரம்பலூர் | 7 | 1 |
| 19. | புதுக்கோட்டை | 11 | 1 |
| 20. | இராமநாதபுரம் | 9 | 1 |
| 21. | இராணிப்பேட்டை | 6 | 4 |
| 22. | சேலம் | 13 | 1 |
| 23. | சிவகங்கை | 8 | 2 |

| வ. எண் | மாவட்டம் | தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு (எண்கள்) | தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (எண்கள்) |
|---|---|---|---|
| 24. | தென்காசி | 6 | 1 |
| 25. | தஞ்சாவூர் | 13 | 4 |
| 26. | தேனி | 7 | 2 |
| 27. | திருப்பத்தூர் | 6 | - |
| 28. | திருவண்ணாமலை | 16 | 4 |
| 29. | திருவாரூர் | 8 | 3 |
| 30. | தூத்துக்குடி | 5 | 2 |
| 31. | திருச்சிராப்பள்ளி | 9 | 6 |
| 32. | திருநெல்வேலி | 4 | 4 |
| 33. | திருப்பூர் | 8 | - |
| 34. | திருவள்ளூர் | 10 | 2 |
| 35. | வேலூர் | 5 | 1 |
| 36. | விழுப்புரம் | 10 | 1 |
| 37 | விருதுநகர் | 10 | 1 |
| | **மொத்தம்** | 318 | 79 |
| | | **ஆக மொத்தம்** | 397 |

### 4.2.4.1 தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு

விவசாயிகளை ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாக கம்பெனி சட்டம்

1956/2013-இன் கீழ் பதிவு செய்து, அவர்தம் விளைபொருட்களை சந்தைப்படுத்தி, நல்ல விலை கிடைப்பதற்கும், அவர்களை வர்த்தகர்களாக மாற்றுவதற்கும், தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பினால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**4.2.4.2 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஆதரவுகள்:**

- **கட்டமைப்பு வசதிகள்** - விதை சுத்திகரிப்பு நிலையங்கள், பருப்பு ஆலைகள் மற்றும் சிறுதானியம் மதிப்பு கூட்டு நிலையங்கள் அமைத்திட மானியம் வழங்கப்பட்டுள்ளது.

- **திறன் மேம்பாட்டுப் பயிற்சி** - விவசாயிகளைத் தொழில் முனைவோர்களாக மாற்ற 310 உழவர் உற்பத்தியாளர் நிறுவன உறுப்பினர்களுக்கு ரூ.2 கோடி செலவில் வர்த்தகத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் பட்டறிவுப் பயணம்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

- **சிப்பமிடல் மற்றும் முத்திரையிடுதலுக்கான பயிற்சி** - மதிப்புக் கூட்டப்பட்ட விளைபொருட்களை சிப்பமிட்டு, முத்திரையிட்டு விற்பனை செய்வதற்கு இந்திய சிப்பமிடுதல் நிறுவனம் (Indian Institute of Packaging) மூலமாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் 318 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- **விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திட**, இத்துறையினால் வழங்கப்படும் பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகளில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக அந்நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான சந்தை இணைப்பினை ஏற்படுத்துவதற்கு 8 மற்றும் 9 ஜீலை-2023 அன்று நடைபெற்ற, வேளாண்

வணிகத் திருவிழாவில் 188 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் 86 கடைகள் அமைத்து ரூ.2.40 கோடி மதிப்பிலான விளைபொருட்களை விற்பனை செய்தனர். இந்நிகழ்வின் வாயிலாக 4,120 விவசாயிகளும் 1.83 இலட்சம் நுகர்வோரும் பயன்பெற்றனர்.

- **இணையவழி வர்த்தகம்** - உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைபொருட்களை இணையவழியில் வர்த்தகம் மேற்கொள்வதற்கு இதுவரை 705 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் (Unified Single License) வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 366 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ரூ.22.76 கோடி மதிப்பிலான 18,838 மெ.டன். விளைபொருட்களை இ-நாம் வலைதளத்தின் வாயிலாக வர்த்தகம் மேற்கொண்டுள்ளனர்.
- **மதிப்பு கூட்டுதல் பயிற்சி** - 2024-25-ஆம் நிதியாண்டில் 37 மாவட்டத்தில் விவசாயிகள்

சாகுபடி செய்யும் விளைபொருட்களுக்கு ஏற்ப மதிப்புக் கூட்டுதல் பயிற்சிகள் ரூ.1.02 கோடி செலவில் தேசிய உணவுத் தொழில்நுட்பம், தொழில் முனைவு மற்றும் மேலாண்மை நிறுவனம் (NIFTEM) வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது.

**4.2.5 தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்**

தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP), ரூ.125 கோடி மதிப்பீட்டில் 2017-18 முதல் 66 உபவடிப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்குதல், ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக மேம்பாட்டில் உதவி மற்றும் வேளாண் தொழில் முனைவோரை ஊக்குவித்தல்

ஆகிய இனங்களை உள்ளடக்கி செயல்படுத்தப்படுகிறது.

### 4.2.5.1 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான மானியத் தொகை

1. ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும் தொடக்க மானியம் ரூ.10 இலட்சம் வழங்கப்படுகிறது.
2. ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும் உற்பத்தி முதலீட்டு மானியம் ரூ.20 இலட்சம் வழங்கப்படுகிறது.
3. திறம்பட செயல்படும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக விரிவாக்க மானியமாக ஒரு நிறுவனத்திற்கு ரூ.30 இலட்சம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் 79 புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்குதல் மற்றும் ஏற்கனவே செயல்பட்டு வரும் 40 நிறுவனங்களுக்கு ஆதார

நிறுவன உதவி அளித்தல், பதிவு செய்வதற்கான தொகை, உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகிய இனங்களில் இதுவரை ரூ.17.83 கோடி செலவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தில், 2024-25 ஆம் ஆண்டில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு பல்வேறு இனங்களில் நிதி உதவி வழங்கிட ரூ.5.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.2.10 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**4.2.5.2 வேளாண் தொழில் முனைவோருக்கான நிதி உதவி:**

தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தில் வேளாண் தொழில் முனைவோருக்கு ரூ.8.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 155 வேளாண் தொழில் முனைவோர்களுக்கு ரூ.4.33 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**4.2.6 விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்.**

காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற அழுகும் பொருட்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைக்கவும், விவசாயிகளை ஏற்றுமதி சந்தை, பதப்படுத்துவோர் மற்றும் நுகர்வோர்களுடன் ஒருங்கிணைக்கவும், உற்பத்தி உபரியினை மதிப்புக் கூட்டு பொருளாக மாற்றவும், தரமான பழங்கள் மற்றும் காய்கறிகளை நுகர்வோருக்குத் தடையின்றி வழங்கிடவும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

நபார்டு வங்கியின் கிடங்கு கட்டமைப்பு நிதி உதவியுடன் ரூ.482.36 கோடி மதிப்பீட்டில் 64 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் 11 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

சிப்பம் கட்டும் அறைகள், குளிர்பதனக் கிடங்குகள், சேமிப்புக் கிடங்குகள், சுத்தம் செய்தல், தரம்

பிரித்தல், சிப்பம் கட்டுதலுக்கான முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்கள் போன்ற வசதிகள் இம்முதன்மை பதப்படுத்தும் நிலையங்களில் உள்ளன.

முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களை சந்தை ஒருங்கிணைப்பு பங்குதாரர்களாகக் (Market Integration Partner) கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2024-25 ஆம் ஆண்டில் தற்போது வரை 50,672 மெ.டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் இம்முதன்மை பதப்படுத்தும் நிலையங்களில் கையாளப்பட்டு, 35,735 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

விளைபொருட்களின் சேமிப்புக் காலத்தினை நீட்டித்து ஏற்றுமதி சந்தைக்கு ஏற்ப தரத்தினை உயர்த்திட காமா கதிரியக்கக் கூடம் (Gamma Irradiation unit), துரித உறைநிலை கூடம் (Individually Quick-

Freezing Unit), நீராவி வெப்ப பதப்படுத்தும் நிலையம் (Vapour Heat Treatment plant) மற்றும் அப்பீடா (APEDA) தரம் பெற்ற சிப்பம் கட்டும் கூடம் போன்ற சிறப்புக் கட்டமைப்பு வசதிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கில், மேலும் 9 மாவட்டங்களில் 20 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள், நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.102.47 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் காய்கறிகள், பழங்கள் மட்டுமன்றி சிறுதானியங்கள், பயறுவகைகள் எண்ணெய்வித்துகள் ஆகிய விளைபொருட்களையும் பதப்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**அட்டவணை:4.9 விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் (கட்டம் – I) - முதன்மை பதப்படுத்தும் நிலையங்களின் விவரங்கள்**

| வ. எண். | மாவட்டம் | முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் |
|---|---|---|
| 1. | கிருஷ்ணகிரி (10) | ஓசூர், காமன்தொட்டி, தேன்கனிக்கோட்டை, தட்டிகானப்பள்ளி, இராயக்கோட்டை, ஆலப்பட்டி, குந்தாரப்பள்ளி, கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், போச்சம்பள்ளி |
| 2. | தருமபுரி (5) | பாலக்கோடு, தருமபுரி, அரூர், பாப்பாரப்பட்டி, பென்னாகரம் (கூட்டுறவு விற்பனை சங்கம்) |
| 3. | கோயம்புத்தூர் (7) | சூலூர், பூலுவாப்பட்டி, பிச்சனூர், வடக்கிபாளையம், பொள்ளாச்சி, ஆனைமலை, சிக்கதாசம்பாளையம். |
| 4. | நீலகிரி (9) | ஓசஹட்டி, அணிக்கொரை, தாவணை, புது அலஞ்சி, சுள்ளிக்கூடு, உப்பட்டி, அய்யங்கொல்லி, நீலகிரி (கூட்டுறவு விற்பனை சங்கம்), உதகை ரோஜா பூங்கா |
| 5. | திருச்சிராப்பள்ளி (12) | லால்குடி, எம்.புத்தூர், மண்ணச்சநல்லூர் – I, மண்ணச்சநல்லூர் – II, திருச்செந்துறை, பி.கே. அகரம், அரசலூர், பிடாரமங்கலம், உப்பிலியாபுரம் |

| | | |
|---|---|---|
| | | (தெற்கு), தாத்தையங்கார்பேட்டை, கள்ளிக்குடி, துறையூர் (கூட்டுறவு விற்பனை சங்கம்) |
| 6. | திண்டுக்கல் (5) | பழனி, கோபால்பட்டி, கவுஞ்சி, வேடசந்தூர், பழனி (கூட்டுறவு விற்பனை சங்கம்) |
| 7. | தேனி (5) | தேனி, சின்னமனூர், கம்பம் – I, கம்பம் – II, பெரியகுளம் |
| 8. | இராமநாதபுரம் (3) | பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி (கூட்டுறவு விற்பனை சங்கம்) |
| 9. | தூத்துக்குடி (3) | ஸ்ரீவைகுண்டம், புதூர், விளாத்திகுளம் |
| 10. | திருநெல்வேலி (2) | இராமையன்பட்டி, வள்ளியூர் |
| 11. | தென்காசி (3) | சங்கரன்கோவில், கடையநல்லூர், பாவூர்சத்திரம் |

**அட்டவணை:4.10 விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம் (கட்டம் – II) - முதன்மை பதப்படுத்தும் நிலையங்களின் விவரங்கள்**

| **வ. எண்** | **மாவட்டம்** | **முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள்** |
|---|---|---|
| 1. | சேலம் (5) | உத்தமசோழபுரம், தலைவாசல், வாழப்பாடி, எடப்பாடி, கொளத்தூர் |

| | | |
|---|---|---|
| 2. | ஈரோடு (2) | அளுக்குளி, அந்தியூர் |
| 3. | திருவள்ளூர் (2) | திருவள்ளூர், ஆரணி |
| 4. | செங்கல்பட்டு (1) | மதுராந்தகம் |
| 5. | காஞ்சிபுரம் (1) | சுங்குவார்சத்திரம் |
| 6. | திருவண்ணாமலை (2) | படவேடு, குப்பநத்தம் |
| 7. | கடலூர் (2) | பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி |
| 8. | விழுப்புரம் (2) | ஒலக்கூர், வானூர் |
| 9. | கரூர் (3) | அரவக்குறிச்சி,மேட்டுமகாதானபுரம், வேலாயுதம்பாளையம் |

### 4.2.7 கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் (KAVIADP):

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கிராமங்கள்தோறும் அறுவடைப் பின்செய் நேர்த்திக்கான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் நோக்கத்தோடு, 2021-22 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளில் 185 உலர்களங்களும், 2023-24 ஆம்

ஆண்டில் 100 உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்பு கூடங்களும் ரூ.34 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு விவசாயிகள் பயன்பாட்டில் உள்ளன.

மேலும், விவசாயிகளின் தேவைக்கேற்ப, 2024-25 ஆம் ஆண்டில் 200 உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்பு கூடங்கள் ரூ.70 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் 2025-26 ஆம் ஆண்டில் 400 உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடங்களை ரூ.154 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4.2.8 தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் சிறுதானியங்கள் பதப்படுத்தும் மையங்கள் அமைத்தல்:**

தமிழ்நாடு சிறுதானிய இயக்கத் திட்டம், சிறுதானியங்கள் அதிகமாக சாகுபடி செய்யப்படும் 25 மாவட்டங்களில், 2023-24 முதல் 2027-28

வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் சிறு தானியங்களின் உற்பத்தியினை அதிகரித்திடவும், அவற்றை மதிப்புக்கூட்டி, மக்களிடையே சிறுதானியங்களின் பயன்பாட்டை அதிகரித்து, அதன்மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திடவும், 2023-24ஆம் ஆண்டில், ரூ.9.38 கோடி மதிப்பீட்டில் 50 சிறுதானிய பதப்படுத்தும் மையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 2024-25-ஆம் ஆண்டில், ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் 40 சிறுதானிய பதப்படுத்தும் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் 2025-26 ஆம் ஆண்டில், மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டத்தின் கீழ் இரண்டு சிறுதானியங்கள் முதன்மை பதப்படுத்தும் மையங்களை ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 4.2.9 வேளாண் உட்கட்டமைப்பு நிதியின் (AIF) கீழ் கடன் வசதிபெறும் திட்டம்

வேளாண் உட்கட்டமைப்பு நிதித் திட்டத்தில் வேளாண் உட்கட்டமைப்புகளை ஏற்படுத்த முன்வரும் விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் தொழில் முனைவோர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு அதிகபட்சமாக ரூ.2 கோடி வரையிலான கடனுக்கு ஏழு ஆண்டு காலத்திற்கு ஆண்டிற்கு 3 சதவீத வட்டிக் குறைப்பு (Interest Subvention) மற்றும் கடன் உத்தரவாதம் (Credit Guarantee) வழங்கப்படுகிறது. ரூ.2 கோடிக்கு மேற்பட்ட கடனாக இருந்தால், ரூ.2 கோடி வரையிலான தொகைக்கு மட்டும் 3 சதவீத வட்டிக் குறைப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் உரிய கட்டமைப்புகள் அமைப்பதன் வாயிலாக முதன்மை, இரண்டாம் நிலை பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டுதலை மேற்கொண்டு விவசாயிகள் நல்ல விலை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு வேளாண் உட்கட்டமைப்பு நிதித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ஐந்தாண்டுகளுக்கான இலக்கான ரூ.5,990 கோடியில், திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து இதுவரை 7,625 கடன்கள் ஒப்பளிப்பு செய்து ரூ.2,466.54 கோடி கடன் அனுமதிக்கப்பட்டு ரூ.1,528.93 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. 2025-26-ஆம் ஆண்டில், இத்திட்டத்தில், ரூ.2,000 கோடி அளவிற்கான கடன் உதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4.2.10 அக்மார்க் தரம்பிரிப்பு**

'அக்மார்க்' ஒன்றிய மற்றும் மாநில அரசால் செயல்படுத்தப்படும் ஒரு தன்னார்வத் திட்டமாகும். அக்மார்க் முத்திரை தரம், சுத்தம் மற்றும் கலப்படமற்ற தன்மைக்கு அரசு அளிக்கும் உத்தரவாதம் ஆகும்.

வேளாண் விளைபொருட்களை பகுப்பாய்வு செய்யவும், தரம் பிரிக்கவும் தமிழ்நாட்டில் 30 அக்மார்க் ஆய்வகங்களும், சோதனை மாதிரிகளைப் பகுப்பாய்வு

செய்ய சென்னையில் ஒரு முதன்மை அக்மார்க் ஆய்வகமும் இயங்கி வருகின்றன.

உணவுப் பொருட்கள், எண்ணெய் வகைகள், மசாலாப் பொடி வகைகள் உள்ளிட்ட 245 பொருட்கள் தரநிலைக்குறியீடுகளின் அடிப்படையில் அக்மார்க் முத்திரையிடப்படுகின்றன.

தமிழ் நாட்டில், 2024-25 ஆம் நிதியாண்டில் 33.92 இலட்சம் குவிண்டால் உணவுப்பொருட்கள் தரம்பிரிப்பு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**அட்டவணை** : 4.11 **மாவட்ட வாரியாக அக்மார்க் தரம்பிரிப்பு ஆய்வக விவரம்**

| வ. எண் | மாவட்டம் | 31 ஆய்வகங்கள் அமைந்துள்ள இடங்களின் விவரம் |
|---|---|---|
| 1. | சென்னை | முதன்மை ஆய்வகம் |
| 2. | காஞ்சிபுரம் (2) (இருப்பு சென்னை) | சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு) |
| 3. | வேலூர் | வேலூர் |

| வ. எண் | மாவட்டம் | 31 ஆய்வகங்கள் அமைந்துள்ள இடங்களின் விவரம் |
|---|---|---|
| 4. | கடலூர் | பண்ருட்டி |
| 5. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 6. | திருச்சிராப்பள்ளி (2) | திருச்சிராப்பள்ளி-I ,திருச்சிராப்பள்ளி-II |
| 7. | கரூர் | கரூர் |
| 8. | மதுரை(2) | மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு) |
| 9. | தேனி | தேனி |
| 10 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 11 | விருதுநகர் | விருதுநகர் |
| 12 | திருநெல்வேலி | திருநெல்வேலி |
| 13 | தென்காசி | தென்காசி |
| 14 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 15 | கன்னியாகுமரி(2) | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 16 | சேலம் | சேலம் |
| 17 | தருமபுரி | தருமபுரி |
| 18 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 19 | ஈரோடு(4) | பெருந்துறை, ஈரோடு-I, ஈரோடு-II சித்தோடு |

| வ. எண் | மாவட்டம் | 31 ஆய்வகங்கள் அமைந்துள்ள இடங்களின் விவரம் |
|---|---|---|
| 20 | திருப்பூர்(5) | திருப்பூர், பல்லடம், காங்கேயம்I, காங்கேயம்-II, வெள்ளக் கோயில் |
| | மொத்தம் | 31 |

**4.2.11 வேளாண் கண்காட்சிகள்:**

தமிழ்நாடு அரசுத்துறைகள், வேளாண்மை / கால்நடை / மீன்வளப் பல்கலைக் கழகங்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி மையங்கள், விளைபொருட்கள் வாரியங்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், விதை உற்பத்தியாளர்கள், நாற்றுக்கள் உற்பத்தி செய்பவர்கள், இடுபொருட்கள் உற்பத்தியாளர்கள், வேளாண் கருவிகள் தயாரிப்பாளர்கள், நுண்ணீர்ப்பாசன நிறுவனங்கள், வேளாண் இயந்திர நிறுவனங்கள், உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் போன்ற அனைவரும் பங்கேற்கும் மூன்று வேளாண் கண்காட்சிகள் விருதுநகர், ஈரோடு,

கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் ஒன்பது கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்.

### 4.2.12 துறைப் பணியாளர்கள் விவரம்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் 1,343 துறைப் பணியாளர்கள், 1,675 விற்பனைக்குழுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**அட்டவணை: 4.12- துறைப் பணியாளர்கள் விவரம்**

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வேளாண்மை கூடுதல் இயக்குநர் | 1 |
| 2 | வேளாண்மை இணை இயக்குநர் | 2 |
| 3 | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) | 37 |
| 4 | வேளாண்மை உதவி இயக்குநர் | 5 |
| 5 | வேளாண்மை அலுவலர் | 170 |
| 6 | துணை வேளாண்மை அலுவலர் | 47 |
| 7 | உதவி வேளாண்மை அலுவலர் | 627 |
| 8 | ஆட்சி அலுவலர் | 1 |
| 9 | உதவி கணக்கு அலுவலர் | 1 |

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 10 | இதர பணியாளர்கள் | 452 |
| | மொத்தம் | **1,343** |

## அட்டவணை: 4.13- விற்பனைக்குழு பணியாளர்கள் விவரம்

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முதுநிலை செயலாளர் / வேளாண்மை துணை இயக்குநர் | 2 |
| 2 | முதுநிலை செயலாளர் | 2 |
| 3 | செயலாளர் / வேளாண்மை உதவி இயக்குநர் | 11 |
| 4 | செயலாளர் | 11 |
| 5 | கண்காணிப்பாளர் | 202 |
| 6 | பொறியியல் மேற்பார்வையாளர் | 9 |
| 7 | மேற்பார்வையாளர் | 346 |
| 8 | இதர பணியாளர்கள் | 1,092 |
| | **மொத்தம்** | 1,675 |

## 4.3. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

விற்பனைக் குழுக்களின் செயல்பாடுகளை முறைப்படுத்தும் நோக்கத்துடன் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் உருவாக்கப்பட்டது. பின்பு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987-ன்படி சட்டபூர்வ வாரியமாகத் திருத்தி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### 4.3.1. நிதி ஆதாரம்

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987-இன் படி, விற்பனைக் குழுக்கள் வசூலிக்கும் உரிமக்கட்டணம் மற்றும் சந்தைக் கட்டணத் தொகையிலிருந்து 15 சதவீதம் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்குப் பங்குத் தொகையாகப் பெறப்பட்டு சந்தை மேம்பாட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 4.3.2. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் செயல்பாடுகள்

#### 4.3.2.1. திறன் மேம்பாட்டுப் பயிற்சி

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும், விவசாயிகளுக்கு உணவு பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல், வேளாண் சந்தை விரிவாக்கம், மின்னணு சந்தை தொடர்பான பயிற்சிகளும் சேலம் மாவட்டம் உத்தமசோழபுரத்தில் செயல்பட்டு வரும் மாநில அளவிலான பயிற்சி மையத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

2024-25 ஆம் ஆண்டில் ரூ.18.09 இலட்சம் செலவில் 580 தொழில்நுட்ப அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் ஊரக இளைஞர்கள் பயன்பெறும் வகையில் 26 பயிற்சிகள் நடத்தப்பட்டன. 2025-26 ஆம் ஆண்டிலும் பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

#### 4.3.2.2 பன்னாட்டு மலர்கள் ஏல மையம்

பன்னாட்டு மலர்கள் ஏல மையம் 7.56 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.20.20 கோடி மதிப்பீட்டில் விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்ட நிதியின் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மொரனப்பள்ளி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. குளிர்பதனக் கிடங்கு, ஏல மையம், கையாளுதல், சிப்பம் கட்டுதல் மற்றும் பயிற்சி அறை உள்ளிட்ட வசதிகள் இம்மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 94,745 கொத்துகள் மற்றும் 17.85 இலட்சம் தண்டுகள் ரூ.90.79 இலட்சம் மதிப்பில் மலர்களின் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன.

#### 4.3.2.3 உணவுப் பூங்காக்கள் அமைத்தல்

உணவுப் பொருட்கள் வீணாவதைக் குறைத்தல், பண்ணைப்பொருட்களை மதிப்புக் கூட்டல் போன்ற செயல்பாடுகளால் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் உணவுப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**i) மெகா உணவுப் பூங்கா**

திருநெல்வேலி மாவட்டம் கங்கை கொண்டானில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் அடிப்படை வசதிகள், பொதுக் கட்டமைப்பு வசதிகளுடன் 50 ஏக்கர் பரப்பளவில் ரூ.77.02 கோடி திட்ட மதிப்பீட்டில் மெகா உணவுப் பூங்கா நிறுவப்பட்டுள்ளது.

இவ்வுணவுப்பூங்காவில், தொழில் முனைவோர்கள் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க நீண்டகால குத்தகைக்கு தொழில் மனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**ii) வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள்:**

கடலூர், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், மதுரை ஆகிய ஏழு இடங்களில் ரூ.191.88 கோடி திட்ட மதிப்பீட்டில் தலா 10 ஏக்கர் பரப்பளவில் கட்டமைப்பு வசதிகளுடன் வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் அமைக்கப்பட்டு

வருகின்றன. இத்தொகுப்புகள் விரைவில் உணவு பதப்படுத்தும் முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு விடப்பட உள்ளன.

#### 4.3.2.4 உழவர் அங்காடிகள்

விவசாயிகளுக்கு சந்தை வாய்ப்புகளை எளிதாக்கவும், நுகர்வோருக்குத் தரமான உணவு கிடைப்பதை உறுதி செய்யவும் தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் மூலம் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 100 உழவர் அங்காடிகள் நிறுவப்பட உள்ளன. முதற்கட்டமாக சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள புற நகர்ப் பகுதிகளில் 25 உழவர் அங்காடிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

#### 4.3.2.5 விலை ஆதரவுத் திட்டம்

அறுவடைக் காலத்தில் ஏற்படும் சந்தை விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும்

நோக்கத்துடன் "விலை ஆதரவுத் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் (TNSAMB) மாநில அளவிலான முகமையாகவும், தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம்(NAFED) மத்தியக் கொள்முதல் முகமையாகவும், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் முதன்மைக் கொள்முதல் மையங்களாகவும் (Primary Procurement Centre) செயல்படுகின்றன. பயறு வகைகள் (உளுந்து மற்றும் பச்சைப்பயறு) மற்றும் கொப்பரை ஆகிய விளைபொருட்களின் சந்தை விலை குறைந்தபட்ச ஆதரவு விலையினை விடக் குறைவாக உள்ள போது சராசரி தர மதிப்பீடு (Fair Average Quality) தரத்தில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டு இணையவழியில் விவசாயிகளுக்குத் தொகை வழங்கப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு முடிய ரூ.64.16 கோடி மதிப்பிலான 8,343 மெ.டன்

பயறுவகைகள் 7,779 விவசாயிகளிடமிருந்தும், ரூ.1,598.66 கோடி மதிப்பிலான 1.47 இலட்சம் மெ.டன் கொப்பரை 1.01 இலட்சம் விவசாயிகளிடமிருந்தும் குறைந்தபட்ச ஆதரவு விலையில் நேரடியாகக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

2024-2025 இராபி பருவத்தில் 44,800 மெ.டன் உளுந்து மற்றும் 1,548 மெ.டன் பச்சைப்பயறு கொள்முதல் செய்ய ஒன்றிய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டில், 98,796 மெ.டன் கொப்பரை கொள்முதல் செய்ய ஒன்றிய அரசின் அனுமதி எதிர்நோக்கப்படுகிறது.

**4.3.2.6 வேளாண் ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள்**

வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த பொருட்களின் ஏற்றுமதியினை உயர்த்தி விவசாயிகளின் வருவாயினை அதிகரிக்க தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

#### 4.3.2.6.1 புவிசார் குறியீடு பெறுதல்

தனித்துவ அடையாளமான புவிசார் குறியீட்டுடன் கூடிய வேளாண் விளைபொருட்கள் உலக அளவில் பெரும்பாலான மக்களால் அறியப்படுவதால் அவற்றின் சந்தைத்தேவை அதிகரிப்பதுடன் ஏற்றுமதிக்கான வாய்ப்பும் ஏற்படுகிறது. தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில் இதுவரை வேளாண்மை உழவர் நலத்துறையின் மூலம் 35 வேளாண் விளைபொருட்களுக்கு தனித்துவமான புவிசார் குறியீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சோழவந்தான் வெற்றிலைக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.

**அட்டவணை: 4.14 புவிசார் குறியீடு பெற பதிவு செய்யப்பட்ட பயிர்களின் விபரம்**

| வ.எண் | மாவட்டம் | புவிசார் குறியீடு பெற பதிவு செய்யப்பட்ட பயிர்கள் |
|---|---|---|
| 1 | கடலூர் | பண்ருட்டி பலா |
| 2 | கடலூர் | பண்ருட்டி முந்திரி |

| வ.எண் | மாவட்டம் | புவிசார் குறியீடு பெற பதிவு செய்யப்பட்ட பயிர்கள் |
|---|---|---|
| 3 | விருதுநகர் | சாத்தூர் சம்பா மிளகாய் |
| 4 | பெரம்பலூர் | செட்டிகுளம் சின்ன வெங்காயம் |
| 5 | தென்காசி | புளியங்குடி எலுமிச்சை |
| 6 | காஞ்சிபுரம் | தூயமல்லி அரிசி |
| 7 | ஈரோடு | கவுந்தம்பாடி நாட்டுச்சர்க்கரை |
| 8 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் சித்திரைக்கார் அரிசி |
| 9 | சேலம் | சேலம் கண்ணாடி கத்திரி |
| 10 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி அரசம்பட்டி தென்னை |
| 11 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி பன்னீர் ரோஜா |
| 12 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் பேராவூரணி தென்னை |
| 13 | திருப்பூர் | மூலனூர் குட்டை முருங்கை |
| 14 | தூத்துக்குடி | தூத்துக்குடி விளாத்திகுளம் மிளகாய் |
| 15 | விருதுநகர் | சாத்தூர் வெள்ளரி |
| 16 | கடலூர் | கடலூர் கோட்டிமுளை கத்தரிக்காய் |
| 17 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் வீரமாங்குடி அச்சு வெல்லம் |
| 18 | மதுரை | மதுரை செங்கரும்பு |
| 19 | சிவகங்கை | சிவகங்கை கருப்புகவுனி அரிசி |

| வ.எண் | மாவட்டம் | புவிசார் குறியீடு பெற பதிவு செய்யப்பட்ட பயிர்கள் |
|---|---|---|
| 20 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி ஆண்டார்குளம் கத்திரிக்காய் |
| 21 | விருதுநகர் | விருதுநகர் அதலைக்காய் |
| 22 | விழுப்புரம் | திண்டிவனம் பனிப்பயறு |
| 23 | கரூர் | கரூர் சேங்கல்துவரை |
| 24 | திருவண்ணாமலை | ஜவ்வாது மலை சாமை |
| 25 | ஈரோடு | சத்தியமங்கலம் செவ்வாழை |
| 26 | நாமக்கல் | கொல்லிமலை மிளகு |
| 27 | இராணிப்பேட்டை | மீனம்பூர் சீரக சம்பா |
| 28 | திண்டுக்கல் | அய்யம்பாளையம் நெட்டை தென்னை |
| 29 | கரூர், சேலம் | செஞ்சோளம் |
| 30 | கடலூர் | புவனகிரி மிதி பாகற்காய் |
| 31 | கிருஷ்ணகிரி | உரிகம்புளி |
| 32 | திருநெல்வேலி | திருநெல்வேலி அவுரி இலை |
| 33 | தேனி | ஓடைப்பட்டி விதையில்லா திராட்சை |
| 34 | கரூர், திண்டுக்கல், திருப்பூர் | செங்காந்தள் (கண்வலி) விதை |

மேலும் 2025-26 ஆம் ஆண்டில் நல்லூர் வரகு(கடலூர்), வேதாரண்யம் முல்லை(நாகப்பட்டினம்), நத்தம் புளி (திண்டுக்கல்), ஆயக்குடி

கொய்யா(திண்டுக்கல்), கப்பல்பட்டி கரும்பு முருங்கை (திண்டுக்கல்) ஆகிய 5 வேளாண் விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

### 4.3.2.6.2 ஏற்றுமதி தொடர்பான பயிற்சி மற்றும் உற்பத்தியாளர்- வர்த்தகர்கள் இணைப்பு

சுவைதாளிதப் பொருட்களை விளைவிக்கும் விவசாயிகள் / உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு ரூ.6 இலட்சம் செலவில் ஏற்றுமதி தொடர்பான உற்பத்தியாளர்- வர்த்தகர்கள் இணைப்புடன் கூடிய பயிற்சி விருதுநகர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் நடத்தப்பட்டு 200 விவசாயிகள்/ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்/ வர்த்தகர்கள்/ ஏற்றுமதியாளர்கள் பயன் அடைந்துள்ளனர்.

2025-2026 ஆம் ஆண்டிலும் இப்பயிற்சிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.3.2.6.3 ஏற்றுமதி தொடர்பான சான்றிதழ்கள் பெற வழிவகை செய்தல்

விவசாயிகள்/ உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஆகியோர் இறக்குமதி - ஏற்றுமதிக் குறியீடு (IEC)/ பதிவு மற்றும் உறுப்பினர் சான்றிதழ் (RCMC) / டிஜிட்டல் கையொப்பம் (Digital signature) / FSSAI உரிமம் (License) போன்ற சான்றிதழ்களைப் பெற ஏதுவாக ஒரு விவசாயி/உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு அதிகபட்சமாக ரூ.15,000/- வரை நிதியுதவி வழங்கிட 2024-25 ஆம் ஆண்டு மாநில அரசு நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.3.2.6.4 வேளாண் ஏற்றுமதி ஆலோசனை மையம்

அனைத்து மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அலுவலகங்களில் வேளாண் ஏற்றுமதி ஆலோசனை மையம் அமைக்கப்பட்டு, வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம்

(DGFT), வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) போன்ற ஏற்றுமதி நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் விவசாயிகள், சிறு வேளாண் வணிகர்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த விளைபொருட்களை ஏற்றுமதி செய்வது தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2025-26ஆம் ஆண்டிலும் ஏற்றுமதிக்கான ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்படும்.

**4.3.2.7 கட்டுமானம் / பராமரிப்புப் பணிகள்**

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் சார்ந்த கட்டமைப்புகளை உருவாக்கி அவற்றைப் பராமரிக்கும் வகையில் வாரியத்தின் பொறியியல் பிரிவு செயல்பட்டு வருகிறது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், உழவர் சந்தைகள், உழவர்

அங்காடிகள், உணவுப்பூங்காக்கள், கிடங்குகள், குளிர்பதனக்கிடங்குகள் போன்ற கட்டுமானங்களை இப்பிரிவு உருவாக்கி அவற்றைப் பராமரித்து வருகிறது.

2024-25 ஆம் ஆண்டில் ரூ. 198 கோடி மதிப்பிலான கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டன. 2025-26 ஆம் ஆண்டிலும் இத்திட்டப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### 4.3.2.8. வேளாண் சந்தைப்படுத்துதல் சேவைகளை மின்னணுமயமாக்கல்

விவசாயிகளும் வணிகர்களும் எளிமையான முறையில் விளைபொருட்களை வணிகம் செய்ய ஏதுவாக இணையவழி முறையில் கிடங்குகள் மற்றும் குளிர்பதனக் கிடங்குகளைப் பதிவு செய்யவும், வணிகர்களுக்கு உரிமம் வழங்கவும் மென்பொருள் உருவாக்கப்பட்டு வருகின்றது. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வணிகச் செயல்பாடுகளை கண்காணிக்கவும், அவர்தம் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்யவும் மேலாண்மைத்

தகவல் அமைப்பு (Management Information System) மற்றும் மின்னணு வணிக தளம் உருவாக்கப்பட்டு வருகின்றது. தொடர்புடைய அனைவரும் பயனடையும் வகையில் இந்த மின்னணு சேவைகள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

## 5. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், 18 உறுப்புக் கல்லூரிகள், 42 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 15 வேளாண்மை அறிவியல் நிலையங்களின் வாயிலாக வேளாண் கல்வியினை அளித்தும், வேளாண்மையில் ஏற்படும் சவால்களுக்குத் தீர்வு காணும் வகையிலான ஆராய்ச்சிப் பணிகளையும், புதிய பயிர் இரகங்களையும், தொழில்நுட்பங்களையும் உழவர்களிடம் எடுத்துச் செல்லும் வேளாண் விரிவாக்கப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. 2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.724 கோடி மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 5.1 வேளாண்மைக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 18 உறுப்பு வேளாண்மைக் கல்லூரிகள் வாயிலாக 15 இளநிலை, 34 முதுநிலை, 29 முனைவர் பட்டப்

படிப்புகள் வழங்கப்படுகின்றன. இவை தவிர, நான்கு உறுப்பு (பட்டயப்படிப்பு) நிறுவனங்கள், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் பட்டயப்படிப்பினை வழங்கி வருகின்றன. வேளாண்மை, வேளாண்மை சார்ந்த பிரிவுகளில் 41 சான்றிதழ் பாடங்களும், ஆறு இணையவழி சான்றிதழ் பாடங்களும், இடுபொருள் விற்பனையாளர்களுக்கான ஒரு பட்டயப்படிப்பும், சிறப்பு சான்றிதழ் பாடம் ஒன்றும், 12 பிற பட்டயப்படிப்புகளும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக வழங்கப்படுகின்றன.

இளநிலை பட்டப்படிப்பிற்காக 2024-2025 ஆம் ஆண்டில் 30,340 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின் பேரிலும், வேளாண் பட்டதாரிகளின் தேவையை பூர்த்தி செய்யவும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு

வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 10 சதவிதம் மாணவர் சேர்க்கை அதிகரிக்கப்படுகிறது.

**அட்டவணை: 5.1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கை (2024-25)**

| படிப்பு விபரம் | சேர்க்கை |
|---|---|
| இளநிலை (Under Graduate) | 4,985 |
| முதுநிலை (Post Graduate) | 510 |
| முனைவர் (Doctorate) | 183 |
| பட்டயப்படிப்பு (Diploma) | 640 |
| திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி (ODL) | 2,314 |
| **மொத்தம்** | **8,632** |

### 5.1.1 புதுமைப் பெண் திட்டம்

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசின் உன்னதத் திட்டமான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டத்தில் (புதுமைப்பெண் திட்டம்) மேற்படிப்புக்கான உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ.1,000/- வழங்கப்படுகிறது. 2024-2025 ஆம் கல்வியாண்டில் இளமறிவியல் வேளாண்மை, வேளாண் சார்ந்த படிப்புகளைப் பயிலும் உறுப்புக்

கல்லூரிகளைச் சார்ந்த 247 மாணவிகளுக்கும், இணைப்புக் கல்லூரிகளில் பயிலும் 297 மாணவிகளுக்கும் இவ்வுதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

### 5.1. 2. தமிழ்ப் புதல்வன் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில் மாதம் ரூ.1000/- நிதி உதவி வழங்கிடும் தமிழக அரசின் சிறப்புத் திட்டமான " தமிழ்ப் புதல்வன் திட்டம்" மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களால் 09.08.2024 அன்று கோயம்புத்தூரில் தொடங்கி வைக்கப்பட்டது. 2024-2025 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழகத்தில் இளமறிவியல் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த படிப்புகளைப் பயிலும் 208 உறுப்புக் கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்களுக்கும் 232 இணைப்புக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் இவ்வுதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

### 5.1.3. மாணவர்களுக்கான கல்வி உதவி

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்புகளைச் சேர்ந்த இளநிலை மாணவர்களுக்கான சமுதாயம் சார்ந்த கல்வி நிதிகளுக்காக 2024-25 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர்களின் விண்ணப்பங்கள் சமூகக் கல்வி உதவித் தொகை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ - மாணவிகளின் உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் 7.5 சதவீத இட ஒதுக்கீடு திட்டத்தில் 2024-2025-ஆம் கல்வியாண்டில் 343 மாணவர்கள் கல்வி உதவி பெற்றுள்ளனர்.

### 5.1.4 கட்டமைப்பு வசதிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் 2021-22 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டபடி, கிருஷ்ணகிரி மாவட்டம் பையூரில் புதிய

தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், கரூர் மாவட்டம் மணவாசி, நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர், சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு ஆகிய இடங்களில் மூன்று வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. செட்டிநாடு வேளாண்மைக் கல்லூரிக்கு ரூ.61.79 கோடி தமிழக அரசு நிதி வழங்கப்பட்டு கட்டமைப்புப் பணிகள் நிறைவுறும் நிலையில் உள்ளன. பையூர் தோட்டக்கலைக் கல்லூரிக்கு அரசு நிதி ரூ.70.18 கோடி வழங்கப்பட்டு கட்டமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 5.1.5 மாணவர் நலம், வேலை வாய்ப்பு ஆலோசனை மையம்

ஆற்றல் மிக்க மாணவர்களை உருவாக்கி இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதை நோக்கமாகக் கொண்டு மாணவர் நலம், வேலைவாய்ப்பு ஆலோசனை மையம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகின்றது. இம்மையத்தில், மாணவர்களை

ஊக்குவிக்கும் உரைகள், பயிற்சி வகுப்புகள், மாதிரி குழு கலந்துரையாடல்கள், பயிற்சி, நேர்காணல் தேர்வுகள், தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் போன்றவை நடத்தப்படுகின்றன. 2024-2025 ஆம் ஆண்டில் 290 மாணவர்கள் வேளாண் தொழில் நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள், விதை நிறுவனங்கள், உர நிறுவனங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மாணவர்களின் திறன்களை மேம்படுத்திட, திறன் மேம்பாட்டு மையம் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படும். வேளாண்மையில் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும், மாணவர்களை தொழில் முனைவோராக்க 2025-26 ஆம் ஆண்டில், மாநில அரசு நிதி உதவியுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மையில் புதிய கண்டுபிடிப்புகளுக்கான "டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி" ஒரு கோடி ரூபாயில் ஏற்படுத்தப்படும்.

## 5.2. வேளாண்மை ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மாநிலம் முழுவதும் அந்தந்த இடங்களைச் சார்ந்த

பயிர்களுக்கு ஏற்ற ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை பெருக்கிடவும், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்திடவும், உழவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட வேளாண்மையை வணிகமயமாக்கிடவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இதுவரை 948 புதிய பயிர் இரகங்களையும், 171 பண்ணைக் கருவிகளையும், 1,500 க்கும் மேற்பட்ட மேலாண்மைத் தொழில்நுட்பங்களையும் உருவாக்கியுள்ளது.

2024-25 ஆம் ஆண்டில் "காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை குறைக்கும் வகையில் சிறப்பு வேளாண் கிராமங்களை உருவாக்கி விவசாயிகள், அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம்", பயிர்க்கழிவுகளை வேகமாக சிதைத்து மண்ணின் வளத்தை மேம்படுத்திட பயனுள்ள நுண்ணுயிர்க் கலவையினை உருவாக்குதல், தோட்டக்கலைப் பயிர்களுக்கு வேளாண் இடுபொருட்களைத் துல்லியமாகத் தெளிக்கச் செய்வதற்கான ட்ரோன் தெளிக்கும்

தொழில்நுட்பம், நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற சத்துகள் செறிவூட்டப்பட்ட நெல் இரகங்களை உருவாக்குதல், மஞ்சள், மரவள்ளிக் கிழங்கு, வெங்காய சாகுபடியினை இயந்திரமயமாக்குவதற்கு சாத்தியக்கூறு சோதனை, இயந்திரங்கள் உற்பத்தி, செயல்விளக்கங்கள், நிலசம்பங்கி, செவ்வந்தி, ரோஜாவில் புதிய இரகங்களுக்கான ஆராய்ச்சி திட்டங்கள் ரூ.11.65 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வரும் 2025-26 ஆம் ஆண்டில் காலநிலை மாற்றத்தினால் வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழலில் ஏற்படும் சவால்களை சமாளிக்கும் திறனுடைய கிராமங்களை உருவாக்குதல், உயிர்ம வேளாண் விளைபொருட்களுக்கு தர நிர்ணய ஆய்வகங்கள் அமைத்தல், ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களிடமிருந்து தென்னையை பாதுகாக்க ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள் அமைத்தல், வேளாண்மையின் சவால்களை எதிர்கொள்ள புதுமை கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் போன்ற

திட்டங்களை ரூ.12.97 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 5.2.1 வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்

வளமான வேளாண் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள தமிழ்நாடு, காலநிலை மாற்றம் மற்றும் மாறுபாடுகளால் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்நோக்குகிறது. தீவிர வானிலை இடர்பாடுகளான வறட்சி, பருவம் தவறிய மழை, வெள்ளம் மற்றும் புதியவகை பூச்சிகள் - நோய்கள் போன்றவையினால் பயிர் வளர்ச்சி, விளைச்சல் மற்றும் விவசாயிகளின் வருமானம் பாதிக்கப்படுகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் கிராம அளவிலான மத்தியகால வானிலை முன்னறிவிப்பினை மூன்று சதுர கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒவ்வொரு மணி நேர கால இடைவெளியில் அடுத்த ஆறு நாட்களுக்கான வேளாண் முன்னறிவிப்பாக வழங்கி வருகின்றது. இந்த விபரங்கள் http://aas.tnau.ac.in/vlf இணையத்தளத்தில் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் அளிக்கப்படுகின்றன.

70-80 சதவீத துல்லியமான இந்த கிராம அளவிலான முன்னறிவிப்பின் மூலம் கன மழை, சுழல் காற்று, அதிக வெப்பம் போன்ற அசாதாரண வானிலை விவரங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். மின் தேவை கணக்கீடு செய்வதற்காக கிராம அளவிலான மத்தியகால வானிலை முன்னறிவிப்பை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கி வருகிறது. மேலும், ஆண்டுதோறும் மே மாத இறுதி வாரத்தில் தென்மேற்குப் பருவமழைக்கும், செப்டம்பர் மாத இறுதி வாரத்தில் வடகிழக்குப் பருவமழைக்கும் நீண்டகால மழை முன்னறிவிப்பை வழங்கி உழவர்கள் பயிர் சாகுபடியினைத் திட்டமிடுவதற்கும், திட்ட வல்லுநர்கள் உரிய திட்டங்கள் தீட்டவும் உதவுகிறது. இந்திய வானிலைத் துறையுடன் இணைந்து வாரம் தோறும் செவ்வாய், வெள்ளி ஆகிய இரு தினங்களில் தமிழ்நாட்டில் 12.15 இலட்சம் உழவர்களுக்கு வேளாண் அறிவுரைகள் குறுந்தகவலாக வழங்கப்பட்டு வருகின்றன.

2024-2025 ஆம் ஆண்டில் வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடைகள், பறவைகளுக்கான

910 அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தானியங்கி வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை வழங்கும் செயலியில் சுமார் 6.15 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்து பண்ணை அளவிலான ஆலோசனைகளைப் பெற்று வருகின்றனர். இந்த திட்டம் 2025-26 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.2.2 ஆராய்ச்சி வெளியீடுகள்

கடந்த 2024-25ஆம் ஆண்டில் 1,304 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி இதழ்களில் (Scopus Index Journals) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

### 5.2.3 வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள்

2024-2025 ஆம் ஆண்டில் வேளாண்மை, தோட்டக்கலைப் பயிர்கள் உள்ளடக்கிய 19 புதிய இரகங்கள் தமிழ்நாடு அரசின் மாநில பயிர் இரகங்கள் வெளியீட்டுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு தமிழ்நாடு

வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.2.3. 2024-25 ஆம் ஆண்டில் புதியதாக வெளியிடப்பட்ட பயிர் இரகங்கள்**

| வ. எண் | பயிர் / இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 1. | நெல் கோ 59 | 130-135 நாட்கள் | • பருவம்: சம்பா, பின்சம்பா மற்றும் தாளடி<br>• மகசூல்: 5,867 கிலோ/எக்டர்<br>• நடுத்தர குட்டை மற்றும் வறட்சியைத் தாங்கும் பண்பு<br>• ஆயிரம் நெல் மணிகளின் எடை 14.0 கிராம்<br>• நடுத்தர அளவில் அமைலோஸ் கொண்டது வெண்முதுகு தத்துப்பூச்சி, இலைச்சுருட்டுப் புழு மற்றும் குலைநோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. |
| 2. | நெல் ஏடிடீ 56 | 110-115 நாட்கள் | • பருவம்: கார்/குறுவை/ சொர்ணவாரி/ நவரை<br>• மகசூல்: 6,248 கிலோ/எக்டர்<br>• நடுத்தர சன்ன ரக அரிசி<br>• குலைநோய், இலை உறைக்கருகல் மற்றும் |

| வ. எண் | பயிர் / இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| | | | பாக்டீரிய இலைக்கருகல் நோய்களுக்கு மிதமான எதிர்ப்புத்திறன்.<br>• இலைச்சுருட்டுப்புழு மற்றும் ஆனைக்கொம்பன் ஈ பூச்சிக்கு எதிர்ப்புத் திறனும், புகையான் மற்றும் பச்சைத் தத்துப்பூச்சிக்கு மிதமான எதிர்ப்புத்திறனும் உள்ளது. |
| 3. | நெல் ஏடிடீ 60 | 130-135 நாட்கள் | • பருவம்: தாளடி<br>• மகசூல்: 6028 கிலோ/எக்டர்<br>• நடுத்தர சன்ன ரக அரிசி<br>• நடுத்தர உயரமுடைய (120 செ.மீ) சாயாத தன்மை கொண்ட ரகம்<br>• அதிக அரவைத்திறன் (75%); முழு அரிசி காணும் திறன் (68%) புகையான், தண்டுத் துளைப்பான், இலைச்சுருட்டுப்புழு, பாக்டீரியா இலைக்கருகல் மற்றும் குலைநோய், ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. |

| வ. எண் | பயிர் / இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 4. | மக்காச் சோளம் கோஎச்(எம்) 12 | 110 நாட்கள் | • பருவம்: மானாவாரி: புரட்டாசிப் பட்டம் இறவை: ஆடி, கார்த்திகை, மார்கழி மற்றும் தைப்பட்டம்<br>• மகசூல்: மானாவாரி: 6,511 கிலோ/எக்டர் இறவை : 8,128 கிலோ/எக்டர்<br>• மஞ்சள் கலந்த ஆரஞ்சு நிற மணிகளைக் கொண்ட கதிர்கள்<br>• ஆண் மற்றும் பெண் பூக்கள் ஒரே நேரத்தில் பூப்பதால் வீரிய ஒட்டு விதை உற்பத்தி எளிது<br>• படைப்புழு மற்றும் கரிக்கோல் அழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. |
| 5. | உளுந்து விபிஎன் 12 | 75-80 நாட்கள் | • பருவம்: இறவை: ஆடி, புரட்டாசி மற்றும் சித்திரைப் பட்டம், நெல் தரிசு: பின் சம்பா<br>• மகசூல்: இறவை: 859 கிலோ/எக்டர் நெல் தரிசு : 850 கிலோ/எக்டர்<br>• ஒளி உணராத் திறனுடையது. |

| வ. எண் | பயிர் / இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| | | | • நீண்ட காய்கள் மற்றும் அதிக விதைகள் கொண்டது<br>• மஞ்சள் தேமல், இலை நெளிவு மற்றும் சாம்பல் நோய்களுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது<br>• வெள்ளை ஈ மற்றும் காய்த் துளைப்பான் பூச்சிகளுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. |
| 6. | நிலக்கடலை சிடிஎ 1 | 120-125 நாட்கள் | • பருவம்: வைகாசிப் பட்டம்<br>• மகசூல்: 2454 கிலோ/எக்டர்<br>• முன் பருவ வறட்சியைத் தாங்கவல்லது.<br>• எண்ணெய்ச் சத்து (49%) மற்றும் உடைப்புத்திறன் (70.5%)<br>• சுருள் பூச்சிக்கு எதிர்ப்புத்திறனும், இலை சுருட்டு புழு, இலைப்புள்ளி மற்றும் துருநோய்களுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. |
| 7. | வீரிய ஒட்டு ஆமணக்கு ஒய்ஆர்சிஎச் 3 | 150-170 நாட்கள் | • பருவம்: ஆடி, புரட்டாசி மற்றும் கார்த்திகைப் பட்டம். |

| வ. எண் | பயிர் / இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| | | | • மகசூல்: 2,014 கிலோ/எக்டர்<br>• நடுத்தர உயரம் மற்றும் கிளைகள் உடையது<br>• குலைகளில் பெண் பூக்களின் அளவு 95 சதவீதத்திற்கு மேல் இருக்கும்..<br>• சாயாத செடிகள் மற்றும் காய்கள் வெடிக்காத தன்மை கொண்டது<br>• காவடிப்புழு, புரடீனியா புழு மற்றும் காய்ப்புழுவின் தாக்குதலுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது<br>• வாடல் நோய்க்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. |
| 8. | தக்காளி கோ 4 | 160 - 165 நாட்கள் | • பருவம்: ஆடி / தைப்பட்டம்<br>• மகசூல்: 39.24 டன்/எக்டர்<br>• காம்பின் முனைப்பகுதி மெல்லிய பச்சை நிறம் கொண்டது.<br>• அதிக சேமிப்பு கால அளவு<br>• தக்காளி இலைச் சுருட்டு நோய் தாங்கி வளரும் திறன் கொண்டது. |
| 9. | வீரிய ஒட்டு வெண்டை | 110 - 120 நாட்கள் | • பருவம்: ஆடி/ தைப்பட்டம். |

| வ. எண் | பயிர் / இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| | கோ(எச்) 5 | | • மகசூல்: 28.85 டன்/எக்டர்<br>• விதைத்த 33-36 நாட்களுக்குள் பூக்கும் தன்மை கொண்டது,<br>• விதைத்த 38 நாட்களுக்குப் பிறகு சராசரியாக 23 முறை ஒரு பருவத்தில் (120 நாட்கள்) அறுவடை செய்யலாம்<br>• மஞ்சள் நரம்புத் தேமல் மற்றும் ஈனேசன் இலைச்சுருட்டு நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. |
| 10. | மிளகாய் கோ 5 | 270 நாட்கள் | • பருவம்: ஆடி, புரட்டாசி மற்றும் தைப்பட்டம்<br>• மகசூல்: 4 டன்/எக்டர்<br>• கேப்சைசின் அளவு (>1.0 லட்சம் Heat units)<br>• தொழில்துறை பயன்பாட்டிற்கு ஏற்றது<br>• இலை சுருட்டை வைரஸ் நோயைத் தாங்கி வளரும் தன்மை கொண்டது. |
| 11. | சாம்பல் பூசணி பிஎல்ஆர் 1 | ஓராண்டு | • பருவம்: அனைத்து பருவங்களுக்கும் ஏற்றது<br>• மகசூல்: 21 டன்/எக்டர்<br>• சிறிய காய்கள் (350 கி / காய்)<br>• சாம்பல் பூசணியின் ஒவ்வாத வாசனையற்றது |

| வ. எண் | பயிர் / இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| | | | • குறைந்த விதை எண்ணிக்கை மற்றும் அதிக சதைப்பற்று கொண்டது<br>• மாடித் தோட்டத்திற்கு ஏற்றது<br>• பழ ஈ, இலைத் துளைப்பான் மற்றும் சிகப்பு வண்டு தாக்குதலுக்கு மிதமான எதிர்ப்புத் தன்மை கொண்டது. |
| 12. | வாழை காவேரி வாமன் | 330-360 நாட்கள் | • பருவம்: ஆடி மற்றும் புரட்டாசிப்பட்டம்<br>• மகசூல்: 60-65 டன்/எக்டர்<br>• இந்தியாவின் முதல் சடுதி மாற்று இரகம்<br>• குட்டை இரகத்தினால் (1.5-1.6m) காற்றின் தாக்கத்திலிருந்து மீள முடியும்<br>• வீட்டுத் தோட்டத்திற்கு ஏற்றது. |
| 13. | வெண்ணெய்ப் பழம் டிகேடி 2 | பல்லாண்டு பயிர் | • பருவம்: ஜுன் - செப்டம்பர்<br>• மகசூல்: 129.61 கிலோ / மரம் / வருடம் (51.84 டன்/ எக்டர்)<br>• ஆண்டுதோறும் மகசூல் தரக்கூடியது (480 பழங்கள் / மரம்/வருடம்)<br>• அடர் நடவு முறைக்கு ஏற்றது, |

| வ. எண் | பயிர் / இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| | | | • நடுத்தர அளவிலான பழங்கள் (270 கிராம்)<br>• பழத்துளைப்பான், நுண்துளை பழத்துளைப்பான் மற்றும் வாடல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத் தன்மை. |
| 14. | எலுமிச்சை எஸ்என் கேஎல் 1 | பல்லாண்டு பயிர் | • பருவம்: ஜுன் - செப்டம்பர்<br>• மகசூல்: 58.20 கிலோ / மரம் / வருடம் (16.60 டன்/ எக்டர்)<br>• வருடம் முழுவதும் சீராக காய்க்கும் தன்மை; ஒரு கொத்தில் ஐந்து பழங்கள் உடையது.<br>• தடிமனான தோல்பகுதி கொண்டதால் தொலைதூர சந்தைக்கு ஏற்றது (வைப்புத்திறன் / 10 நாட்கள்)<br>• அதிக பழச்சாறு (54.1%)<br>• நுனிக்கருகல் நோய், நரம்புத் துளைப்பான், எலுமிச்சை வண்ணத்துப்பூச்சி மற்றும் சிலந்தி தாக்குதலுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. |
| 15. | அரளி தோவாளை 1 | பல்லாண்டு பயிர் | • பருவம்: ஜுலை - ஆகஸ்ட்<br>• மகசூல்: 3.87 கிலோ/செடி (9.67 டன்/எக்டர் /வருடம்) |

| வ. எண் | பயிர் / இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| | | | • வருடம் முழுவதும் கொத்தாகப் பூக்கும் தன்மை கொண்டது.<br>• செடிகளில் அதிக நாள் (7 நாட்கள்) இருக்கும் தன்மை கொண்டது<br>• இலைப்புள்ளி நோய் மற்றும் கம்பளிப்புழுவிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. |
| 16. | தென்னை ஏஎல்ஆர் 4 | பல்லாண்டு பயிர் | • பருவம்: வருடம் முழுவதும்<br>• மகசூல்: வருடத்திற்கு மரம் ஒன்றுக்கு 137 காய்கள் (மேற்கு கடற்கரை நெட்டை: 95-105 காய்கள்)<br>• இளநீர் மற்றும் கொப்பரைக்கு உகந்த நெட்டை இரகம்.<br>• காய் ஒன்றுக்கு 520 மி.லி இளநீர், உரித்த காயின் எடை 650 கிராம்<br>• எண்ணெய் அளவு: 63.12%<br>• தென்னை நார் தொழிற்சாலைக்கு ஏற்றது<br>• ரூகோஸ் சுருள் வெள்ளைப் பூச்சி மற்றும் எரியோஃபைட் சிலந்திக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. |

| வ. எண் | பயிர் / இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| | | | • இலைப்புள்ளி மற்றும் இலைக்கருகல் நோய்களுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.<br>• வேர்வாடல் நோயின் தாக்கம் அற்றது. |
| 17. | ஜாதிக்காய் பிபிஜ 1 | பல்லாண்டு பயிர் | • பருவம்: வருடம் முழுவதும்<br>• ஜாதிபத்திரி மகசூல்: 1.72 கிலோ/மரம் (265.20 கிலோ/எக்டர்)<br>விதை மகசூல்: 7 கிலோ/மரம் (1092 கிலோ/ எக்டர்)<br>• சராசரி காய் எடை: 80.72 கிராம்<br>• ஜாதிக்காய் எண்ணெய்: 7.46-7.7%; ஒலியோரெசின்: 8.56 %<br>• காய் அழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்தன்மை கொண்டது. |
| 18. | சிறுகுறிஞ்சான் கோ 1 | பல்லாண்டு பயிர் | • பருவம்: ஜூன் - ஜூலை<br>• பசும் இலை மகசூல்: 6.48 கிலோ/கொடி/ ஆண்டு<br>காய்ந்த இலை மகசூல்: 4.54 கிலோ /கொடி/ஆண்டு<br>• ஜிம்நிமாஜெனின் அளவு: 0.72 % |

| வ. எண் | பயிர் / இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| | | | • சர்க்கரை நோய்க்கு சிறந்த மருந்தாக பயன்படுகிறது<br>• நவம்பர், டிசம்பர் மாதங்களில் இலை சுருள் புழுக்களின் தாக்குதல் காணப்படும். |
| 19. | சிப்பிக்காளான் கேகேஎம் 1 | 30 நாட்கள் | • பருவம்: வருடம் முழுவதும்<br>• மகசூல்: 641.6 கிராம் /படுகை<br>• அறை வெப்ப நிலையில் இரண்டு நாட்கள் சேமித்து வைக்க முடியும்<br>• குறுகிய காலம் கொண்டதால் பூஞ்சாண நோய்களில் இருந்து விடுப்பு. |

புதியதாக வெளியிட்ட பயிர் இரகங்களுக்கு அறிவிக்கை செய்யப்பட்டவுடன் வல்லுநர் விதை உற்பத்தி செய்யப்பட்டு, பெருவாரியான உழவர்களுக்கு பரவலாக்கம் செய்யப்படும்.

வரும் 2025-26 ஆம் ஆண்டும் அனுசரனை ஆராய்ச்சித் திடலில் பரிசோதனையில் உள்ள உயர்

விளைச்சல் ரகங்கள் கண்டறியப்பட்டு வெளியீடு செய்யப்படும்.

## 5.3. வேளாண் விரிவாக்கம்

15 வேளாண்மை அறிவியல் நிலையங்கள், 18 கல்லூரிகள், வேளாண் தொழில்நுட்ப இணையதளம், 42 ஆராய்ச்சி நிலையங்கள், சமூக வானொலி நிலையம் ஆகியவற்றின் வாயிலாக வேளாண்மைத்துறை மற்றும் மற்ற மாநில வளர்ச்சித் துறைகளின் ஒருங்கிணைப்புடன் விரிவாக்கக் கல்வி இயக்குநரகம் முன்னணி வேளாண் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 15 வேளாண்மை அறிவியல் நிலையங்களின் மூலம் முதல் நிலை செயல் விளக்கத்திடல்கள், வயல்வெளி ஆய்வுகள், விரிவாக்க செயல்பாடுகள், பயிற்சிகள் போன்றவை நடத்தப்பட்டு அவற்றின் மூலம் 2,64,881 உழவர்கள் பயனடைந்து உள்ளனர்.

### 5.3.1 பயிற்சிகள்

2024-2025 ஆம் ஆண்டில் இயற்கை வேளாண்மை குறித்த ஐந்து நாள் பயிற்சியில் 10,741 பெண் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். வேளாண் விரிவாக்கக் கல்வி இயக்குநரகத்தின் பயிற்சிப் பிரிவின் மூலமாக வேளாண் விரிவாக்க அலுவலர்கள், உழவர்கள், வளர்ச்சித் துறை அலுவலர்கள் பயனடையும் வகையில் பதினான்கு பயிற்சிகள் நடத்தப்பட்டு 223 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

2025-2026 ஆம் ஆண்டில் வேளாண்மை அறிவியல் நிலையங்கள் மூலம் 1,700 பயிற்சிகள் உழவர்களுக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.3.2 கல்வி ஊடக மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கல்வி ஊடக மையம், 2024-2025 ஆம் ஆண்டில் 210 வேளாண் வீடியோ நிகழ்ச்சிகளைத்

தயாரித்துள்ளது. TNAU TV YouTube சேனலில் 99 வீடியோ நிகழ்ச்சிகள் பதிவேற்றம் செய்யப்பட்டு, 43.33 இலட்சத்திற்கும் மேற்பட்ட உழவர்களும், பொதுமக்களும் நிகழ்ச்சிகளைப் பார்த்துப் பயன்பெற்றுள்ளனர்.

### 5.3.3 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் தொழில்நுட்ப இணையதளம்

பல்வேறு பயிர்களின் தொழில்நுட்பங்கள் குறித்து, தமிழ், ஆங்கிலத்தில் சுமார் 12 இலட்சம் பக்கங்களைக் கொண்ட வேளாண் தொழில்நுட்ப இணையதளத்தினை (http://agritech.tnau.ac.in) 2024-25 ஆம் ஆண்டில் 6.11 இலட்சம் தொடர் பயனாளர்களும் 5.4 இலட்சம் புதிய பயனாளர்களும் 7.55 கோடி பார்வையாளர்களும் பார்வையிட்டுப் பயனடைந்துள்ளார்கள். வேளாண் தொழில்நுட்ப இணைய தளத்தில் உள்ள தகவல்கள் தற்பொழுது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

### 5.3.4 உழவர் சமுதாய வானொலி நிலையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உழவர் சமுதாய வானொலி நிலையம் 107.4 மெகா ஹெர்ட்ஸ் அலைவரிசையில் 2010 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் உள்ளது. இந்நிலையம், விவசாயிகள் பயன்பெறும் வகையில் 2024-2025 ஆம் ஆண்டில் 1,495 நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியுள்ளது.

### 5.4. விதை உற்பத்தி

2024-25 ஆம் ஆண்டில் முதன்மை பயிர்களில் உள்ள 175 இரகங்களில் 179.33 மெட்ரிக் டன் வல்லுநர் விதைகளும், 384.05 மெட்ரிக் டன் ஆதார விதைகளும், 53.28 மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகளும், 563.43 மெட்ரிக் டன் உண்மை நிலை விதைகளும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் உற்பத்தி செய்யப்பட்டு உழவர்கள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் மாநில விதைப் பண்ணைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன. இவைதவிர, 10.90 இலட்சம் நாற்றுகளும் உற்பத்தி

செய்யப்பட்டு உழவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

2025-26 ஆம் ஆண்டில், 897.2 மெட்ரிக் டன் ஆதார விதைகள், 101.2 மெட்ரிக் டன் சான்று விதைகள், 1195.1 மெட்ரிக் டன் உண்மை நிலை விதைகள் மற்றும் 26.8 இலட்சம் நாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**5.5 வேளாண் வணிக மேம்பாடு**

வேளாண் வணிகக் காப்பகம், தொழில்நுட்பங்கள், வீரிய ஒட்டு இரகங்கள் மற்றும் இயந்திரங்களை வணிகமயமாக்கல், ஆலோசனை சேவைகள், முனைப்பு மூலதனத் திட்டம், மாணவர் தொழில் முனைவோர் திட்டம், வேளாண் மைய நிர்வாக மேம்பாட்டுத் திட்டம், நிறுவன மேம்பாட்டுத் திட்டம், உன்னத பாரத இயக்கம் 2.0 ஆகிய திட்டங்கள் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகத்தில் மேற்கொள்ளப் படுகின்றன.

306 உறுப்பினர்களைக் கொண்ட ஆறு வேளாண் வணிகக் கூட்டமைப்புகளையும், 157 பெண்கள் உள்ளிட்ட 190 தொழில் முனைவோர்களையும் உருவாக்கியுள்ளதோடு, 1,241 வணிக ரீதியான ஆலோசனைகளையும் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகம் வழங்கியுள்ளது. வரும் 2025-26 ஆம் நிதியாண்டில் தமிழக அரசு அறிவிப்பின்படி வேளாண்மையில் உழவர்கள் சந்திக்கும் முக்கிய சவால்களை எதிர்கொள்ள வல்ல தொழில்நுட்பங்களை உருவாக்க டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அக்ரி-ஹேக்கத்தான் (வேளாண் நிரல் திருவிழா) நடத்தப்பட்டு, தொழில் முனைவோர்களை உருவாக்கும் முயற்சி ரூ.1 கோடி செலவில் எடுக்கப்படும்.

### 5.6. அறிவுசார் சொத்துக் காப்புரிமை (Intellectual Property Rights)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கீழ்க்காணும் ஏழு காப்புரிமைகளைப் பெற்றுள்ளது.

- சேமிப்பில் உள்ள பயறு விதை கிடங்கிலிருந்து பூச்சி முட்டைகளை பிரித்தெடுக்கும் கருவி
- கரும்பில் தோகை உரிக்கும் கருவி
- ஊட்டமேற்றிய தென்னை நாரினாலான பயிர் வளர்க்கும் ஊடகம்
- பூச்சி மற்றும் எலிகளை கட்டுப்படுத்தும் பல்நோக்கு தொழில் நுட்பம்
- போகைன்வில்லாவிலிருந்து எடுக்கப்பட்ட நச்சுயிரியைக் கட்டுப்படுத்தும் மரபணு
- பேசில்லஸ் பாக்டீரியாவிலிருந்து எடுக்கப்பட்ட க்ரை ஏ.எக்ஸ்.1 என்ற பூச்சிக்கொல்லி மரபணு
- கம்பு தானியத்திலிருந்து உடனடி உணவு தயாரிக்கும் தொழில் நுட்பம்

## 5.7. விருதுகள்

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், புதுமையான நீர் சேகரிப்பு பொறியியல் நடைமுறைகள், பாசன நீர் மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் மற்றும் நீர் விழிப்புணர்வுப்

பிரச்சாரங்களை ஏற்பாடு செய்ததற்காக 2023-ஆம் ஆண்டுக்கான தேசிய நீர் விருதினை பெற்றது.

- 2024 ஆம் ஆண்டின் அறுவடைக்குப் பிந்தைய பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் சிறந்த மைய விருதினை (முதல் இடம்) கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உணவு பதன்செய் பொறியியல் துறை பெற்றுள்ளது.

- மேட்டுப்பாளையத்தில் உள்ள வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு, உத்தரப் பிரதேசத்தின் ஜான்சியில் உள்ள மத்திய வேளாண் வனவியல் ஆராய்ச்சி நிறுவனம் (CAFRI), இந்திய வேளாண் வனவியல் சங்கம் (ISAF) வழங்கும் வேளாண் வனவியல் துறையில் சிறந்து விளங்குவதற்கான சிறந்த நிறுவன விருது, 2023 வழங்கப்பட்டுள்ளது.

- நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம், ICAR-IISFR ஆல் அகில இந்திய இயற்கை வேளாண்மை நெட்வொர்க் திட்டத்தின் சிறந்த மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- வேளாண்மைத் துறையுடன் செயல்பட்டுவரும் ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளுக்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தில் (AICRP-IFS) 2024 ஆம் ஆண்டின் தேசிய அளவிலான சிறந்த மைய விருதை இப்பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

## 5.8. பணியாளர் விபரம்

**பல்கலைக்கழக பணியாளர்களின் விபரம்**

| வ.எண் | வகைகள் | தற்போதைய நிலை |
|---|---|---|
| **அ. பேராசிரியர்கள் - கற்பித்தல்** | | |
| 1. | பேராசிரியர்கள் | 416 |
| 2. | இணைப் பேராசிரியர்கள் | 316 |
| 3. | உதவிப் பேராசிரியர்கள் | 269 |
| | **மொத்தம் (அ)** | 1,001* |

| | | |
|---|---|---|
| **ஆ. அமைச்சுப் பணியாளர்கள்** | | |
| 1. | இதர துணை ஊழியர்கள் | 1,222 |
| | **மொத்தம் (ஆ)** | 1,222 |
| **ஒட்டுமொத்தம் (அ +ஆ)** | | **2,223** |

***அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்து அயற் பணியிடம் மாற்றம் செய்யப்பட்ட 114 பேராசிரியர்களை உள்ளடக்கியது.**

## 6. விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை

வேளாண்மையில் தரமான விதைகளின் பயன்பாடு, வெற்றிகரமான பயிர்சாகுபடிக்கு அடித்தளமாக அமைகிறது. பயிர் சாகுபடியில் மகசூல் அதிகரிப்பதற்கும், உணவுப் பாதுகாப்பிற்காகவும் பண்ணையின் மொத்த வருவாயினை அதிகரிக்கச் செய்யவும், தரமான விதைகளை உபயோகிப்பது அவசியம். இத்தகைய நோக்கங்களைக் கருத்தில் கொண்டு விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை தனது நான்கு பிரிவுகளான,

1. விதைச் சான்றளிப்பு
2. விதைத் தரக்கட்டுப்பாடு
3. விதைப் பரிசோதனை
4. உயிர்மச் சான்றளிப்பு

ஆகியவற்றின் மூலம் சான்று விதை உபயோகத்தை அதிகரித்தல், தரமான விதை விநியோகத்தை உறுதி செய்தல், உயிர்மச்

சான்றளிப்பை வழங்குதல் ஆகிய செயல்பாடுகளின் வாயிலாக, விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது.

**6.1 விதைச் சான்றளிப்பு:**

விதைச் சட்டம், 1966 மற்றும் விதை விதிகள், 1968 ஆகியவற்றின் அடிப்படையில், இந்திய குறைந்தபட்ச விதைச்சான்றளிப்பு தரநிலைகளை நிறைவு செய்திடும் பொருட்டு, அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்கள் மற்றும் இரகங்களில் விதைச் சான்றளிப்பு மேற்கொண்டு விதைச் சான்றளிப்புப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

வல்லுநர் விதை ஆய்வுக் குழுவால் வேளாண் ஆராய்ச்சி நிலையங்களில் உள்ள வல்லுநர் விதைத் திடல்களில் வயல்களின் தரங்கள் ஆய்வுசெய்யப்பட்டு அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு வல்லுநர் விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

விதைச் சான்றளிப்புத் துறையில் அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்கள் மூலம் அமைக்கப்படும் விதைப் பண்ணைகளில் விதையின் ஆதாரத்தினைச் சோதித்தல், வயலாய்வுப் பணிகள்,

சுத்திகரிப்புப் பணி, விதைத்தரங்கள் பரிசோதனை மற்றும் சான்றட்டை பொருத்துதல் ஆகிய பணிகளை இத்துறை மேற்கொண்டு, தரமான சான்று விதைகள் விவசாயிகளுக்குக் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

2024-2025 ஆம் ஆண்டில் இதுவரை 68,968 எக்டர் விதைப் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு, 1,24,001 மெட்ரிக் டன் விதைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.1 : 2024-2025 விதைப் பண்ணை பதிவு செய்யப்பட்ட பரப்பு & சான்று செய்த விதையளவு**

| வ. எண் | விதைச்சான்று உதவி இயக்குநர் தலைமையிடம் | விதைப் பண்ணை பதிவு (எக்டர்) | சான்று செய்த விதையளவு (மெ.டன்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 1250 | 893 |
| 2 | கடலூர் | 3115 | 1897 |
| 3 | தருமபுரி | 1230 | 650 |
| 4 | திண்டுக்கல் | 2058 | 3744 |
| 5 | ஈரோடு | 3526 | 1542 |
| 6 | காஞ்சிபுரம் | 1887 | 2635 |
| 7 | கன்னியாகுமரி | 226 | 170 |

| வ. எண் | விதைச்சான்று உதவி இயக்குநர் தலைமையிடம் | விதைப் பண்ணை பதிவு (எக்டர்) | சான்று செய்த விதையளவு (மெ.டன்) |
|---|---|---|---|
| 8 | கரூர் | 646 | 339 |
| 9 | கிருஷ்ணகிரி | 1178 | 605 |
| 10 | மதுரை | 1940 | 6023 |
| 11 | நாகப்பட்டினம் | 3011 | 2766 |
| 12 | நாமக்கல் | 1138 | 2463 |
| 13 | பெரம்பலூர் | 1256 | 2174 |
| 14 | புதுக்கோட்டை | 1210 | 961 |
| 15 | இராமநாதபுரம் | 641 | 456 |
| 16 | சேலம் | 1773 | 847 |
| 17 | சிவகங்கை | 541 | 512 |
| 18 | தஞ்சாவூர் | 7691 | 2240 |
| 19 | தேனி | 1117 | 3130 |
| 20 | திருவள்ளூர் | 1082 | 1085 |
| 21 | திருவாரூர் | 7610 | 2247 |
| 22 | தூத்துக்குடி | 1485 | 280 |
| 23 | திருநெல்வேலி | 2954 | 6111 |
| 24 | திருப்பூர் | 8722 | 67716 |
| 25 | திருவண்ணாமலை | 2601 | 2016 |
| 26 | திருச்சி | 1613 | 2172 |
| 27 | வேலூர் | 1558 | 911 |
| 28 | விழுப்புரம் | 4433 | 6728 |
| 29 | விருதுநகர் | 1477 | 690 |
|  | **மொத்தம்** | **68968** | **124001** |

2025-2026 ஆம் ஆண்டில் வயலாய்வினைத் திறம்பட மேற்கொண்டு அதன் வாயிலாகத் தரமான விதை உற்பத்தி செய்ய 70,000 எக்டர் விதைப் பண்ணைகளைப் பதிவு செய்யவும், 1,25,000 மெட்ரிக் டன் தரமான விதைகளுக்குச் சான்றளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**6.2 விதைத் தரக்கட்டுப்பாடு**

அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்கள் மூலம் உற்பத்தி செய்து சந்தைக்கு வரும் பல்வேறு விதைகளின் தரத்தினை உறுதி செய்து தரமான விதைகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்வது விதை ஆய்வுப் பிரிவின் முக்கிய நோக்கமாகும்.

விதைத் தரக்கட்டுப்பாடு பிரிவு, தற்பொழுது நடைமுறையில் உள்ள விதைச்சட்டங்களான விதைச் சட்டம் 1966, விதை விதிகள் 1968, விதை (கட்டுப்பாடு) ஆணை 1983 மற்றும் சுற்றுப்புறச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 ஆகியவற்றை அமல்படுத்தி தரமான

விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுவதை உறுதி செய்கிறது.

இத்துறையின் மூலம் 12,671 விதை விற்பனை நிலையங்களுக்கு விதை(கட்டுப்பாடு) ஆணை, 1983 இன்படி, உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. விதை ஆய்வாளர்களால் இந்த விதை விற்பனை நிலையங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள விதைக் குவியல்களிலிருந்து விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு, விதை மாதிரிகள் அறிவிக்கை செய்யப்பட்ட விதை பரிசோதனை நிலையங்களில் பரிசோதனை செய்யப்படுகின்றன. பகுப்பாய்வு முடிவுகளின் அடிப்படையில் தரமற்ற விதைக் குவியல்களின் மீது துறை / நீதிமன்றம் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

2024-2025 ஆம் ஆண்டில், 78,215 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 79,939 விதை மாதிரிகள் (51,856 ஆய்வு விதை

மாதிரிகள் மற்றும் 28,083 பணி விதை மாதிரிகள்) எடுக்கப்பட்டுள்ளன. விதைப் பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்ட 1,473 தரமற்ற விதை மாதிரிகளில், 1,348 விதை மாதிரிகளுக்கு துறை நடவடிக்கை மூலமாகவும், 125 விதை மாதிரிகளுக்கு நீதிமன்றம் வாயிலாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தரக்குறைவு, பிற விதி மீறல்களுக்காக ரூ.20.42 கோடி மதிப்புள்ள 1,359 மெட்ரிக் டன் அளவிலான விதைகள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

2025-26-ஆம் ஆண்டில் விதை விற்பனை நிலையங்களில் 80,000 ஆய்வுகள் மேற்கொள்ளவும், 70,000 விதை மாதிரிகளில் தரப் பரிசோதனை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**6.3 விதைப் பரிசோதனை:**

நமது மாநிலத்தில் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட 34 விதைப் பரிசோதனை ஆய்வகங்கள்

செயல்பட்டு வருகிறது. வேளாண்மைக்கு முதன்மையான இடுபொருளான விதைகளின் தரத்தை உறுதி செய்வதில் இந்த ஆய்வகங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவ்வாய்வகங்கள் மூன்று வகையான மாதிரிகளைப் பரிசோதனை செய்கின்றன. விதைச் சான்றளிப்புப் பிரிவிலிருந்து சான்று விதை மாதிரிகள் (Certified Samples), விதைத் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவிலிருந்து ஆய்வு விதை மாதிரிகள் (Official Samples) மற்றும் விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்களால் சமர்ப்பிக்கப்படும் பணி விதை மாதிரிகள் (Service Samples) ஆகியவை இந்திய குறைந்தபட்ச விதைச் சான்றளிப்புத் தரநிலைகளின் (Indian Minimum Seed Certification Standards - IMSCS) அடிப்படையில் பரிசோதனை செய்யப்படுகின்றன இதன் மூலம் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் விதைகளின் தரம் உறுதி செய்யப்படுகிறது.

**அட்டவணை 6.2: <u>ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகள்-2024-25:</u>**

| வ. எண் | மாதிரிகளின் வகைகள் | இலக்கு (எண்கள்) | சாதனை (எண்கள்) |
|---|---|---|---|
| 1 | சான்று விதை | 30,000 | 28,186 |
| 2 | ஆய்வு விதை மாதிரி | 50,000 | 51,856 |
| 3 | பணி விதை மாதிரி | 37,000 | 28,341 |
| | **மொத்தம்** | **1,17,000** | **1, 08,383** |

2025-26 ஆம் ஆண்டில் 1,20,000 விதை மாதிரிகள் ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 6.3.1 பன்னாட்டு விதைப் பரிசோதனைக் குழும அங்கீகாரம் பெற்ற விதைப் பரிசோதனை நிலையம், கோவை (ISTA):

கோவை, விதைப் பரிசோதனை நிலையம் 2006 ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள பன்னாட்டு விதைப் பரிசோதனை குழுமத்தின் உறுப்பினராகி 2014 ஆம் ஆண்டில் பன்னாட்டு விதைப் பரிசோதனைக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்த ஆய்வகம் இந்தியாவில் உள்ள

பொதுத் துறை விதைப் பரிசோதனை நிலையங்களில் பன்னாட்டு குழுமத்தின் அங்கீகாரம் பெற்ற முதல் பரிசோதனை நிலையம் என்ற பெருமையுடையது. இந்நிலையம் விதைக் குவியல்களிலிருந்து மாதிரிகள் எடுக்கவும் அவற்றின் புறத்தூய்மை மற்றும் பிற பயிர் விதை, முளைப்புத்திறன் மற்றும் ஈரப்பதம் கண்டறியும் ஆய்விற்காக பன்னாட்டு விதைப் பரிசோதனைக் குழுமத்தின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது. இப்பரிசோதனை நிலையம் விதை விற்பனையாளர்களுக்காக தானியங்கள், பயறு வகைகள் மற்றும் காய்கறிப் பயிர்களுக்கு ஆரஞ்சு நிற சர்வதேச விதைக் குவியல் சான்றிதழ்கள் மற்றும் நீல நிற சர்வதேச விதை மாதிரி சான்றிதழ்கள் வழங்கும் உரிமம் பெற்றுள்ளது. இதன்மூலம் 101 சர்வதேச விதைப் பரிசோதனை சான்றிதழ்கள் தமிழ்நாட்டு விதை ஏற்றுமதியாளர்களுக்காக வழங்கப்பட்டுள்ளன.

### 6.3.2. மாநில டி.என்.ஏ கைரேகை ஆய்வகம் (DNA Fingerprinting Laboratory)

கோவையில் மத்திய அரசின் நிதி உதவியுடன் 2007 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் டி.என்.ஏ. மரபணு ஆய்வகத்தில் விதைக் குவியல்களின் இனத்தூய்மை விரைவாகக் கண்டறியப்பட்டு உறுதிப்படுத்தப்படுகிறது. பயிர் வளர்ப்பு முறையின் மூலம் இனத்தூய்மை பரிசோதனை முடிவை அறிவிக்க இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வரை தேவைப்படும். ஆனால், விவசாயிகளுக்குத் தரமான விதைகள் உரிய காலத்தில் கிடைக்க ஏதுவாக 3 முதல் 5 நாட்களில் டி.என்.ஏ கைரேகை ஆய்வுத் தொழில்நுட்பம் மூலம் இனத்தூய்மை பரிசோதனை முடிவுகளை அறிய முடியும். இந்த ஆய்வகமானது, இந்தியாவிலேயே முதன்மையாக விளங்குவதோடு 2014-இல் தமிழ்நாடு அரசால் மாநில டி.என்.ஏ. கைரேகை ஆய்வகம் என அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அதிகளவில்

பயிரிடப்படும் அறிவிக்கை செய்யப்பட்ட 27 நெல் இரகங்களுக்கு SSR (Single Sequence Repeat) மரபணுக் குறியீட்டைப் பயன்படுத்தி மிகத் துல்லியமாகவும், விரைவாகவும் இனத்தூய்மை பரிசோதனை செய்யும் திறனுடன் செயல்பட்டு வருகிறது. 2024-25 ஆம் ஆண்டில் 250 நெல் விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலும், 2024-2025 ஆம் ஆண்டில் SNP (Single Nucleotide Polymorphism) மரபணுக் குறியீட்டைப் பயன்படுத்தி ஆய்வுத் திறனை மேம்படுத்த, தரம் வாய்ந்த உயர் தொழில்நுட்பக் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. வரும் 2026-27 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்படவுள்ள இந்த SNP மரபணுக் குறியீட்டின் மூலம் மூலக்கூறு பகுதி அடிப்படையில் மிகத் துல்லியமாக நெல், மக்காச்சோளம், பருத்தி மற்றும் காய்கறிகளில் இனத்தூய்மையைக் கண்டறிய இயலும். தெற்கு ஆசியாவிலேயே அரசுத் துறைகளில் SNP மரபணுக்

குறியீடு முறையில் துல்லியமாக செயல்படவுள்ள முதல் ஆய்வகம் இதுவேயாகும்.

**6.3.3. பயிர் வளர்ப்புப் பரிசோதனைப் பண்ணை:**

இனத்தூய்மை மற்றும் முளைப்புத்திறன் ஆகிய இரண்டு விதைத்தரக் காரணிகளில் பயிர் வளர்ப்புப் பரிசோதனை தொழில்நுட்பம் மூலம் பயிர் இரகங்களின் இனத்தூய்மை கண்டறியப்படுகிறது. இனத்தூய்மைப் பரிசோதனைக்காக விதைச்சான்றளிப்பு மற்றும் விதைத் தரக்கட்டுப்பாடு பிரிவிலிருந்து விதை மாதிரிகள் பயிர் வளர்ப்புப் பண்ணைக்கு அனுப்பப்படுகின்றன.

பயிர் வளர்ப்புப் பரிசோதனைத் திடலில் பயிர் வளர்ச்சியானது பூக்கும் பருவம் முதல் அதன் முதிர்ச்சிப் பருவம் வரை ஆய்வு செய்யப்படுகிறது. அனைத்துப் பயிர்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு பயிர் இரகங்களின் இனத்தூய்மை அறியப்படுகிறது. ஆண்டுதோறும்

3,100 விதை மாதிரிகளில் இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

**6.3.4 ஒப்பீட்டு விதைப் பரிசோதனை ஆய்வகம்:**

தமிழகத்தில் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையின் கீழ் 30 விதைப் பரிசோதனை ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பரிசோதனை நிலையங்களில் பரிசோதனை முடிவுகளைக் கண்காணிக்கவும், நெறிமுறைப்படுத்தவும் ஒப்பீட்டு பரிசோதனை ஆய்வகம், கோவை மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வாய்வகத்தில், ஒவ்வொரு விதைப்பரிசோதனை நிலையங்களிலிருந்தும் மாதம் தோறும் 8 விதை மாதிரிகள் வீதம் பெறப்பட்டு ஒப்பீட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 2,800 விதை மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

**6.3.5 பி.டி நஞ்சு பரிசோதனை ஆய்வகம்:**

கோவை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பி.டி பரிசோதனை ஆய்வகத்தில் பி.டி.பருத்தி விதை மாதிரிகளில் உள்ள பி.டி நஞ்சின் அளவு கண்டறியப்படுகிறது. தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அனுப்பப்படும் ஆய்வாளர் பருத்தி விதை மாதிரிகளில், ஆண்டு ஒன்றிற்கு சராசரியாக 2,000 விதை மாதிரிகளில் பி.டி நஞ்சு பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

**6.4 பயிற்சி:**

சான்று விதை நடைமுறைகளான வயலாய்வு, விதை சுத்திகரிப்பு, விதை மாதிரிகள் எடுத்தல், விதைப் பரிசோதனை செய்தல் மற்றும் விதைச் சட்டங்கள் குறித்த இனங்களில் விதை உற்பத்தியாளர்களுக்கும், கள அலுவலர்களுக்கும் உரிய முறையில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தரமான விதை உற்பத்தி மற்றும் விதை விநியோகத்தினை மேம்படுத்த பயிற்சிப்

பிரிவின் மூலம் கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**6.4.1 அறிமுகப் பயிற்சி** :

புதிதாகப் பணியேற்கும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு விதைச்சான்று நடைமுறைகள், வயலாய்வுகள், பயிர் இரகங்களைக் கண்டறிதல், சுத்திகரிப்புப் பணி, விதை மாதிரிகள் எடுத்தல், சான்றட்டை பொருத்துதல், விதைப் பரிசோதனை நடைமுறைகள் குறித்தும் விதைத் தரக்கட்டுப்பாடு குறித்தும் அறிமுகப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

**6.4.2 புத்தூட்டப் பயிற்சி** : இத்துறையில் பணியில் உள்ள அலுவலர்களுக்கு விதை உற்பத்தி, விதைப் பரிசோதனை மற்றும் விதை ஆய்வுப் பிரிவுகளில் புதிய தொழில் நுட்பங்கள் பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது.

**6.4.3 விதை உற்பத்தியாளர் பயிற்சி** : வயல் மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையத் தரங்கள் குறித்து விதை

உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விதை உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது.

**6.4.4 விதை விற்பனையாளர் பயிற்சி** : தரமான விதைகளை விற்பனை செய்வது, சேமித்து வைப்பது மற்றும் விதைச் சட்டங்கள் குறித்து, விதை விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

**6.4.5 வெளிமாநிலப் பயிற்சி** : இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் விதைச்சான்றளிப்பு, விதைச்சட்டம் அமலாக்கம் மற்றும் விதைப்பரிசோதனை குறித்து பல்வேறு தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்காக உத்திரபிரதேச மாநிலம், வாரணாசியிலுள்ள தேசிய விதை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் பயிற்சியளிக்கப்படுகிறது.

**6.4.6 உயிர்மச் சான்றளிப்பு நடைமுறைகள் குறித்த பயிற்சி** : உயிர்மச் சான்றளிப்பில் ஆர்வம் உள்ள விவசாயிகளுக்கு உயிர்மச் சான்று பெற்றுப் பயனடையும் வகையிலும், துறை அலுவலர்களுக்கு

உயிர்மச் சான்றளிப்பு தொடர்பான இந்திய மற்றும் சர்வதேசத் தரங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. 2024-2025-ஆம் ஆண்டில் 50,055 விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டில் 51,000 நபர்களுக்குப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.5 உயிர்மச் சான்றளிப்பு

தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறை 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட ஒரு சான்றிதழ் வழங்கும் அமைப்பாகும். இத்துறை உயிர்மப் பண்ணையம், பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிக்கான உயிர்ம விளைபொருட்களை சான்றளிப்பதற்காக வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) அங்கீகாரம் பெற்றுள்ளது. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் வரும் தேசிய உயிர்ம உற்பத்தித்திட்டக் கொள்கைகளின்

அடிப்படையில் இத்துறை செயல்படுகிறது. மேலும் இந்தியாவிலேயே தமிழ்நாடு மாநிலமானது அதிகமான தனி நபர் உயிர்ம விவசாயிகளுக்கு வாய்ப்பு சான்றிதழ் வழங்கி தனித்துவம் பெற்றுள்ளது.

ஒன்றிய வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் உயிர்மப் பண்ணையம் மற்றும் இயற்கை வேளாண்மைக்கான தேசிய மையம் (National Center for Organic and Natural Farming - NCONF), பங்களிப்பு உத்திரவாத திட்டத்தின் கீழ் உயிர்ம வாய்ப்புச் சான்றிதழை வழங்க தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 6.5.1 துறையின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள்:

பயிர் உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் மூலம் கிடைக்கப்பெறும் உயிர்மப்பொருட்களை வெளிநாட்டுக்கு வர்த்தகம் செய்வதற்கான சான்றிதழினை, தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறை வழங்குகிறது. உயிர்ம உற்பத்திக்கான தேசிய

திட்டத்தின் கொள்கைகளின் அடிப்படையில் இத்துறை செயல்படுகிறது. தமிழ்நாடு உயிர்மச்சான்றளிப்பு துறை வழங்கும் சான்றிதழ் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சுவிட்சர்லாந்து நாட்டின் சுவிஸ் உயிர்மத் தர நிலைகளை ஒத்ததாகும்.

தேசிய உயிர்ம உற்பத்தித் திட்ட சான்றிதழின் அமைப்பு, உயிர்ம விளைபொருட்களை இந்தியாவிற்குள்ளும் மற்ற நாடுகளுக்கும் சந்தைப்படுத்த உதவுகிறது. இது உயிர்ம விவசாயிகள், பதனிடும் மையங்கள், வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் தேசிய உயிர்ம உற்பத்தித் திட்ட விதிமுறைகளின்படி உயிர்ம வாய்ப்புச் சான்றிதழைப் பெற உதவுகிறது. தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டக் கொள்கையானது செயற்கை இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள் மற்றும் மரபணு மாற்றுப் பயிர்கள் ஆகியவற்றைத் தவிர்ப்பதை உறுதி செய்கிறது.

பங்களிப்பு உத்திரவாதத் திட்டத்தின் கீழ் பயிர் உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் வர்த்தகத்திற்கான வாய்ப்புச் சான்றிதழை தமிழ்நாடு உயிர்மச்சான்றளிப்பு துறை வழங்குகிறது.

**6.5.2 உயிர்மச் சான்றளிப்பின் நிலை**

2024-25 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 1,00,258 ஏக்கர் நிலப்பரப்பில் உயிர்மச் சான்றளிப்பு பெற 29,180 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். இதில் 1,542 தனிநபர் விவசாயிகள், 1,230 உழவர் குழுக்களில் 27,638 விவசாயிகள், 7 பதனிடும் மையங்கள் மற்றும் 1 உயிர்ம வணிகர் அடங்குவர். தமிழ்நாடு உயிர்மச்சான்றளிப்பு துறை, தேசிய அளவில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளைப் பதிவு செய்கிறது.

இத்துறை மூலம், ரூ.130 இலட்சம் மதிப்பிலான 93.46 மெட்ரிக் டன் உயிர்மப் பொருட்களை ஏற்றுமதி செய்யவும், உள்நாட்டு வணிகத்திற்காகவும் பரிவர்த்தனை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

முக்கியமாக தேங்காய், தேங்காய் எண்ணெய், நெல்லிக்காய், மஞ்சள் ஆகியவற்றுக்கு சான்றளிப்பு வழங்கியுள்ளது.

**அட்டவணை 6.3 ஆண்டு வாரியாக தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டம் மற்றும் பங்களிப்பு உத்திரவாதத் திட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட விபரம் (ஏக்கரில்)**

| வ. எண் | மாவட்டம் | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 | 2024-25 |
|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 829.46 | 811.00 | 656.00 | 694.00 | 679.58 |
| 2 | கோயம்புத்தூர் | 3905.00 | 3645.00 | 3633.00 | 4262.50 | 5241.98 |
| 3 | செங்கல்பட்டு | 1357.16 | 1266.00 | 1301.20 | 1196.30 | 2181.01 |
| 4 | கடலூர் | 1799.00 | 1755.02 | 1013.60 | 1418.30 | 1536.48 |
| 5 | தருமபுரி | 7687.00 | 7384.19 | 3526.00 | 2745.50 | 2917.34 |
| 6 | திண்டுக்கல் | 3585.00 | 9518.70 | 7556.62 | 4752.20 | 5416.44 |
| 7 | ஈரோடு | 3982.02 | 3425.00 | 3575.50 | 4925.40 | 4151.03 |
| 8 | கள்ளக்குறிச்சி | 2307.12 | 2375.00 | 192.81 | 1184.10 | 2267.95 |
| 9 | காஞ்சிப்புரம் | 894.01 | 1752.00 | 1070.68 | 1175.00 | 2376.14 |
| 10 | கன்னியாகுமரி | 403.00 | 796.12 | 3562.53 | 2934.80 | 2305.84 |
| 11 | கரூர் | 1323.51 | 2044.92 | 2168.28 | 3121.00 | 4162.49 |
| 12 | கிருஷ்ணகிரி | 7063.94 | 8082.00 | 2629.11 | 1683.10 | 2224.8 |
| 13 | மதுரை | 4193.55 | 3841.50 | 1954.72 | 3314.80 | 3045.93 |
| 14 | மயிலாடுதுறை | 514.12 | 1436.10 | 759.24 | 1869.40 | 2221.74 |

| வ. எண் | மாவட்டம் | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 | 2024-25 |
|---|---|---|---|---|---|---|
| 15 | நாகப்பட்டினம் | 2769.31 | 1004.56 | 1083.63 | 1207.50 | 1505.22 |
| 16 | நாமக்கல் | 1640.00 | 5275.46 | 577.64 | 1908.40 | 2976.45 |
| 17 | பெரம்பலூர் | 805.56 | 1372.8 | 1062.69 | 555.05 | 1226.38 |
| 18 | புதுக்கோட்டை | 3120.68 | 3796.62 | 1951.68 | 1651.2.00 | 2724.41 |
| 19 | இராமநாதபுரம் | 1850.66 | 2389.00 | 3235.07 | 4582.50 | 4399.86 |
| 20 | இராணிப் பேட்டை | 1531.00 | 1705.00 | 2367.97 | 2057.30 | 2475.33 |
| 21 | சேலம் | 3701.00 | 9043.66 | 7443.32 | 4020.90 | 2493.19 |
| 22 | சிவகங்கை | 1146.00 | 1650.00 | 1671.57 | 2348.90 | 3191.78 |
| 23 | தஞ்சாவூர் | 785.38 | 1963.06 | 1647.98 | 1946.80 | 1907.26 |
| 24 | நீலகிரி | 6447.00 | 6428.00 | 1606.26 | 433.75 | 1945.96 |
| 25 | தேனி | 3973.00 | 3804.51 | 3787.35 | 2792.60 | 3538.45 |
| 26 | தென்காசி | 975.00 | 1483.29 | 1221.95 | 1876.50 | 1803.62 |
| 27 | திருப்பத்தூர் | 2144.00 | 2065.38 | 1498.05 | 1728.90 | 2532.2 |
| 28 | திருவள்ளூர் | 1473.21 | 1484.00 | 1676.94 | 1692.40 | 2551.51 |
| 29 | திருவண்ணா மலை | 3424.00 | 5810.56 | 4431.14 | 2628.10 | 2514.21 |
| 30 | தூத்துக்குடி | 472.55 | 810.54 | 747.46 | 659.30 | 1111.5 |
| 31 | திருநெல் வேலி | 2734.00 | 3201.61 | 3399.75 | 2325.60 | 2043.78 |
| 32 | திருப்பூர் | 4360.00 | 4124.00 | 4125.00 | 4851.10 | 5215.03 |
| 33 | திருவாரூர் | 561.19 | 829.02 | 1061.60 | 2024.00 | 1693.8 |
| 34 | திருச்சி | 1568.14 | 1614.72 | 1574.34 | 1862.50 | 2655.25 |
| 35 | வேலூர் | 2221.84 | 2339.06 | 1785.24 | 1250.40 | 2569.81 |

| வ.எண் | மாவட்டம் | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 | 2024-25 |
|---|---|---|---|---|---|---|
| 36 | விழுப்புரம் | 3120.00 | 2722.60 | 2415.16 | 2400.30 | 3593.04 |
| 37 | விருதுநகர் | 2667 | 2546.00 | 2314.51 | 1898.70 | 2861.89 |
| மொத்தம் | | 93334.44 | 115596.51 | 86285.58 | 83978.77 | 100258.68 |

2025-2026 ஆம் ஆண்டில் தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டம் மற்றும் பங்களிப்பு உத்திரவாதத் திட்டங்களின் மூலம் உயிர்மச் சான்றிதழின் கீழ் 1,26,000 ஏக்கர் பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**6.5.3 எஞ்சிய நச்சுத்தன்மை பகுப்பாய்வு**:

2024-25 ஆம் ஆண்டில் எஞ்சிய நச்சுத்தன்மை பகுப்பாய்வு -தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்பு துறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் விளை நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள இணக்கமின்மையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்ட 91 விவசாயிகளிடம் இருந்து உயிர்ம விளைப் பொருட்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. ஆய்வு

முடிவுகளின்படி 13 விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட மாதிரிகளில் எஞ்சிய நச்சு இருப்பது உறுதி செய்யப்பட்டு, அவ்விளை பொருட்களை "உயிர்மம்" எனக் குறிப்பிட்டு விற்பனை செய்யக் கூடாது என எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மேலும், அந்த விவசாயிகளை முதலாம் ஆண்டு மாறுதல் காலத்திற்கு தர இறக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2025-26 ஆம் ஆண்டில் நஞ்சில்லா உணவு விளைவிக்கும் உயிர்ம விவசாயிகளுக்கு, அவர்களது விளைபொருட்களில் நச்சுப் பொருட்களின் தன்மையினை அறிந்து, அதன் தரத்தை உறுதிப்படுத்திடும் வகையில் எஞ்சிய நச்சு மதிப்பீடு பரிசோதனை செய்வதற்கான கட்டணத்திற்கு முழு மானியம் வழங்கும் திட்டம் ரூபாய் 20 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 6.5.4 உயிர்ம விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை:

2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாடு உயிர்மச் சான்றளிப்புத் துறையின் கீழ் பதிவு செய்யப்பட்டு

உயிர்ம நிலையை அடைந்த விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் மாநில அரசு உதவியுடன் ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஒரு விவசாயிக்கு ரூ.5000/- என 300 விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

மேலும் 2025-26 ஆம் ஆண்டில் தமிழ்நாடு உயிர்ம சான்றளிப்புத் துறையில் தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட உயிர்ம வேளாண்மை செய்யும் விவசாயிகளில் உயிர்ம நிலையை அடைந்த விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

**6.5.5 உயிர்ம விவசாயிகளுக்கு இலவச வாய்ப்பு சான்றிதழ்**:

2025-26 ஆம் ஆண்டில், தமிழ்நாடு உயிர்ம சான்றளிப்புத் துறையில் தேசிய உயிர்ம உற்பத்தித் திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு பதிவு

செய்வதற்கான கட்டணத்திற்கு முழு விலக்கு அளித்து இலவசமாகப் பதிவு செய்யப்படும்.

**6.6 பணிக்குழு**

விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை மொத்தம் 345 தொழில்நுட்ப பணியாளர்களையும், 500 அமைச்சுப் பணியாளர்களையும் கொண்டு ஆக மொத்தம் 845 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

**அட்டவணை 6.4 ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் விவரம்**

| பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|
| **அ. தொழில்நுட்ப அலுவலர்கள்** | 345 |
| விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இயக்குநர் | 1 |
| விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இணை இயக்குநர் | 1 |
| விதை ஆய்வு இணை இயக்குநர் | 1 |
| விதை ஆய்வு துணை இயக்குநர் | 15 |
| தரமேலாளர் (உயிர்மச் சான்றளிப்பு) | 1 |

| பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|
| விதைச் சான்றளிப்பு உதவி இயக்குநர் (விதை பகுப்பாய்வு மற்றும் பயிற்சி) | 1 |
| விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் | 29 |
| மதிப்பீட்டடாளர் (உயிர்மச் சான்றளிப்பு) | 1 |
| விதைப் பரிசோதனை அலுவலர் | 7 |
| விதைச்சான்று அலுவலர் | 119 |
| விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு ஆய்வாளர்கள் | 26 |
| வேளாண்மை அலுவலர் | 63 |
| விதை ஆய்வாளர் | 70 |
| உயிர்மச் சான்றளிப்பு ஆய்வாளர் | 10 |
| **ஆ. அமைச்சுப்பணியாளர்** | 500 |
| **மொத்தப்பணியாளர்கள் (அ + ஆ)** | **345 + 500 = 845** |

## 7. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

இயற்கை வளங்களான நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை நீர்வடிப்பகுதிகளில் மேம்படுத்தும் நோக்கத்தோடு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை **2002 ஆம்** ஆண்டு சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. இம்முகமை மூலம் மாநிலத்தில் பல்வேறு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்த மாநில அளவிலான இணைப்பு முகமை **2009 ஆம்** ஆண்டு நிறுவப்பட்டது. இம்முகமை, இரண்டு பிரதான திட்டங்களையும் இணைப்பு முகமையாக பத்து திட்டங்களையும் தற்போது செயல்படுத்தி வருகின்றது.

### 7.1 முகமை செயல்படுத்தும் பிரதான திட்டங்கள்:

பிரதம மந்திரியின் வேளாண் பாசனத் திட்டத்தின் ஒரு அங்கமான நீர்வடிப்பகுதி மேம்பாடு-2.0 மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின் கீழ் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம்

ஆகியவை பிரதான திட்டங்களாக கீழ்கண்டவாறு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 7.1.1. பிரதம மந்திரியின் வேளாண் பாசனத் திட்டம்: நீர்வடிப்பகுதி மேம்பாடு – 2.0

இத்திட்டம், பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி மற்றும் விருதுநகர் ஆகிய ஏழு மாவட்டங்களில் 275 நீர்வடிப்பகுதிகளில் 27 திட்டங்களை 1.30 இலட்சம் எக்டர் பரப்பில் ரூ.286.73 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2021-22 முதல் 2025-26 வரையிலான ஐந்து ஆண்டு காலத்தில் செயல்படுத்த ஒன்றிய, மாநில அரசுகளால் ஒப்பளிக்கப்பட்டு ரூ.268.99 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

#### 7.1.1.1. திட்டத்தின் நோக்கம் :

i. **பொருளாதாரம்**-இயற்கை வளங்களை, சமச்சீரான, ஒருங்கிணைந்த, நிலையான, திறன்மிகு முறையில் பயன்படுத்துவதன் மூலம் பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதுடன்

நீர்வடிப்பகுதிகளிலுள்ள கிராம சமுதாயத்தின் வருமானத்தை மேம்படுத்துதல்.

ii. **சூழலியல்**– சமூக அமைப்புகளை உருவாக்கி எளிய, சாத்தியமான தொழில் நுட்பங்களையும் நடைமுறைகளையும் ஊக்குவிப்பதன் மூலம் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், பயன்படுத்துதல், மேம்படுத்துதல்.

iii. **சமபங்கு** - நிலம், நீர் போன்ற இயற்கை வளங்கள், ஏழைகள், நிலமற்றோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு சமமாக கிடைப்பதை உறுதிப்படுத்துவதோடு, பல்வேறு சமுதாய நிறுவனங்களில் அவர்களை ஈடுபடுத்தி சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.

**7.1.1.2. திட்ட செயலாக்க அமைப்பு** :

மாநில அளவில், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, இத்திட்ட செயலாக்கத்திற்கு மாநில அளவிலான இணைப்பு முகமையாகவும்,

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, வேளாண்மை மற்றும் வேளாண் பொறியியல் துறை தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டும் செயல்படுகிறது. திட்டத்தின் களப்பணிகளை மேற்கொள்வதற்காக நீர்வடிப்பகுதி மேம்பாட்டுக்குழு வேளாண்மை, சமூகவியல் மற்றும் பொறியியல் பணியாளர்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய அரசின் வழிகாட்டு விதிமுறைகளின்படி அங்கீகரிக்கப்பட்ட பணிகள் கிராம அளவிலான நீர்வடிப் பகுதிக் குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 7.1.1.3. திட்ட செயல்பாடுகள்:

இத்திட்டம் மூன்று கட்டங்களாக ஐந்து வருடங்களில் செயல்படுத்தப்படும். தற்போது இத்திட்டம் இரண்டாம் கட்ட நிலையில் பின்வரும் இனங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இயற்கைவள மேம்பாட்டுப் பணிகள்**

பண்ணைக்குட்டைகள், கசிவுநீர்க்குட்டைகள், சிறு, நடுத்தர மற்றும் பெரிய தடுப்பணைகள், கிராமக் குட்டைகள், ஊருணிகள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர்வாருதல், கேபியான் தடுப்பணைகள், நீர் செறிவூட்டும் அமைப்புகள், கிணறுகளைச் சீரமைத்தல், அமிழ்வுநீர் குட்டைகள், சுனைநீர் தேக்கத்தொட்டி, நிலத்தடி நீர் நிறுத்தும் சுவர், நீர்பிடிப்பு அகண்ட குழி மற்றும் உதிரி கற்கள் தடுப்பணை அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பண்ணை உற்பத்தி பணிகள் :**

தோட்டக்கலைப் பயிர்கள், வேளாண் காடுகள், மலர்ப்பயிர்கள் மற்றும் தீவனப்புல் வளர்த்தல், பயிர் செயல்விளக்கங்கள், மண்புழு உரம் தயாரித்தல், கோழி வளர்ப்பு, செம்மறியாடு வளர்த்தல் ஆகியவை ஊக்குவிக்கப்படுகின்றன, மேலும், விசைத் தெளிப்பான், கைத்தெளிப்பான், பேட்டரி தெளிப்பான்,

களை எடுக்கும் கருவி, தட்டை வெட்டும் கருவி, தார்ப்பாலின் மற்றும் புல்வெட்டும் கருவி ஆகியவை விநியோகம் செய்யப்படுகின்றன.

**7.1.1.4 சாதனைகள்:**

2021-22 முதல் இதுவரை ரூ.268.99 கோடி நிதி விடுவிக்கப்பட்டு நுழைவுக் கட்டப் பணிகளின் கீழ் 305 பணிகள், இயற்கை வள மேம்பாட்டுப் பணிகளின் கீழ் 6,892 பணிகள், உற்பத்திப் பணிகளின் கீழ் தோட்டக்கலைப் பயிர் வளர்ப்பு, வேளாண் காடு வளர்ப்பு, மலர் சாகுபடி, தீவனப் பயிர் வளர்ப்பு மற்றும் பயிர் செயல் விளக்கம், உயிர்ம வேளாண் இடுபொருள் வழங்குதல் ஆகியவை 8,717 எக்டரிலும் இதர பணிகள் 25,672 எண்களும், வாழ்வாதாரப் பணிகளின் கீழ் 9,368 பணிகளும் மற்றும் நீர்வடிப்பகுதிக் குழுக்களுக்கும், சுய உதவிக் குழுக்களுக்கும், தனிநபர்களுக்கும் 721 பயிற்சிகள் மற்றும் பட்டறிவுப் பயணங்கள் ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் 2025-26 ஆம் **ஆண்டில் மூன்றாம் கட்ட**

**நிலையில் ரூ.17.74 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**மேலும், 2025-26ஆம் ஆண்டில் இத்திட்டம் 30,910 எக்டர் பரப்பில் இராமநாதபுரம், தூத்துக்குடி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி மற்றும் விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களில் கூடுதலாக 53 நீர்வடிப்பகுதிகளில் ரூ.68.00 கோடி மதிப்பீட்டில் இயற்கை வளங்களை மேம்படுத்தி நீர் ஆதாரத்தை வலுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும்.**

**7.1.1.5. சுனை நீர்வடிப்பகுதி மேம்பாடு :**

மலைப்பகுதியில் அமைந்துள்ள சுனைகள், அப்பகுதி மக்கள், கால்நடைகள் வேளாண் பணிகள் ஆகியவற்றுக்கு ஆதாரமாக விளங்குகின்றன. இச்சுனைகளை மீட்டுருவாக்கம் மற்றும் மேம்படுத்துவதன் மூலம் நீர்த் தேவையைக் கணிசமாக நிறைவு செய்யலாம். 2023-24ஆம் ஆண்டு பிரதம மந்திரி நீர்வடிப்பகுதி மேம்பாடு 2.0 திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டத்தில் பென்னாகரம் மற்றும் அரூர்

வட்டாரங்களிலுள்ள பிக்கிலி மற்றும் சிட்டிலிங்கி மலைத் தொகுப்புகளிலுள்ள சுனைகளை மேம்படுத்த ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு இதுவரை ரூ.12.40 கோடி நிதி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மேலும், இத்திட்டம் 2025-26 ஆம் ஆண்டு ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**7.1.2. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின் கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்பு திட்டம்.**

இத்திட்டம், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதி உதவியுடன், நபார்டு வங்கியை தேசிய செயலாக்க நிறுவனமாகவும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையை மாநில செயலாக்க நிறுவனமாகவும் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 15,990 எக்டர் பரப்பளவில் ரூ.23.80 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட செயலாக்க காலம் 2019-20 முதல் 2025-26 வரை ஆகும்.

**7.1.2.1 திட்டத்தின் நோக்கம்** :

மண் மற்றும் நீர் பாதுகாப்பு மேலாண்மை மூலம் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளைத் தகவமைத்தல், பல்வகைப் பயிர்களை ஊக்குவித்தல், மாற்று வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதன் மூலம் நீடித்த நிலையான வாழ்வாதாரங்களை உறுதி செய்தல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப சமுதாயத்தின் திறனை உருவாக்குதல் ஆகும்.

**7.1.2.2. திட்டத்தின் இனங்கள்** :

கிராம மக்களுடன் இணக்கமான உறவை ஏற்படுத்துவதற்காக, நீர்வடிப்பகுதி மக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர்சேமிப்புத் தொட்டிகள், உலர் களங்கள் ஆகியவை நுழைவுக்

கட்டப்பணியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. திட்ட செயலாக்கத்தின் தொடர்ச்சியாக, நீர்வள, மண்வள மேலாண்மை செயல்பாடுகளான தடுப்பணைகள் அமைத்தல், பண்ணைக்குட்டைகள் அமைத்தல், நீர் செறிவூட்டும் அமைப்புகள் ஏற்படுத்துதல் ஆகியனவும், வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில், சிறுகுறு தொழில் செயல்பாடுகளான மண்புழு உரம் தயாரித்தல், வீடுகளில் கோழிவளர்ப்பு ஆகியனவும் ஊக்குவிக்கப்படுகின்றன. பருவநிலை பாதுகாப்பு செயல்பாடுகளான மாற்றுப்பயிர்கள், பருவகால மாற்ற நிலையை தாங்கக்கூடிய பயிர் இரகங்கள், பொது மற்றும் தனியார் நிலங்களில் காடு வளர்த்தல், சூரிய ஒளியால் இயங்கும் நீர் இறைப்பான், உயிரியல் முறையில் மக்கும் உரம் தயாரிப்பு ஆகியன ஊக்குவிக்கப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டுவரை ரூ.11.52 கோடி விடுவிக்கப்பட்டு, ரூ.10.84 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூன்றாம் தவணையாக

ரூ.12.96 கோடி பெறுவதற்கான கருத்துரு ஒன்றிய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**7.2. இணைப்பு முகமையாக செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கான இணைப்பு முகமையாக தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை உருவாக்கப்பட்டு ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்ட செயலாக்கத் துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகின்றது.

**தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் எட்டு திட்டங்கள் :**

விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்,மானாவாரிப் பகுதி மேம்பாடு, மண் நலம் மற்றும் மண்வளம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சி, வேளாண் காடு வளர்ப்பு, புகையிலைப் பயிருக்கு மாற்றாக

தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி, வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கம் மற்றும் துளி நீரில் அதிக பயிர்.

**பிரதம மந்திரியின் வேளாண் பாசனத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இரண்டு திட்டங்கள்**: வயல்தோறும் நீர்ப்பாசனம் **மற்றும்** துரிதப்படுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டம்.

மேற்காணும் திட்டங்கள் 2008ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஒன்றிய அரசால் ஒப்பளிக்கப்பட்டு மாநில அரசின் பல்வேறு திட்ட செயலாக்கத் துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

# கோரிக்கை 05 வேளாண்மை – உழவர் நலத்துறை

## 2025–2026-இல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

## 2025 -2026 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 15,225,93,57 | 127,00,85 | 1,50,01 | 15,354,44,43 |
| மொத்த தொகை சாட்டியது | 56 | --- | --- | 56 |

### நிகர செலவு

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | | 2023 -2024 | 2024 – 2025 | 2024 – 2025 | 2025-2026 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2059 | பொதுப்பணிகள் | 3,86,67 | 4,34,05 | 4,33,13 | 4,34,05 |
| 2401 | பயிர் வளர்ப்பு | 10,937,09,95 | 13,444,20,60 | 11,965,74,63 | 14,008,51,90 |
| 2402 | மண்வள, நீர்வளப் பாதுகாப்பு | 94,33,50 | 90,20,43 | 105,14,67 | 106,34,54 |

| கணக்குத் தலைப்பு | | 2023 -2024 | 2024 – 2025 | 2024 – 2025 | 2025-2026 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2408 | உணவு சேமிப்பு – கிடங்கு வசதி | ---- | 2 | 2 | 50,00,02 |
| 2415 | வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் | 648,30,31 | 680,55,29 | 706,61,96 | 724,88,84 |
| 2435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 259,72,27 | 273,62,69 | 280,40,75 | 274,04,85 |
| 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 134,23,67 | 86,07,18 | 78,50,02 | 30,50,02 |
| 2551 | மலைப் பகுதிகள் | 56,54 | 60,54 | 47,66 | 63,64 |
| 2702 | சிறுபாசனம் | 5,68,06 | 6,17,81 | 5,53,22 | 6,62,70 |
| 2705 | பாசனப் பகுதி மேம்பாடு | ---- | 1 | 1 | 1 |
| 2810 | புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | ----- | 1 | -- | --- |
| 3054 | சாலைகளும் பாலங்களும் | 15,20 | ---- | 1 | 1 |

| கணக்குத் தலைப்பு | | 2023-2024 | 2024 – 2025 | 2024 – 2025 | 2025-2026 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 3451 | தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 16,15,04 | 18,43,66 | 18,56,36 | 20,03,55 |
| 4401 | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 169,66,52 | 111,92,60 | 63,33,31 | 104,82,54 |
| 4402 | மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 21,46,38 | 7,22,67 | 9,30,33 | 7,18,28 |
| 4415 | வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி குறித்த மூலதனச் செலவு | 10,00,00 | 15,00,00 | 31,57,67 | 15,00,00 |
| 4435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 27,22,99 | 10,48,86 | 25,55,08 | 3 |
| 6401 | பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | 125,00,00 | 1 | 120,00,00 | --- |
| 6425 | கூட்டுறவு குறித்த கடன்கள் | 155,61,34 | --- | 109,70,42 | ----- |

| கணக்குத் தலைப்பு | | 2023 -2024 | 2024 – 2025 | 2024 – 2025 | 2025-2026 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 6435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்களுக்கான கடன்கள் | 37,43,87 | 12,67,15 | 12,68,82 | 1 |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | 2,77,33 | 1,00,00 | 2,18,32 | 1,50,00 |

# கோரிக்கை 05 வேளாண்மை – உழவர் நலத்துறை

## 2025 – 2026 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

**(ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)**

| வ. எண் | துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 005 01 | வேளாண்மை – உழவர் நலத்துறை - தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 20,03,55 | ---- | 1,50,00 | 21,53,55 |
| 2. | 005 02 | வேளாண்மை இயக்ககம் | சாட்டியது | 3 | ---- | ---- | 3 |
| | | | அனுமதித்தது | 11,570,75,30 | 104,82,54 | ---- | 11,675,57,84 |

| வ. எண் | துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 3. | 005 03 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம் | அனுமதித்தது | 245,53,19 | 3 | 1 | 245,53,23 |
| 4. | 005 04 | விதைச் சான்று இயக்ககம் | அனுமதித்தது | 73,86,79 | ---- | ---- | 73,86,79 |
| 5. | 005 05 | தோட்டக்கலை, மலைத் தோட்டப் பயிர்கள் இயக்ககம் | அனுமதித்தது | 1,665,16,47 | ----- | ----- | 1,665,16,47 |
| 6. | 005 06 | வேளாண்மைப் பொறியியல் துறை | சாட்டியது | 53 | ---- | ---- | 53 |
| | | | அனுமதித்தது | 702,50,68 | 7,18,28 | ---- | 709,68,96 |
| 7. | 005 07 | வேளாண் பொறியியல் பணிகள் | அனுமதித்தது | 82,27 | --- | ---- | 82,27 |
| 8. | 005 08 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் | அனுமதித்தது | 693,84,19 | 15,00,00 | ---- | 708,84,19 |

| வ. எண் | துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 9. | 005 09 | **அங்ககச் சான்றளிப்பு இயக்ககம்** | அனுமதித்தது | 1,75,25 | ---- | ---- | 1,75,25 |
| 10. | 005 10 | **சர்க்கரை இயக்ககம்** | அனுமதித்தது | 251,65,88 | ----- | ---- | 251,65,88 |
| **மொத்தம்** | | | சாட்டியது | **56** | **----** | **----** | **56** |
| | | | அனுமதித்தது | **15,225,93,57** | **127,00,85** | **1,50,01** | **15,354,44,43** |

## நிறைவுரை

வேளாண்மையில் புரட்சிகள் செய்திடவும் மாநிலத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திடவும், உழவர்கள் நலனைக் காத்திடவும், முதன் முறையாக தமிழ்நாட்டில் வேளாண்மை-உழவர் நலத்துறையில், வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையானது 2021-22 ஆம் ஆண்டில் சமர்ப்பித்து வரலாற்றுச் சாதனை நிகழ்த்தப்பட்டு, தொடர்ந்து 2025-26 ஆம் ஆண்டிலும் ஐந்தாவது முறையாக வேளாண்மை நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் கீழ் வேளாண்மை-உழவர் நலத்துறையின் சிறப்பான செயல்பாடுகளின் காரணமாக பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளால் அதிக அளவில் பயிர் இழப்புகள் ஏற்பட்ட போதும், 2021-22 முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை 346 இலட்சத்து 38 ஆயிரம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி அடையப்பட்டுள்ளது.

2025-26 ஆம் நிதியாண்டில், உழவர்களுக்கு உதவிக்கரம் நீட்டிட முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள், வேளாண்மை செழித்திட கோடை உழவுக்கு மானியம், மலைவாழ் உழவர் வாழ்வை மேம்படுத்த மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டம், உழவர்கள் பயன்பெற உழவரைத் தேடி வேளாண்மை-உழவர் நலத்துறைத் திட்டம், மகசூல் பெருக மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம், தேவையில் தன்னிறைவு அடைய எண்ணெய்வித்துகள் இயக்கம், ஊட்டச்சத்தை உறுதி செய்திட ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம், விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்கல், மண்வளம் காத்திட மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், கடைமடை உழவர்களுக்கும் தடையற்ற பாசனநீர் கிடைக்க புதிய பாசனத் திட்டங்கள், வேளாண் விளைபொருட்களின் மதிப்புக்கூட்டுதலை ஊக்குவிக்க 100 மதிப்புக்கூட்டுதல் மையங்கள் அமைத்தல் போன்ற

பல்வேறு திட்டங்கள் விவசாயிகள் நலனுக்காக அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளன.

இது தவிர, உயிர்ம வேளாண்மை உயிர் வேளாண்மையாக மாறி வரும் காலத்தில், காலத்திற்கேற்ப உயிர்ம வேளாண்மையை உயர்த்த, உயிர்ம வேளாண் தொகுப்புகள், முழுமானியத்தில் உயிர்ம வேளாண் சான்றிதழ்கள், உயிர்ம வேளாண்மைக்கு ஊக்கத்தொகைகள் என அதற்கென தனித்திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளன.

மேலும், உழவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் மட்டுமல்லாது இயற்கை பேரிடர்களின்போது துணை நிற்க மாநில பேரிடர் நிவாரண நிதியும் மற்றும் பயிரிடும் உழவரைப் பாதுகாக்க பயிர் காப்பீட்டுத் திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. உழவர்களுக்கு கைகொடுக்கும் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு கைகொடுத்திட அவர்களுக்கு

வழங்கப்படும் இழப்பீடு மற்றும் நிதியுதவிகள் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன.

**“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாருந்**
**தொழுதுண்டு பின்செல்வா ரென்றேயித் தொல்லுலகில்**
**எழுதுண்ட மறையன்றோ இவருடனே இயலுமிது**
**பழுதுண்டோ கடல்சூழ்ந்த பாரிடத்திற் பிறந்தோர்க்கே”**

என ஏரெழுபது நூல் போற்றும் வேளாண் பெருங்குடி மக்களின் நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசால் 2025-26 ஆம் ஆண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையிலும் உழவர்கள் வாழ்வில் உயரம் பல தொட பல்வேறு சிறப்பான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் அனைத்தையும் சிறப்பாகச் செயல்படுத்தி திட்டப் பயன்கள் உழவர்களைச் சென்றடைய முழுமுனைப்புடன் இத்துறை செயல்படும்.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**
**வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர்**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை 15.03.2025 அன்று 2025-26ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கும்முன் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் திரு. வ.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் துறைத்தலைவர்கள் உள்ளனர்.

## கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்



முட்புதர்களை அகற்றுதல்



ஆழ்துளை கிணறு அமைத்தல்



நுண்ணீர்ப்பாசனம் அமைத்தல்



பழமரக்கன்றுகள் நடவு

# முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மண்ணுயிர் காப்போம் திட்டம்






மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 26.02.2025 அன்று சேலம் மாவட்டத்தில் வேளாண்மை தனி நிதிநிலை அறிக்கை 2025-26 தயாரிப்பது தொடர்பாக விவசாயிகள் கருத்துக்கேட்பு கூட்டத்தை தலைமையேற்று நடத்தினார். உடன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உள்ளனர்.

## வேளாண் பயிர் சார்ந்த திட்டங்கள்


மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்


குழித்தட்டு நடவு துவரை சாகுபடி


நெல் இயந்திர நடவு


பருத்தி உற்பத்தி பெருக்குத் திட்டம்


எண்ணெய்வித்துகள் இயக்கம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 07.10.2024 அன்று சென்னை டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்காவினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 07.10.2024 அன்று திறக்கப்பட்ட
கலைஞர் நூற்றாண்டு பூங்காவின் எழில்மிகு தோற்றம்




4வது சென்னை மலர்க்காட்சி - செம்மொழிப் பூங்கா




ஏற்காடு மலர்க்காட்சி - சேலம்



தேசிய தோட்டக்கலை இயக்கம் சாமந்தி பரப்பு
விரிவாக்கம் - கிருஷ்ணகிரி மாவட்டம்



தேசிய தோட்டக்கலை இயக்கம் - கத்தரி பரப்பு
விரிவாக்கம் - விழுப்புரம் மாவட்டம்



தேசிய தோட்டக்கலை இயக்கம் - சம்பங்கி மலர்கள் பரப்பு
விரிவாக்கம் - அரியலூர் மாவட்டம்



பிரதம மந்திரியின் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் -
அத்தி பரப்பு விரிவாக்கம் - கடலூர் மாவட்டம்



மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் - வெண்டை பரப்பு விரிவாக்கம் - நாமக்கல் மாவட்டம்



மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் - மருந்து கூர்க்கன் பரப்பு விரிவாக்கம் - நாமக்கல் மாவட்டம்



தேசிய தோட்டக்கலை இயக்கம் - மிளகாய் பரப்பு விரிவாக்கம் - கடலூர் மாவட்டம்



தேசிய தோட்டக்கலை இயக்கம் - செண்டுமல்லி பரப்பு விரிவாக்கம் - கிருஷ்ணகிரி மாவட்டம்



தேசிய தோட்டக்கலை இயக்கம் - முட்டைகோஸ் பரப்பு விரிவாக்கம் - நீலகிரி மாவட்டம்



தேசிய தோட்டக்கலை இயக்கம் - பசுமைக்குடில் கொய்மலர்கள் சாகுபடி - கிருஷ்ணகிரி மாவட்டம்



தேசிய தோட்டக்கலை இயக்கம் - நடமாடும் விற்பனை வண்டி கிருஷ்ணகிரி மாவட்டம்



தேசிய தோட்டக்கலை இயக்கம் - பசுமைக்குடில் வெள்ளரி சாகுபடி - கிருஷ்ணகிரி மாவட்டம்



டிராக்டர் ஓட்டுவதற்கான பாவனை பயிற்சி (simultor)
சாதனத்தின் மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு
திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்



இரட்டைக் கட்டுப்பாட்டு வசதி கொண்ட டிராக்டர்
மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு டிராக்டர்
ஓட்டுநர் பயிற்சி வழங்குதல்



விவசாயிகளுக்கு பண்ணைக் குட்டைகள் 100 சதவீத மானியத்தில் அமைத்தல்



வேளாண்மைப் பொறியியல் துறையால் புதிய மின்மோட்டார் பம்புசெட்டுகள் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்குதல்



தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக வேளாண் நிலங்களில் படிந்துள்ள மணல் படிவங்களை அகற்றுதல்



வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு குறித்த மாவட்ட அளவிலான முகாம்



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு
ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள்
கலைஞர் திட்டத்தின் கீழ் மானியத்தில் அமைத்தல்



வேளாண் சங்கமத்தில் காட்சிப்படுத்தப்பட்ட
வேளாண் இயந்திரங்கள்



கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டு திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள உலர்களத்துடன் கூடிய தரம் பிரிப்புக்கூடம்




மதுரை மாவட்டம், ஸ்ரீ ஆவுடைய விநாயகர் கூட்டுப்பண்ணைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கான மேலாண்மைத் தொகை ரூ.9,26,000/- மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 25.06.2022 அன்று வழங்கப்பட்டது.





நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் சிறுதானியங்களுக்கான பதப்படுத்தும் மையம் ரூ. 35 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் எட்டிவயலில் மிளகாய் வணிக வளாகம் அமைக்கப்பட்டு விவசாயிகள் பயன்பாட்டில் உள்ளது.



கல்வியில் சிறந்து விளங்கிய மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கிய மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்



மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் தலைமையில் மண்டல வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம், விருதுநகர்




பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட புதிய
நிலக்கடலை இரகம் வி.ஆர்.ஐ.-10



மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை
அமைச்சர் ஆராய்ச்சித் திடல்களைப் பார்வையிடல்

# தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை செயல்பாடுகள்



கிராமக்குளம் தூர்வாருதல்
செங்குளம் - விருதுநகர் மாவட்டம்



ஊருணி தூர்வாருதல்
வேடப்பட்டி - தூத்துக்குடி மாவட்டம்



தடுப்பணை
ஓலைப்பாடி - பெரம்பலூர் மாவட்டம்



தோட்டக்கலைப்பயிர்கள் - முருங்கை
காரியாம்பட்டி - திண்டுக்கல் மாவட்டம்